# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு 12.








புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 மாசித் திங்கள் 17-ம் நாள் (28-2-1965) ஞாயிற்றுக்கிழமை ஷவ்வால் 25 | இதழ் 40


# சவாலை ஏற்றார்

## 'ஜி.ஜி.யின் அநீதிகளை நிரூபிக்கத் தயார்'

—செ. இராசதுரை

"திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மலை நாட்டுத் தோட்டத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு இழைத்த அநீதிகளை வரிசைக் கிரமமாக எடுத்துக் கூறி அவற்றை நிரூபிக்க நாம் என்றும் தயாராக இருக்கின்றோம். காலம் தாழ்ந்தாது எங்கு வேண்டுமானாலும் பொது மேடை அமையுங்கள். நாம் திரு. பொன்னம்பலத்தின் முன் தோன்றி சகல குற்றச் சாட்டுகளையும் நிரூபிக்கிறோம்" என்று திரு. இராசதுரை கூறி, திரு. பொன்னம்பலம் விடுத்த சவாலை ஏற்றுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், தம் மீது மட்டக்களப்பு முன்னாள் பிரதிநிதியான திரு. செ. இராசதுரை சுமத்தியுள்ள குற்றச் சாட்டுகளை பகிரங்கமாக, தம் முன்னிலையில் நிரூபிக்க வருமாறு சவால் விடுத்திருந்தார். அச்சவாலினை திரு. செ. இராசதுரை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார், ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டு அதன் மூலம் திரு பொன்னம்பலத்தின் சவாலை ஏற்றுள்ளார், திரு. செ. இராசதுரை.

மட்டக்களப்பிலோ, அன்றி இலங்கையின் வேறு எந்தப் பாகத்திலோ பொது மேடை அமைத்தால் திரு. பொன்னம்பலத்தின் மீது தாம் சுமத்திய குற்றச் சாட்டுகள் அனைத்தையும் நிரூபிக்கத் தயார் என்று திரு. இராசதுரை நமது நிருபரிடம் சொன்னார். கூடிய சீக்கிரம் பொது மேடை அமைத்தால் தாம் தயங்காமல் மேடை ஏறத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

### 22 கேள்விகள்

கடந்த காலங்களில் திரு. பொன்னம்பலம் தமிழ் பேசும் சமுதாயத்துக்கு இழைத்த துரோகங்களைத் தொகுத்து 22 கேள்விகள் மூலம் ஒரு பிரசுரம் மட்டக்களப்பு, கல்குடா, பட்டிருப்புத் தொகுதி வாக்காளர்கள் சார்பில் விநியோகிக்கப் பட்டுள்ளது.

## சமசமாஜ வேட்பாளரின் தனிச் சிங்கள மோகம்

## வரவுப் பதிவேட்டிலும் சிங்களத்தில் ஒப்பமிட்டார்

சமசமாசக்கட்சி வேட்பாளராக கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடும் திரு. துரைராசா அரசாங்க சேவையில் இருக்கும்பொழுது சிங்களம் மட்டும் அமுலுக்கு தீவிர ஆதரவு கொடுத்தவர் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளன. இவர் தமது அலுவலக வரவுப் பதிவேட்டில் தினமும் சிங்களத்திலேயே கையொப்பமிட்டுள்ளாராம்.

கோப்பாய்த் தொகுதியில் சமசமாசக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் திரு. துரைராசா பதவியிலிருந்த காலத்தில் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடாத்துவதற்கு ஆதரவு கொடுத்த குறிப்பிட்ட ஒருசில தமிழ் அரசாங்க ஊழியர்களில் ஒருவர் என்று நம்பகமான வட்டாரங்களிலிருந்து செய்தி கிடைத்துள்ளது. இவர் இயன்றவரை சிங்கள மொழியிற் கடமையாற்றவும் பின்நிற்கவில்லையாம்.

இவர் பதவியிலிருந்து விலகுவதற்கு சிறிது காலத்திற்கு முன்னர் நடைபெற்ற ஒரு அரசாங்க அதிகாரியின் பிரிவுபசார வைபவத்தில் சிங்கள மொழியில் சொற்பொழிவு நிகழ்த்தியதாகவும் தெரிகிறது.

அரசாங்க சேவையிலுள்ள தமிழ் எழுதுவினைஞர்கள் தனித் தொழிற் சங்கம் அமைத்து உரிமைக்காகப் போராடுகையில், அவ்வணியிற் சேராது நின்ற ஒரு சில தமிழ் ஊழியர்களில் திரு. துரைராசாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுத் தலைவர்களுக்கு மட்டுநகரளித்த மகத்தான வரவேற்பு

மட்டக்களப்பு மாநகரம் விழாக்கோலம் பூண்டு தமிழரசுத் தந்தையை வரவேற்றது. பூரண கும்பம் வைத்தும் பூ மாலைகளைச் சூடியும் அதிர்வேட்டுக்களைத் தீர்த்தும் திரு. செல்வநாயகம் அவர்களை மட்டக்களப்பு மக்கள் வரவேற்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தமிழரசுத் தந்தை திரு செல்வநாயகம் புதன்கிழமை அன்று மாலை திருகோணமலையிலிருந்து மோட்டார் வண்டிமூலம் கல்குடா தொகுதியூடாக மட்டக்களப்பு நோக்கிச் சென்றார். தமிழ் பேசும் மக்கள் தெருக்களின் இருமருங்கும் நின்று தந்தையை வரவேற்று வழியனுப்பி வைத்த காட்சியைக்கண்டு உள்ளுருகாதார் இரார்.

தாய்க்குலம் தந்தையிடம் தளர்ந்த மேனியையும் தளரா இரும்பு நெஞ்சத்தையும் கண்டு கண்ணீர் மல்கி நின்றது. தமிழ்க் காவலனைக் கண்ட இளைஞர்கள் விம்மும் தோள்களுடன் விர வாழ்த்தொலியை வானளாவ எழுப்பினர்.

வாயில்கள்தோறும் பூரண கும்பங்கள் வைத்து தலைவரை வரவேற்றனர் தமிழ் பேசும் பெருங்குடியினர்.

### தளபதி வந்தார்

மட்டக்களப்பு பட்டினத்தை அடைந்த தலைவரின் கழுத்தினை மூடிய மலர் மாலைகள் கலைக்கற்றுக்கிடந்தன. கூப்பிய கரங்களுடன் பவனிவந்த தலைவர் செல்

(9-ம் பக்கம் பார்க்க)

## "துரோகியே பேசாதே!"

'தமிழ் பேசும் இனத்தைக்காட்டிக் கொடுத்த துரோகியே பேசாதே' என்று திரு. பொன்னம்பலம் பேச எழுந்த போது ஒரு குரல் எழுந்தது. தொடர்ந்து பல குரல்கள் எழுந்து திரு. பொன்னம்பலத்தின் வாயிலிருந்து ஒரு வார்த்தைதானும், உதிர வொட்டாமல் செய்து விட்டன.

கல்குடா, மட்டக்களப்புத் தொகுதிகளில் தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவு தேடும் பொருட்டு பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளச் சென்ற திரு. பொன்னம்பலத்தை இத்தகைய எதிர்ப்பொலிகளே எதிர் கொண்டழைத்தன. சித்தாண்டியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் திரு. பொன்னம்பலத்தால் உரை நிகழ்த்த முடியாது போய் விட்டது.


## உங்களுக்குத் தெரியுமா?




சுதந்திரன் அச்சகம்,

194 ஏ, பண்டாரநாயக்க வீதி.

கொழும்பு-12.

தொலைபேசி : 3411 தந்தி : சுதந்திரன் த. பெ. 1183




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கணேசனைச் சிலையாக்கி அவனை நடு நடுங்க வைத்த செய்தி உண்மையில் கொடூரமான செய்தி தான்.

'மனிதன் விலங்கினத்தை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றான்' என்று யாரோ ஒரு ஞானி சொன்ன கூற்றை மெய்ப்பிக்கும் செய்தியாக அந்தப் பத்திரிகைச் செய்தி காணப்பட்டது

'அறிவை விட உணர்ச்சி அதிக சக்தியும், வேகமும் கொண்டது' என்ற முடிவுக்குக் கணேசன் மெல்ல மெல்ல முன்னேறுவதற்குப் பெருமளவு இந்தப் பத்திரிகைச் செய்தி உறுதுணை செய்ததெனலாம்.

பின்னால் பல தடவைகளில் அவன் தவறியபோதெல்லாம், இந்தச் செய்தி முன் வந்து அவனுக்குத் தேறுதலும், ஆறுதலும் சொல்லிக் கொண்டே இருந்தது.

சுருக்கமாகச் சொல்வதானால், இன்று கணேசனை நடு நடுங்க வைத்த இதே பத்திரிகைச் செய்தியைக் 'குமக்' கொடுத்துத்தான் பின்னால் பல சந்தர்ப்பங்களில் தன் மனத்தைத் தேற்றி வந்திருக்கின்றான் அவன்.

இந்தச் செய்தியை வைத்துக்கொண்டு கணேசனும், குமரனும் பல மணி நேரங்கள் கொள்கைப் பிரசாரங்கள் செய்தனர்.

சர்ச்சைகள், நடு நடுக்கங்கள், திகைப்புக்கள் இவையெல்லாவற்றிக்கும் காலாக இருந்த அந்தப் பத்திரிகைச் செய்தி இதுதான்!

'மகளின் கற்பைத் தந்தையே பறித்த குரூரம்' என்ற கொட்டை யெழுத்துத் தலைப்போடு வெளியாகியிருந்த அந்தச் செய்தியில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

17 வயது நிரம்பப் பெற்ற மல்லிகா என்ற இளம் பெண் நீதிமன்றத்தில் கூறியதாவது:

'சின்ன வயதிலேயே என் அம்மா இறந்து விட்டாள். என் தந்தையாரின் வளர்ப்பிலேயே நானும், என் தங்கையும் வளர்ந்து வந்தோம். சம்பவம் நடந்த தினத்தன்று இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு நானும் என் தங்கையும் வீட்டுக்குள் படுத்திருந்தோம். நித்திரையின் போது யாரோ என்னை அணைப்பதுபோல் இருக்கவே கண் விழித்துப் பார்த்தேன். என் தந்தை தகாத முறையில் என்னுடன் நடந்து கொண்டார். அதன் பலனாக நான் கருவுற்றேன்......' என்று அந்தப் பெண்ணின் வாக்கு மூலம் நீண்டு கொண்டு போகின்றது.

செய்தி அருவருப்பாகவும் தரக் குறைவுடையதாகவும் இருந்தாலும், ஒரு வித 'சுவை' உணர்வுடன் விழுந்தடித்து வாசித்து முடித்தான் கணேசன்! செய்தியைப் படித்து முடித்ததும் அவனுடைய முகத்தில் ஆழமான சிந்தனை சிலிர்த்து ஆட்சி புரிந்தது. கணேசனையே கவனித்துக் கொண்டு நின்ற குமரன் அவனிடம் கேட்டான்! 'கணேசா! என்ன இப்படி ஒரேயடியில் சிந்தனை வயப்பட்டுவிட்டாய்?'

கணேசன் சொன்னான்! 'நண்பா! இந்த உலகில் மனிதன் 'பக்குவம்' பெறவேண்டுமென்றால், நெஞ்சை உருக்க வல்ல அசாத்திய சம்பவம் ஏதாயினும் நிகழவேண்டும். என்னைப் பொறுத்தவரையில் இந்தச் செய்தி மிகவும் கொடுமைமிக்கதாகவும், அநாகரிகமுடையதாகவும் படுகின்றது. ஆனபடியால்......'

'ஆனபடியால் நீ 'பக்குவம்' அடைந்து விட்டாய் என்று சொல்ல வருகின்றாய். இல்லையா?'

'அதைத்தான் சொல்ல நினைத்தேன். உண்மையாகச் சொல்கின்றேன். இந்த உலகில் எந்த விதமான செய்திகளையும் தாங்கிக்கொள்ளும் வல்லமையை இந்தச்செய்தி எனக்குத் தந்திருக்கின்றது!'

குமரன் சிரித்துக் கொண்டே சொன்னான்: 'உன்னுடைய மனத்தின் 'படி' எந்த அளவில் இருக்கின்றதென்பதைத்தான் இந்தச் 'சுடலை ஞானம்' காட்டுகின்றது! வள்ளுவன் சொன்ன அஞ்சுவது அஞ்சாமை மட்டும்தான் பேதமை என்பதல்ல; அஞ்சக் கூடாதவற்றிற்கு அஞ்சுவதும் பேதமைதான்!'

'அப்படியானால், இந்தப் பத்திரிகைச் செய்தி, அஞ்சி நடுங்க வேண்டிய ஒன்றல்ல என்கின்றாயா?'

'அப்படி நான் சொல்லவில்லை. பலவீனமுள்ள அறிவை நம்பிக் கொண்டு இந்த உலகில் மனிதன் வகுத்திருக்கின்ற சட்ட திட்டங்களையும், கட்டுப் பாடுகளையும் பெருமளவில் மதித்து—அதற்குத் தலை வணங்கி—அது அஞ்சுவதற்குரிய ஒன்றுதான் என்று கருதி மதிப்பளித்து வருவது பேதமை எனகின்றேன் நான்!'

குமரனின் வாதத்தைக் கணேசனால் மடக்க முடியாது போனாலும், அதை அப்படியே ஏற்றுக் கொள்ளவும் அவன் தயாராக இல்லை.

"ஒற்றையடிப் பாதையில் நடக்கும் சனங்களில் பெரும் பாலோர் பாதையைத் தொடர்ந்தே சென்றாலும், சிலர் ஓரளவு தடம் விலகி நடப்பதனால் பாதை அகலுவதும், பிளவு படுவதும் நிகழுகின்றன!"

—ராஜாஜி

## 7. உணர்ச்சியின் சவால்

'என்ன இருந்தாலும் உன் விளக்கத்தை என்னால் ஏற்க முடியவில்லை'

'அப்படியல்ல; என் விளக்கம் உனக்கு நன்கு புரிகின்றது. அதை ஏற்பதற்கு வேண்டிய தைரியம்தான் உன்னிடம் இல்லை.'

'முடிவாக நீ என்னதான் சொல்கின்றாய்?'

'அடித்தளம் பலமற்ற சமுதாய அமைப்பை இந்தப் பத்திரிகைச் செய்தி 'கிடுகிடு'க்கச் செய்திருக்கின்றது! அறிவுக்கு உணர்ச்சி சவால் விட்டிருக்கின்றது!'

'அப்படியானால், விலங்கு உணர்வுடன் மனித உணர்வை எடை போடுகின்றாய் என்று சொல்'

'அப்படி வா இடத்துக்கு! உன் மனிதக் கோட்பாட்டின்படி, கள் குடித்தலும், பொய் சொல்வதும் பாபம் தானே? அதே மனிதக் கோட்பாட்டின்படி பிறரை வஞ்சித்தலும், தன் மனச் சாட்சியையே வஞ்சித்தலும் கொடிய பாவ கிருத்தியங்கள் தானே? வன விலங்குகளில் எந்த ஒரு மிருகமாவது மேற் கூறிய பாவகாரியங்களைச் செய்வதாக நாம் காணவில்லை. பகுத்தறிவையும், சிரிப்பையும் காட்டி, 'இவையிரண்டும் மிருகத்திடம் இல்லை. எனவே நான் உயர்ந்தவன்' என்று ஆர்ப்பரிக்கும் மனிதன் அத்தனை பாவகாரியங்களையும் செய்கின்றான்! இதைக் கேட்பார் இல்லை.'

குமரனின் ஆவேசமான வாதத்தினைச் செவிமடுத்துக் கொண்டு வந்த கணேசன், "அப்போ இன்று முற்றாக என்னுடைய வாயைத் திறக்கவே நீ விடமாட்டாயா?' என்று வாஞ்சையோடு கேட்டு வைத்தான்.

'அப்படிச் சொல்ல முடியுமா? உன்னுடைய சரோஜாவின் அழகிய தோற்றம் தான் அதற்கு அனுமதி தருமா? அப்படித்தான் நான் உன்னுடைய வாயைக்கட்டி வைத்தாலும், அவளைக் கண்டதும் அந்தக் கட்டுக்களையெல்லாம் அறுத்தெறிந்து விட்டு வாயைப் பிளந்து பல்லை இழிக்காமல் விட்டு விடுவாயா? அப்படிச் செய்வதற்கு உன்னுடைய அறிவு தடை போட்டாலும் உணர்ச்சி சும்மா இருந்து விடுமா?' என்று கேட்டு விட்டு, கணேசனின் கழுத்துக்குள் தன் கையைப் போட்டுப் பாசத்தோடு இறுக்கிக் கொண்டு நடந்தான் குமரன். காலை உணவை உட்கொள்ளும் போதும், வகுப்பில் பாடத்தைக் கவனிக்கும் போதும், கிறல் விழுந்த இசைத்தட்டுப் போல், அந்தப் பத்திரிகைச் செய்தியும், குமரன் புரிந்த வாதங்களும் இரைச்சல் போட்டுக் கொண்டேயிருந்தன.

குமரனோடு என்னதான் அவன் எதிர்வாதம் செய்தாலும், அவனுடைய உள்ளுணர்வு அந்தப் பத்திரிகைச் செய்தியை முற்றாக ஒதுக்கி விடவும் துணியவில்லை!

பாலுணர்வு பற்றிய அன்றையப் பாடத்தில் உபாதத்தியாயர் உபந்நியாசம் செய்தார்.

'தாய் மைந்தனிடம் பொழியும் பாசத்துக்கும், தந்தை மகளிடம் கொட்டும் அன்புக்கும், அண்ணன் தங்கையிடம் காட்டும் பாசத்துக்கும், இப்படியே மனுக்குலம் ஒன்றையொன்று கவர்ந்திழுத்து இயங்குவதற்கும், தோன்றியும், தோன்றுமலும் இயங்கும் பாலுணர்வேகாரணம்!'

பிறிதொரு சமயம் கணேசனுடைய வாழ்வில் குறுக்கிட்டு, அதனுடன் பிணைந்து சங்கமித்த தாமரகுமாரி என்ற சங்கீத வீணையில் ஒலித்த அபசுரத்தைக் கணேசன் சிறிதும் அருவருப்பின்றித் தைரியமாக ஏற்றுக் கொண்டதற்கு, இத்தகைய சம்பவங்களால் அவன் உள்ளம் 'பக்குவ'ப் பட்டிருந்தது தான் காரணமோ!

கங்கையில் ஈரமூறக் குளித்து விட்டு வந்துகொண்டிருந்த கணேசனை, பழைய எண்ண அலைகள் வழியெல்லாம் அவனை மேலும் குளிப்பாட்டிக் கொண்டே வந்தது.

இந்த நினைவு அலைகளால் திக்கு முக்காடிக் கொண்டு வந்த கணேசனுக்கு மேலும் ஒரு திக்கு முக்காடல் காத்திருந்தது அவனுடைய பாடசாலை இருப்பிடத்தில்.

உத்தியோக அலுவலுக்காகப் பட்டணம் சென்றிருந்த தலைமையாசிரியரும், உதவியாசிரியரும் வந்து விட்டிருந்தார்கள்.

கூடவே, காலையில் அவன் ஏற்றிக் கொண்டு வந்த ஜீப்பும் வந்திருந்தது!

வளரும்

## அன்னையின் புகழ்பாடு தோழி!

—காசி. ஆனந்தன்—

நானோர் கனாக்கண்டேன் தோழி! தமிழ்
  நாட்டின் விடுதலை கேட்கப் பிறந்தவர்
தானை நடத்தினார் தோழி! —அங்கு
  சட்டம் உடைந்தது! பகைவர் தலைகள்
வானில் பறந்தன தோழி!—இந்த
  வையம் குருதியில் தோய்ந்து கிடந்தது!
மானத்தின் வேகமோ தோழி?—தமிழ்
  மாந்தரின் வரத்தை என்னென்று சொல்வேன்?

ஈழத்தில் சிங்களம் என்றார்!—தமிழ்
  இல்லத்தில் இந்திதான் என்றும் குலைத்தார்!
வேழத்தை வென்றவர் நாட்டில்—அந்த
  வீணர்கள் ஏன் வந்து மோதினார் தோழி?
கூழுக்கு வழியற்றுப் போனோம்—என்றால்
  குலவீரம் கூடவா இல்லாமல் போனோம்?
பாழுக்கு வந்தார்கள் தோழி! வந்த
  பகைவரை வணங்காத தமிழ்—நாடு வாழி!

வீண் சண்டை போட்டதும் இல்லை!—தமிழன்
  வீணாக வந்ததை விட்டதும் இல்லை!
தூணொன்று சாய்ந்தாலும் சாயும்! தமிழர்
  தோள் வீரம் இதுவரை சாய்ந்ததே இல்லை!
ஆணென்று வாழ்ந்தவர் எல்லாம்—இங்கே
  ஆமைபோல் அடிமைபோல் உயிர்வாழ்ந்ததில்லை!
பூணுக போர்க்கோலம் பூண்டார்! —பகைவர்
  புலியோடு மோதினார்...என்செய்வோம் தோழி?

காதலர் வரவில்லைத் தோழி!—அவர்
  களத்திலே இருக்கட்டும் இங்கென்ன வேலை?
மோதட்டும் பகைவர்கள் முன்னால்!—தோழி!
  முத்தமும் சத்தமும் வெற்றிக்குப் பின்னால்!
மாதர்கள் வீரமே பெரிதாம்!—அவர்
  மாண்டாலும் போரிலே மாளட்டும் என்பேன்
[illegible]—தமிழ்
  [illegible] வாழட்டும் நாடு!

'சுதந்திரன்'
புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-50 |

நிர்வாகி
'சுதந்திரன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எஸ். பொன்முடி,
யாழ்ப்பாணம்

கே: திரு. பொன்னம்பலம் மட்டும் பாராளுமன்றம் சென்றால் தமிழரின் துன்பங்களை போக்கிடுவார் என்று த. கா. அன்பர் சொல்கிறாரே!

ப: அவர் சுமார் கால் நூற்றாண்டு காலம் பாராளுமன்ற ஆசனத்தைச் சூடேற்றிக் கொண்டிருந்தாரே அப்போது என்னென்ன துன்பங்களை அவர் நீக்கினாரென்று அதே அன்பரிடம் கேளுங்கள்! குட்டு உடைந்துவிடும்!

ஃ

இ. சண்முகநாதன்,
டிக்கோயா

கே: இந்தியத் தமிழர் பிரச்சினையில் தாம் தவறு செய்திருந்தால் அதை நிரூபிக்க வரும்படி திருவாளர் மதிநுட்பம் தந்தை செல்வாவுக்கு சவால் விட்டிருந்தாரே! அவர் மலை நாட்டிற்கு வந்து ஒரு தொழிலாளியுடன் வாதிட்டு நிரூபிக்க முன் வருவாரா?

ப: ஐயையோ! தொழிலாளியிடம் வரவா! தொழிலாளி என்றாலே குலை நடுக்க மெடுக்கிறதே!

ஃ

சி. எஸ். மணியம்,
காரைநகர்

கே: திரு. பொன்னம்பலம் தமிழன் உரிமைகளைப் பெற 2 வருடங்கள் கேட்டார். ஆனால் இங்கு போட்டியிடும் ஒருவர் ஒரு வருடம் போதும் என்கிறார். பின்னையவரை நம்பலாமா?

ப: கொழும்பில் போட்டியிடும் ஒருவர் 24 மணி நேரம் போதும் என்கிறார். "இதற்கெல்லாம் போய் இவ்வளவு அவகாசமா கொடுப்பது? 15 நிமிடம் எனக்கு ஒரு 'ஷோட் லீவு' கொடுங்கள். நான் உடனே அதை வாங்கி வந்து கொடுக்கிறேன்" என்று எழுதிக் கையொப்பம் போட்டுக்கொடுக்கிறான் எமது ஆபிஸ்பையன். ஆகவே எல்லோரும் சேர்ந்து ஆபிஸ் பையனை நம்பலாமே!

கே: முன்னாள் கிளிநொச்சி எம். பி. தற்போது மௌனியாகி விட்டாரே காரணம்?

ப: தமிழரசு இயக்கத்தை விட்டு ஓடியவர்களின் கதி இறுதியில் அதுதானே!

ஃ

அபுல்ஹசன், கல்முனை

கே: கைக்கூலி கொடுத்துக் காடையர்களை ஏவிவிட்டு ஏனைய வேட்பாளர்களையும், அவர்களுடைய ஆதரவாளர்களையும் தொந்தரவு பண்ணும் வேட்பாளர்களைப் பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

ப: காடைத்தனம் தோல்விக்கே உத்தரவாதமளிக்கும்! தோல்வி நிச்சயமாகி விட்டதாலேயே காடைத்தனத்தில் இறங்குகின்றனர்; கிடைக்கப்போகும் தோல்வியைத் தாங்கக்கூடிய மன வலிமையற்றவர்களே காடைத் தனத்தில் இறங்குகின்றனர். அதனால் ஏற்கனவே உள்ள ஆதரவையும் இழந்துவிடுகின்றனர்.

ஃ

'மொழிவாணன்', இரத்தினபுரி

கே: பல தொகுதிகளில் போட்டியிடத் தீர்மானித்திருந்த திரு. சுந்தரலிங்கத்தின் நிலை இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது?

ப: இரண்டில் நிற்கிறது. மார்ச் 22-ந் திகதிக்குப் பிறகு பூஜ்யத்தில் நிற்கும்.

ஃ

சிங்கம், கிளிநொச்சி

கே: படிக்கப் படிக்கத் தேன் சொட்டும் காதல் கடிதம் ஒன்று என் கையில் கிடைத்துள்ளது. அதை காதலியின் பெற்றோர்களிடம் கொடுக்கலாமா?

ப: காதற் கடிதம் எழுதும் பாணியைக் கற்றுக்கொள்வதற்காக புதிதாகக் காதற் கடலில் காலைவிட்டுள்ள காதலன் அல்லது காதலியிடம் கொடுங்கள். பெற்றோரிடம் கொடுத்தால் தேனை சொட்டுவதற்குப் பதில் விஷம்தான் சொட்டும்.

ஃ

சி. கெக்கோ, காரைநகர்

கே: சமஷ்டி ஆட்சியின் கீழ் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தை ஆட்டிப் படைக்கும் ஒரு சக்தியாக மாறினால், மாநில அரசாங்கத்தின் கதி என்னவாகும்?

ப: பூரண சமஷ்டி ஆட்சி முறையில் நாட்டின் பாதுகாப்பு, வெளிவிவகாரக் கொள்கை முதலிய எல்லா சமஷ்டி இராஜ்யங்களுக்கும் பொதுவான சில விவகாரங்கள் மட்டுமே மத்திய அரசின் கையில் இருக்கும். ஏனைய விவகாரங்களைப் பொறுத்த வரையில் சமஷ்டி ராஜ்யங்கள் சுயேட்சையாகவே இயங்கும். ஆட்டிப் படைக்க மத்திய அரசாங்கத்துக்கு அதிகாரமிருக்காது. உண்மையான சமஷ்டி இராஜ்யமொன்று, விரும்பினால் பிரிந்து சென்று தனியாட்சி நிறுவும் சுய நிர்ணய உரிமையையும் தன்னகத்தே கொண்டிருக்கும்.

ஃ

வி. கனகநாயகம், காலி

க: இந்தமுறையும் நமது திறமைசாலி தேர்தலில் தோல்வியடைவார் என்று கூறுகிறேன். நீர் என்ன சொல்லுகிறீர்?

ப: கைப்புண்ணைப் பார்க்க கண்ணாடியா வேண்டும்?

ஃ

செ. நடேசர், யாழ்ப்பாணம்

கே: கந்தர்மடத்தடியில் சிங்களம் படித்து 8-ம் வகுப்பு பாஸ் செய்து உத்தியோகம் பார்க்கும் ஒரு தமிழர் சிங்களப் பத்திரிகை மாத்திரம் தான் இப்போது வாங்கிப் படிக்கிறார். சமீபத்தில் இவருக்கு உத்தியோக உயர்வும் கிடைத்ததாம். இது எதைக் காட்டுகிறது?

ப: அவர் சிங்களவராக மாறி வருகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படி ஒவ்வொரு தமிழனும் செய்தால் தமிழும் அழிந்து தமிழ் பேசும் இனமும் அழிந்து போகும்.

ஃ

மு. வாமதேவன், ஆத்தியடி

கே: கிளிநொச்சியில் போட்டியிடும் ஒருவர் வடக்கிற்கு மாவலிகங்கையைத் திருப்புகிறேன் என்கிறாரே, ஆனபடியால் இவருக்கு மேல் மாடியில் பிழைபோல கிடக்கு, இப்ப எனு மிச்சபழம் மலிவுதானே அதிலை வைச்சு முளுக வார்த்தால் என்ன? நல்லதா? வேறு மருந்து கிடக்கிறதா?

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் குறித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: இஸ்ரேலில் ஜோர்டான் நதியின் நீரை குழாய் வழியாகப் பாய்ச்சி பாலைவனத்தை வளமிக்க சோலையாக்கியிருக்கும் போது மாவலி கங்கையை வடக்கே திருப்புவது செய்யக் கூடியதே! ஆனால் அத்திட்டத்துக்கு சுமார் 8 கோடி ரூபாய் வரை செலவாகுமாம். அதனைச் செய்ய அந்த நபரிடம் ரூ.8 கோடி இருக்குமா? இருந்தாலும் செலவு செய்வாரா? செய்தாலும் இந்த ஒற்றையாட்சி அதற்கு இம்மியும் இடமளிக்காதே! எனவே மாவலிகங்கை நீரை வட பகுதி விவசாயத்துக்கு பயன்படுத்த வேண்டுமானால் அதுவும் சமஷ்டி ஆட்சி ஒன்றினால் மட்டுமே முடியும். எனவே கங்கையைத் திருப்ப வேண்டுமென்று உண்மையில் ஆர்வமிருந்தால் அவர் சமஷ்டி ஆட்சிக்காகப் பாடுபட வேண்டும். அல்லது அது வெறும் தேர்தல் கோஷமென்றால் யாரும் கவலைப்படப் போவதில்லை.

ஃ

வே. வை. தெய்வநாயகம்,
அக்கரைப்பற்று

கே: இலங்கையில் யு. என். பி. ஆட்சிக்கு வந்தால் இலங்கையின் பொருளாதார நிலைமை சீர்பெறுமா?

ப: எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சிறுபான்மை மக்களின் ஒத்துழைப்பைப் பெறாவிட்டால், பொருளாதார நிலைமை சீர்படாது.

ஃ

ச. சபாநேசன், காரைநகர்

கே: அகில உலக சட்ட மேதையான திரு பொன்னம்பலம் அரசியலில் பெரும் பேதையாக விளங்குவது ஏன்?

ப: சட்ட மேதைகளெல்லாம் அரசியல் மேதைகளாகிவிட முடியுமா, என்ன? சட்ட நிபுணர்களில் எத்தனையோ அரசியல் சூன்யங்களும் உண்டு.

கே: பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து அறிக்கைகள் பல வெளியிட்ட தனிப் பெருந் தலைவர், சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எதிர்த்து ஓர் அறிக்கை கூட வெளியிடாததன் மர்மம் என்ன?

ப: மௌனத்தின் அர்த்தம் ஆதரிப்பதென்பதே. நன்மையை எதிர்த்து தீமையை ஆதரிப்பதுதான் சிலரின் அரசியல். அதற்கு அப்பாற்பட்டவரல்ல நீங்கள் குறிப்பிடும் நபர்.

பப்பி, மண்டூர்.

கே: சில வாரங்களாக 'சுதந்திரன்' முகப்பு சிவப்பாக வருகிறதே காரணம்?

ப: தமிழரசுக் கட்சிக் கொடியிலுள்ள மூவர்ணங்களிலொன்று சிகப்பு—சிகப்பு தியாகத்தைக் குறிக்கும்.

கே: பட்டிருப்புத் தொகுதியில் நடைபெற்ற யு. என். பி. கூட்டங்களில் டட்லி தலா இரண்டு நிமிட வீதம் மட்டுமே கலந்து கொண்டார் காரணம் ஏனோ?

ப: அதற்கு மேல் அவருடைய பிரசங்கத்தை கேட்க மக்கள் பொறுமையுடன் அங்கே நின்று கொண்டிருந்தால்தானே அவர் தொடர்ந்து பேச முடியும்?

ஃ

ஸ்ரீ மெட்டை, மட்டுவில் தெற்கு

கே: ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்போருக்கு அவசியமானவை எவை?

ப: வாக்குறுதிகளைக் காப்பாற்றும், நேர்மையையும் 'சிறுபான்மையோரும் இந் நாட்டு மக்களே—அவர்களுக்கும் உரிமைகள் உண்டு" என்ற உண்மையை உணரும் ஆற்றலும் அவசியமாகும்.

ஃ

வி. பாஸ்கரன், அளவெட்டி

கே: காங்கேசன்துறைக் காங்கிரஸ் வேட்பாளர் திரு. சிறிபாஸ்கரனுக்கு அவரது தந்தையே தவது செல்வாக்கைக் கொண்டு வாக்குக் கேட்கின்றாராமே?

ப: உங்கள் செய்தி உண்மையானால், அவரது நிலை பரிதாபகரமான முறையில் ஆட்டம் கண்டுவிட்டது என்றுதான் கூற வேண்டும்.

ஃ

தமிழ்ப்பிரியன், காரைநகர்

கே: தமிழ் காங்கிரஸ், கட்சியைச் சேர்ந்த ஒரு பிரமுகர் 2 வருடத்தில் உரிமை பெற்றுத் தருவதாகவும் இன்னொருவர் மூன்று வருடத்தில் உரிமை பெற்று தருவதாகவும் சொல்கின்றனரே!

ப: போகாத ஊருக்கு வழி கேட்டதைப் போல செய்ய முடியாத ஒரு காரியத்துக்கு வருடக் கணக்குப் போடுகிறார்கள். அவர்கள்தான் யு. என். பி. ஆட்சிக்கு வரும்—தாங்களும் வெற்றி பெறுவோம்-மந்திரிப் பதவியும் கிடைக்கும் என்று கணக்கு போட்டுக் கொண்டிருப்பவர்கள்.

### பதில் கிடைக்குமா?

தமிழர்கள் தங்கள் தாய் மொழியில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ள சகல வசதிகளும் உண்டு.

—நீதி அமைச்சு

அதாவது தமிழில் என்ன வேண்டுமானாலும் எழுதலாம். ஆனால் அவற்றுக்கு நடவடிக்கை எடுக்கவோ பதில் எழுதவோ உத்தரவாத மளிக்க முடியாது என்று ஒரு குறிப்பையும் அமைச்சரின் அறிக்கையுடன் இணைக்கமறந்து விட்டனர்.

### பெரிய உதவி

செயற்கைக் கோளங்களின் மூலம் உலகனைத்துமுள்ள நாடுகளுடன் தொடர்பு கொள்ளும் திட்டத்தில் இலங்கையும் சேர்ந்துள்ளது.

—செய்தி



இந் நாட்டுப் புதினங்களை அண்ட சராசரம் அனைத்துக்கும் அறிவிக்கவும் இத்திட்டம் சிறிமாவோ அம்மையாருக்கு பெரும் உதவி புரியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### பரிதாபம்

தமிழ் பேசும் மக்கள் தனியாக நின்று அவர்கள் உரிமைகளுக்காகப் போராடி வெற்றி பெற முடியாது.

—தெல்லிப்பழையில் சமரக்கொடி

ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுததாம்.

### பின் குறிப்பு..?

ஏழைப் பிள்ளைகள் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று கல்வி கற்க வசதி அளித்தது எங்கள் அரசாங்கமே.

—சிறிமாவோ

"எனது மகளை மட்டும் மேல் நாட்டுக்கு அனுப்ப வசதி செய்ததும் எனது அரசாங்கமே" என்று ஒரு பின் குறிப்பும் சேர்க்கப்பட வேண்டும் என்று ஒரு [illegible]

உங்கள் வயது
18-க்கு மேற்பட்டதா?

அப்படியாயின், உங்கள் சரியான விலாசம் எழுதப்பட்ட, முத்திரையுடன் கூடிய தபால் உறை யொன்றை அனுப்புங்கள்.

உங்களுக்குத் தேவையானவை, உங்கள் குறைபாடுகள், மனதில் இருக்கும் யாவற்றையும் நான் அறிவேன். நான் அனுப்பும் அந்த விபரங்களைப் பார்ப்பதினால் நீங்கள் புதுமை அடைவீர்கள். ஆண்—பெண் பேதம் அல்லது மதபேதம் இல்லை. இன்றே உங்கள் விலாசத்தை அனுப்பி உங்கள்வாழ்க்கையைப் பற்றி நான் கூறும் விபரங்கள் உண்மையானவையா எனப் பாருங்கள் இன்னும்—எந்த வகையான காரணத்திற்காகவோ மனவேதனை, தொல்லை, துன்பம் இருப்பின் அதைத் தீர்த்து வைத்து—எண்ணத்தை நிறைவேற்றித் தருவேன். இரகசியம் வெளியிடப்படமாட்டாது.

பதிவு செய்யப்பட்ட மாந்தீரீக கலாநிதி
பி. எம். திசாநாயக்க,
அருத எண்ணெய் தலைமைக் காரியாலயம்,
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் உரிமைப் போராட்டத்தை

# பலவீனப் படுத்திய சக்தி

## மக்களின் உணர்ச்சிகளை

## மதிக்க மறுத்த பிரதிநிதி

## திரு. துரையப்பாவின் 'சாதனைகள்'

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு இன்றுள்ள அரசியல், குடியுரிமை, பொருளாதார, மொழி, பிரதேச நெருக்கடிகள் காரணமாக எதிர்வரும் பொதுத் தேர்தல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். இப்போதுத் தேர்தலில் தமிழ் பேசும் பொது மக்கள் தேர்ந்தனுப்பும் பிரதிநிதிகள், சாதாரண பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்குள்ள கடமைகளைமட்டும் செய்பவர்களாகவோ அல்லது தொகுதி மக்களுக்கும் ஆட்சியாளருக்குமிடையில் தொடர்பதிகாரியாக விருக்கக் கூடியவர்களாகவோ மட்டும் இருந்து விட்டாற்போதாது.

### பிரதிநிதிகளின் தகைமை

தமிழ் பேசும் மக்கள் இம்முறை தெரிந்தனுப்பும் பிரதிநிதிகள் ஒரு கட்டுப்பாடாக நின்று பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் போராடக் கூடியவர்களாக இருக்க வேண்டும். பொதுத் தேர்தலில் தெரிந்தெடுக்கப்படும் ஒவ்வொரு பிரதிநிதியும் தான் முப்பது இலட்சம் தமிழ் பேசும் மக்களினதும் பிரதிநிதி என்ற உணர்வை இயற்கையாகவே பெறக் கூடியவராக இருக்க வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தனுப்பும் பிரதிநிதிகள் ஒரு கட்டுப்பாடான இலட்சியத்தை ஏற்றுக் கொண்டவர்களாகவும், கட்டுப்பாடான தலைமையின் கீழ் இயங்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டும்.

இனந்தெரியாதவர்களையும், இலட்சியமற்றவர்களையும், உதிரிகளையும், உத்வாக்கரைகளையும், ஒத்துழைப்புப் பித்தர்களையும், காட்டிக் கொடுக்கும் கயவர்களையும், அமைச்சர் பதவிக்கு அங்கலாய்ப்பவர்களையும், அடக்கியாண்ட இராணுவ அதிகாரிகளுக்குச் சிந்து பாடுபவர்களையும், மாறுபட்ட வேறுபட்ட கட்சிகளில் உள்ளவர்களையும் திரட்டி கூட்டுச் சாம்பாராக அனுப்பி வைத்தால் அது பலவீனத்தைத் தருமேயன்றி பலத்தையும் பலனையும் கொடுக்க மாட்டாது. இந்த உண்மையைத் தமிழ் பேசும் மக்கள் கடந்த கால சம்பவங்களுடன் நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து பார்க்க வேண்டும். குறிப்பாக யாழ்ப்பாணத் தொகுதி மக்கள் இம்முறை மிகவும் நிதானத்துடன் செயலாற்ற வேண்டும்.

யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளர்கள் கடந்தகாலங்களிற் செய்த பிழையை இம்முறையும் விடமாட்டார்கள் என்று தமிழ் கூறும் நல்லுலகு எதிர்பார்க்கின்றது. கடந்த காலங்களில் யாழ்ப்பாணத் தொகுதியின் பிரதிநிதிகளாக விளங்கியவர்கள் தொகுதி மக்களின் மன வுணர்ச்சியை உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை. தொகுதி மக்களின் மனவொழுச்சிக்குப் புறம்பாகவே செயற்பட்டு வந்துள்ளார்கள்.

### உடுகமாவுக்கு பாராட்டு

கடந்த பாராளுமன்ற காலத்தில் யாழ்ப்பாணத் தொகுதியின் பிரதிநிதியாகவிருந்தவர் பல சந்தர்ப்பங்களில் தான் தமிழ் பேசும் மக்களாற் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி என்பதை மறந்து செயற்பட்டிருக்கிறார். குறிப்பாக தமிழ் பேசும் மக்களை தனது இராணுவ பலத்தின் மூலம் அடக்கி ஒடுக்கிய கேணல் உடுகமாவை பாராட்டி விருந்து வைபவங்கள் நடாத்தியதுடன், அவரைப் பற்றிப் புகழ்ந்து பாராளுமன்றத்திலும் உரை நிகழ்த்தியுள்ளார் யாழ்ப்பாணத் தொகுதியின் சுயேச்சைப் பிரதிநிதியாக விளங்கிய திரு. அல்பிறட் துரையப்பா அவர்கள்.

1964ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி கேணல் உடுகமாவைப் பாராட்டிப் பாராளுமன்றத்தில் சிந்து பாடியிருக்கிறார் இவர்.

I should however, say this in fairness to Colonel Udugama He is really doing a good job. Every time I made representations to him, he has gone out of his way to trace the culprits. I know that there is difficulty in tracing the soldiers concerned, but he has been very co-operative in trying to check these mischievous soldiers.

—*May 3, 1964 — Parliamentary Debates Hansard column 4748.*

இதன் பொருள் வருமாறு: 'கேணல் உடுகமா உண்மையிலேயே நல்ல வேலை செய்கிறார். நான் அவரிடம் சென்று முறையிட்ட பொழுதெல்லாம் அவர் குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு முயன்றிருக்கிறார். இராணுவ வீரர்களைக் கண்டு பிடிப்பதில் உள்ள கஷ்டம் எனக்குத் தெரியும், என்றாலும் குளப்படிகார இராணுவ வீரர்களைக் கண்டு பிடிப்பதில் அவர் மிகவும் ஒத்துழைத்துள்ளார்.'

உடுகமாவுக்குச் சிந்து பாடுவதுடன் மட்டும் திரு. துரையப்பா நின்றுவிடவில்லை. அடுத்து வந்த அரசாங்க அதிபரையும் சென்று வரவேற்கத் தவறவில்லை. அரசாங்க அதிபரை ஒரு பாராளுமன்ற உறுப்பினர் சென்று வரவேற்பதில் எத்தகைய தவறுமில்லை. ஆனால், வரவேற்ற சம்பவத்தையும், நேரத்தையும் நாம் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

### ஜயவீராவுக்கு வரவேற்பு

1964ம் ஆண்டு சனவரி மாதம் முதலாம் திகதி தமிழ்ப் பிரதேசம் பூராவிலும் சிங்களம் மட்டும் சட்டம் தீயிடப்பட்டது. சிங்களம் பூரணமான நிலையில் தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்கப்பட விருந்தமை மக்கள் ஒரு முகப்பட்டு எதிர்த்தார்கள் இந்த நேரத்தில் யாழ்ப்பாணத் தொகுதியின் பிரதிநிதியாக விருந்த திரு. துரையப்பா ஒடி மறைந்து விட்டார்.


ஓடி மறைந்தவர் அத்துடன் நின்றாரா என்றால் இல்லை. சனவரி 4ம் திகதி மீண்டும் யாழ்ப்பாணத்தில் தலைகாட்டினார். வந்ததும் வராததுமாக — சிங்களம் மட்டும் சட்டத்தை யாழ்ப்பாணத்தில் முழுதாக அமுல் நடாத்துவதற்[illegible] அனுப்பப்பட்ட — அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீ[illegible] சென்று வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியைப் பிரபல சிங்களத் தினசரி ஏடான 'தவச' முதற் பக்கத்தில் பிரசுரித்ததுடன், திரு. துரையப்பா அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீராவுடன் கைகுலுக்கும் படத்தையும் முதற் பக்கத்தில் முதற்படமாகப் பிரசுரித்து பின்வருமாறு எழுதியிருந்தது 'யாழ்ப்பாணத்தில் சிங்கள ஆட்சிமொழி எதிர்ப்பு—தமிழரசு இயக்கம் நடைபெற்ற மறுதினம் கொழும்பிலிருந்து திரும்பிய யாழ்ப்பாண சுயேச்சை எம்.பி திரு. அல்பிறட் துரையப்பா முதல் முதலாக எடுத்த நடவடிக்கை அரசாங்க அதிபர் திரு நெவில் ஜயவீராவைக் கைகுலுக்கி வரவேற்றதுதான்'

**பூங்குன்றன்**

### போராட்டத்தை பலவீனப் படுத்தினர்

தமிழ் மக்களின் போராட்டத்தைப் பலவீனப்படுத்த இந்த ஒரு சம்பவமே போதுமானதாகும். தமிழ் மக்களின் பிரதிநிதிகளிற் சிலர் இந்த எதிர்ப்பியக்கத்தை ஆதரிக்கவில்லையென்று வெளிநாட்டு அரசியல் அவதானிகள் கணக்கெடுப்பதன் மூலம் சிங்கள எதிர்ப்பியக்கம் தமிழ் பேசும் மக்களின் பூரண ஆதரவுடன் நடைபெறவில்லையென்றே கருதுவார்கள். இந்த முடிவு



எமது போராட்டத்துக்கு உலக அரங்கில் ஏற்படும் அனுதாபத்தை நிச்சயம் பலவீனப்படுத்தியே தீரும்.

மீண்டும் தேர்தலில் குதித்துள்ள சுயேச்சை வேட்பாளரான திரு. துரையப்பா சவால் விடுகிறார் 'தான் தமிழ் பேசும் மக்களை பாதிக்கும் விடயங்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் கலந்து கொள்ளவில்லையென்பதை நிரூபிக்க முடியுமா என்று, இந்த ஒரு சம்பவமே திரு. [illegible] அமைந்துள்ளது.

දිනපති

යාපනයේ සිංහල රජයේ විරෝධී ෆෙඩරල් ව්‍යාපාරය පැමිණිධාට පසුවදා කොළඹ සිට පැමිණි යාපනයේ ස්වාධීන මන්ත්‍රී ඇල්ෆ්‍රඩ් තුරෙයි අප්පා මහතා පළමුවෙන් කෙළේ යාපනයේ කච්චේරියට ගොස් නව දිසාපති නෙවිල් ජයවීර මහතාට අතට අත දී පිළිගැනීමයි.

1962ம் ஆண்டு நடைபெற்ற சத்தியாக்கிரகத்தில், எந்தளவு தூரம் உள்ளத் தூய்மையுடன் திரு. துரையப்பா கலந்துகொண்டார் என்பதை பொதுமக்கள் நன்கு அறிவார்கள். சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ளாவிட்டால் பொது மக்களின் நேரடியான எதிர்ப்புக்கு இலக்காக வேண்டியேற்படுமென்பதாலேயே திரு. துரையப்பா கலந்துகொண்டார்.

சத்தியாக்கிரகத்தைத் தொடர்ந்து அவசரகாலச் சட்டம் அமுல் நடாத்தப்பட்ட காலத்தில் திரு. துரையப்பா நடந்து கொண்ட முறை அவரின் நிலையை நன்கு தெளிவுபடுத்தியது. இராணுவத்தின பேயாட்டம் யாழ்ப்பாணத்தில் தாண்டவமாடுகையில் யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதி அதுபற்றித் தட்டிக் கேட்கத் தவறிவிட்டார். இந்த நிலையில் அவர் சகல போராட்டங்களிலும் கலந்து கொண்டதாகக் கூறுவதை எங்ஙனம் ஏற்க முடியும்.

### சிறுபான்மைத் தமிழர் பிரச்சினை

இன்று சிறுபான்மைத் தமிழ் மக்கள் மத்தியில் சென்று அவர்களின் நண்பன்தான் என்று கூறுகிறார் திரு துரையப்பா. திரு துரையப்பா கூறுவது உண்மையானால் இன்றுவரை அவர் சிறுபான்மைத் தமிழர்களின் விமோசனத்துக்காக எடுத்த நடவடிக்கைகளை பகிரங்கமாக எடுத்துக் கூறட்டும், இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் மத்தியில் இத்தகைய சாதிப்பிரிவினை இருக்கக் கூடாது என்பதற்காக பல இயக்கங்களைப் பொதுமக்களின் ஆதரவுடன் நடாத்தியது. இவற்றில் திரு துரையப்பா அவர்கள் கலந்து கொள்ளாதது ஏன்?

தமிழ் மக்களின் உரிமையைக் கருதி அரசாங்கத்தைப் பலமுறை எதிர்த்து வந்ததாக திரு. துரையப்பா பசப்புகிறார். திரு. துரையப்பா எத்தனைதடவை அரசாங்கக் கட்சியுடன் சேர்ந்தும், தமிழ் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு எதிர்த்து வாக்களித்த பிரச்சினைகளுக்கு வாக்களிக்காது நடுநிலைவகித்தும் உள்ளாரென்பதைப் பாராளுமன்றபதிவேட்டைப் புரட்டிப்பார்த்தாற் புரியும்.

இன்று திரு துரையப்பா அவர்களுக்கு சுதந்திர-சமசமாச கூட்டரசாங்கக்கோஷ்டியினர் ஆதரவு கொடுக்கிறார்களே எதற்காக? இவர் அரசாங்கத்தை எதிர்த்துவந்தவர் என்றால் எதற்காக இன்று அவருக்கு கூட்டரசாங்கத்தினர் வலிந்துசென்று ஆதரவுகொடுக்க வேண்டும். சமசமாச உறுப்பினரான எம். எம். சி. திரு. நாகராசா இவரின் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதின் அர்த்தமென்ன? இவற்றிற்கு இது வரை பதில் கூறவில்லை திரு. துரையப்பா அவர்கள்.

### இதுவும் அவரது கடமையா?

அமைச்சர்கள் யாழ்பாணத்திற்கு வருகைதந்த போதெல்லாம் மலர்மாலையுடன் சென்று வரவேற்கத் தவறியதில்லை திரு. துரையப்பா. அமைச்சர் இலங்கரத்தினவின் வருகைக்கு பரந்த அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். எதிர்ப்பியக்கத்தில் ஈடுபட்டு உயிரை இழந்தார் அமரர் கந்தையா, ஆனால் தமிழ் மக்களின் போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டதாகக் கூறும் திரு. துரையப்பா அவர்கள் அமைச்சரைத் தனிந்து நின்று வரவேற்றார்.

எந்த சிங்கள அமைச்சர் யாழ்ப்பாணம் வந்தாலும் ஒடிவிழுந்து வரவேற்கத் திரு துரையப்பா தவறியது கிடையாது இவற்றையெல்லாம் மறந்துவிட்டு இப்பொழுது பசப்புகிறார் 'தான் அரசாங்கத்தை எதிர்த்ததாகவும், தமிழ் மக்கள் நடாத்திய எதிர்ப்பியக்கங்களில் கலந்து கொண்டதாகவும்.'

### வாக்காளர் கவனத்துக்கு

திரு. துரையப்பாவின் பசப்பு வார்த்தைகளைக் கேட்டு யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளர்கள் மயங்கிவிட, அவர்கள் அத்தனை தூரம் கடந்தகால சம்பவங்களை மறந்துவிடவில்லை.

கடந்தமுறை ஒரு சுயேச்சைப் பிரதிநிதியை அனுப்பியதன் மூலம் யாழ்ப்பாணத் தொகுதிமக்களின் உள உணர்ச்சி உரிய முறையில் பிரதிபலிக்கப்படவில்லை. யாழ்ப்பாணத்தொகுதி மக்கள் தமிழ் உரிமைப் போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்ட போதிலும், அவர்களின் பங்கை உலக அரங்கு ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது. ஆகவே, இம்முறை யாழ்ப்பாணத்தொகுதி வாக்காளர்கள் விளிப்புடன் இருப்பார்கள் என்று ஏனைய தொகுதி மக்கள் எதிர்பார்ப்பது உண்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாணத்தில் தமிழரசுத் தலைவர்கள்

## மாபெரும் பொதுக் கூட்டங்கள் மக்களின் பேரார்வம்

கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக் கட்சிப் பிரச்சாரங்களை நடாத்தவும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டவும் தமிழரசுத் தலைவர்களான திரு சா. ஜே. வே. செல்வநாயகம், திரு. அ. அமிர்தலிங்கம், திரு. வி. நவரத்தினம் திரு. வி தர்மலிங்கம் ஆகியோர் புறப்பட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னதாகவே தலைவர்களை கிழக்கு மாகாண மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். தலைவா செல்வநாயகத்துககு ஏற்பட்ட சுகயீனமும், பின்னர் ஏற்பட்ட திடீர் மழை—வெள்ளப் பெருக்கும் தலைவர்களின் வருகையைப்பின் போட வைத்துவிட்டன.

புராணப் பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்டதும, தமிழ் பேசும் மக்களின் தங்கத் திருவிடமும் தலைநகருமான திருகோணமலைக்கு கடந்த சில நாட்களுக்கு முன்னர் தலைவர்கள் வந்து சேர்ந்தனர். தமிழ் பேசும் மக்கள் தங்கள் தலைவர்களைக் கண்டு பேரானந்த மடைந்தனர்.

### தியாகிகளின் திருவிடம்

தன்மானம் காக்கும் தீரர்கள் சோட்டமாம் திருமலை தலைவர்களுக்கு வாழ்த்துக் கூறி வாவேற்றது. மககள் மத்தியிலே என்றென்றும் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் தமிழார்வம் தலைவர்களின் வருகையால் மென்மேலும் சுடர் விட்டுப் பிரகாசிக்கவே செய்தது.

தமிழன்னையை விற்று தங்கள் நலத்தைத் தேட முனைபவர்கள் வெட்கித் தலை குனிந்து போகும் வண்ணம் தலைவர்களின் வருகை திருகோணமலைக்குப் புத்துயிரளித்ததென்றே கூறலாம்.

"உயிர் வேண்டுமா?—உடல் வேண்டுமா?—உள்ள பொருளத்தனையும் தான் வேண்டுமா?—தமிழுக்கு" என்று தியாகப் பரணி பாடும் திருமலை நகரில், தன்னல வேட்டை ஒன்றையே இலககாகக் கொண்டு தேர்தலுக்குத் தேர்தல் தலைகாட்டும் சந்தர்ப்ப வாதிகள் இன்னுமின்னும் ஏன்தான் தங்கள் தலைகளை உடைத்துக் கொள்ளுகிறார்களோ தெரியவில்லை. தலைவர்களைக் காணவும், அவர்களின் உரையினைக் கேட்கவும் கூடியிருந்த மக்கள் வெள்ளத்தைப் பார்த்த நடுவுநிலையாளர்கள் மேற்கண்டவாறு கேட்டனர்.

திருமலை நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் சிவானந்தம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழரசுக் கட்சி கடந்த காலத்தில் சாதித்தவை என்ன என்பதையும், இனிமேல் எவற்றைச் சாதிக்கப் போகிறது என்பதனையும் பொதுச் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் எடுத்துக் கூறினார். மற்றும் தலைவர் திரு. செல்வநாயகம், திரு. வி. நவரத்தினம், ஜனாப் முகம்மதலி, திரு. வி. தருமலிங்கம், திரு. மாணிக்கராசா, உப்புவெளி கிராம சங்கத் தலைவர் திரு. என். கைலாயநாதன், திரு. சோமசுந்தரம், திரு. வீரசுப்பிரமணியம் ஆகியோரும் இக் கூட்டத்தில் பேசினார்கள்.

> **கிழக்குத் தபால்**

### குலைந்துபோன குழப்படி

சில வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஆரையம்பதி என்ற கிராமத்திலே தமிழரசுக்கட்சி பிரச்சாரக் கூட்டம் ஒன்றினை நடத்தவொட்டாமல் தடுத்துவிட சில சூழ்ச்சிகள் நடைபெற்றன. ஆனால் இம் முயற்சி பெரும் தோல்வியிலேயே முடிவடைந்தது.

சில கைக் கூலிகளை ஏவிவிட்டு, காடைத்தனத்தைக் காட்டி, கொள்கை வீரர்களைத் தாக்கியாவது கூட்டத்தைக் குழப்பி விடலாம் என்று சிலர் கண்ட கனவு கனவாகவே முடிந்தது. அவர்கள் ஆடிய ஆட்டம் அத்தனையும் வெறியாட்டம் என்பதனை ஆரையம்பதி வாழ் அருந் தமிழ் மக்கள் நன்கு விளங்கிக் கொண்டனர்.

ஒருமுறை கண்ட தோல்வியை மறுமுறையாவது வெற்றி யாக்கிவிட இந்தக் கூலிப் பட்டாளம் எடுத்த முயற்சியும் பலியாது போய்விட்ட பரிதாபத்தைப் பார்த்து நாமும் பரிதாபப் பட்டோம். இந்த அற்பர்களின் செய்கை ஆரையம்பதி அன்னைக்கே அவமானத்தைக் கொடுத்துள்ளது.

ஆரையம்பதியில் திட்டமிட்டபடி கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் பொதுக் கூட்டம், ஒரு சிறு சச்சரவுமின்றி இனிதாக நடைபெற்றது. மட்டக்களப்பு முன்னாள் பிரதிநிதி திரு. செ. இராசதுரை உட்பட சகல தலைவர்களும் இக்கூட்டத்தில் உரைநிகழ்த்தினர்.

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டக்களப்பைச் சேர்ந்த கல்லடி முகத்துவாரம், இராசதுரைபுரம ஆகிய இடங்களில் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இக்கூட்டங்களில் திரு. செ. இராசதுரை, செனட்டர் மு. மாணிக்கம், திரு. ஆ. தவராசா, திரு. பொ. மாணிக்கவாசகர், திரு. க. கந்தசாமி, திரு. அ. குருஸ், கவிஞர் காசி. ஆனந்தன், திரு வ பாலசிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பட்டிருப்புத் தொகுதியில் துறைநீலாவணையிலும் ஒரு பொதுக் கூட்டம் திரு. சி. மூ. இராசமாணிக்கத்தை ஆதரிக்கும் முகமாக நடைபெற்றது. ஜனாப் மசூர் மௌலானவை ஆதரிக்கு முகமாக கல்முனையைச் சேர்ந்த நற்பிட்டிமுனையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஜனாப் எம். ஏ. என். ஹசன் மௌலவி அவர்கள், சகல இனமக்களும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் இணைந்து வாழ்வதற்கு அவரவர்கள் பங்கை பூரணமாக அனுபவிக்கும் உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் இம்முறையினை சமஷ்டி ஒன்றின் மூலமே பெறலாம் என்றும் கூறினார். திரு. எம். கே. செல்லையா, ஜனாப் மசூர் மௌலானா, ஜனாப் எம். ரசீத் ஆகியோரும் பேசினார்கள்.

—பாடும் மீன்

---

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## கோட்டாவுக்காக கோட்டைவிட்ட கோமாளி

### முகவுரை

இவ்வாரம் நமது அம்மான் ஒரு கோமாளியை அறிமுகப்படுத்து வைக்குப்படி கேட்டிருக்கிறார். சர்வசாதாரணமான இந்த விதூஷகரை பொது மக்கள் அதியாக அறிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லையாலும் இத்தகைய நகைச்சுவை நடிகர்கள் நம் மத்தியில் பலர் மலிந்து கிடக்கின்றனர் என்பதையும், அவர்களுக்கு உரிய இடம் நாம் கொடுக்கத் தவறிவிடுகிறோம் என்பதையும் மனதிற்கொண்டே இந்த அறிமுகத்தை நாம் உங்களுக்குத் தரத்துணிந்தோம்.

பலருக்கு இவரைத் தெரியாது. ஆனல் ஒரு சிலருக்காவது இவரைத் தெரிந்திருக்கலாம். ஒரு குறிப்பிட்ட சிறு பிரதேசத்தில் எப்படியோ ஒரளவு சிறப்புப் பெற்று வாழ்கிறார். அதுவும் வெறும் நடிப்பால் மட்டும் சிறப்புக்கள் பல பெற்று வாழ்கிறார். இவர் போன்ற நடிகர்கள் நம் மத்தியில் ஏராளம். ஆகவே இவரை அறிவதன் மூலம் இவர் போன்ற பலர் நமக்கு அறிமுகமாவார்களல்லவா?

### புறப்பாடு

கொழும்பிலே கைத்தொழிற் பொருட் காட்சி திறப்பு விழா நடைபெற்ற போது இந் நாட்டிலுள்ள பல பிரமுகர்களுக்கு அழைப்புகள் அனுப்பப்பட்டன. நமது கதாநாயகன் அவர்களும் கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரு உள்ளூராட்சி மன்றத் தலைவரான படியினல் அவருக்கும் அழைப்புக் கிடைத்தது இந்த அழைப்பிதழுக்குக் கிடைத்த வரவேற்பு இருக்கிறதே—அப்பப்பா நம்மால் வர்ணிக்கவே முடியாது.

பொருட்காட்சி திறப்பு விழாவுக்கு நமது கதாநாயகன் புறப்பட்டார். புகை வண்டியலேறிச் சென்றவர் பொருட்காட்சிபார்த்தாரோ வேறு எங்கே போனாரோ தெரியவில்லை, அவருடன் சென்ற அவருடைய குடும்பத்தவர் ஒருவர் ஒரு நாள் இருபத்தினன்கு மணிநேரமும ஒரு ஹோட்டல் அறையில் அடையுண்டு கிடந்தாராம் பக்கள் வரிப் பணத்தில் பொருட்காட்சி பார்க்கச் சென்றவர் காட்சி பாராமலே மோட்டார் காரில் ஊர் திரும்பிவிட்டார்.

### செலவு

இந்தப் பொருட்காட்சிப் புறப்பாடடுக்கு மக்கள் வரிப் பணத்திலிருந்து கோரப்பட்ட தொகை ஏறத்தாழ ரூ. 350 இருக்கலாம் என்று தெரிய வருகிறது. ஆனல், உள்ளூராட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் ஏறத்தாழ ரூ. 100க்குள் மட்டும் தான் எடுக்கலாம் என்று கூறிவிட்டமையினல் இந்தவிதூஷகர் பெரும் ஏமாற்றம் அடைந்துவிட்டாலும் தமது நடிப்புத் திறமையினல் சமாளித்துக் கொண்டார்.

### அறிமுக......

மட்டக்களப்புப் பகுதியில் யு என் பி. வேட்பாளர் களைப் பொறுக்குவதற்காக சில மாதங்களுக்கு முன்னர் திரு. டட்லி சேனநாயக்காவும் திரு. ஜே ஆர் ஜயவர்த்தனவும் வந்திருந்தனர் அப்பொழுது இந்த விதூஷகர் தமக்குச் சொந்தமான ஒரு கட்டிடத்திலே ஒரு உபசாரம் நடத்தினர். தமக்கும் திரு. டி எஸ். சேனநாயக்காவுக்கும் உள்ள [illegible] களை ஒரு பட[illegible] படம் மூலம் எடுத்துகாட்டினர்.

### ......உபசாரம்

இந்த உபசாரம், தான் ஒரு வேட்பாளராகிவிடலாம் என்ற விருப்புடன் செய்யப்பட்டதாக விருக்குமோ என்று ஆராய்ந்ததில் உண்மை தெரிந்தது. அடுத்தமுறை யு. என். பி. ஆட்சிக்கு வந்தால் தமது அரிசி ஆலைக்கு போதியளவு 'கோட்டா' கிடைக்கும் எனபதற்காகத்தான் இந்த உபசார விருந்து ஏற்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டது.

தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் யாவும் தாக்கல் செய்யப்பட்டு, தேர்தலுக்கான பிரசார வேலைகளுக்கு அண்மையில் இப் பகுதிகளுக்கு திரு. டட்லி சேனநாயக்கா வரப் போகிறார் என்று செய்தி அடிப்பட்டதுதோ திடீரென ஒரு பேரதிர்ச்சி நமது கதாநாயகனுக்கு ஏற்பட்டுப் புத்தியம தடுமாறி சித்த சுவாதீனம் இழந்தவராகி விட்டார்.

### நாடகம்

'அட பாவமே!' என்று கூறுபவர்களும் பச்சாதாபப் [illegible] சப் போனபோது அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. திரு. டட்லியின் நடமாட்டம் குறைந்ததும் மீண்டும் புத்தி சுவாதீனமடைந்து இன்று 'சும்மா' திரிகிறார் நமது கதாநாயகன்.

அரிசி ஆலைக் கோட்டாவுக்காக யு. என். பித் தலைவர்களுக்கு மாலையிட்ட நமது விதூஷகர் இன்று வேறோர் கடசி அன்பருக்கு ஆலவட்டம்பிடிக்கிறார் அது மடடுமா அவருடனசேர்ந்து கொண்டு தமிழரசுக் கட்சி வேட்பாளருக்கு வரவேண்டிய வாக்குகளைப் பிரிக்க ஒரு கொள்கையற்றவரையும் தேர்தல்களத்தில் பவனி வர விட்டிருக்கிறார்.

### மீனகாரம்

கடந்த வாரம் ஒரு கடற் கரையில் ஏழு பெரிய கொடுவா மீன்கள் வெட்டப்பட்டு, அதற்கேற்ப உணவு சமைக்கப்பட்டுப் போதிய பானங்களும் பரிமாறப்பட்டு மா பெரிய விருந்தும் நடைபெற்றது. அது எதற்காகத் தெரியுமா? தமிழரசுக் கட்சியின் ஒரு பொதுக் கூட்டத்தைக் குழப்பியடிக்க ஆரம்பச் செலவுதான் இவ் விருந்து.

வெற்றிகரமாக முடிந்தது விருந்துதான் ஆனல் கூட்டம் குழப்படியின்றிக் குதூகலமாகவே முடிந்தது.

முன்பு திரு. டட்லி சேனநாயக்காவுக்கு விருந்து வைத்த இவரை பின்னர் திரு. டட்லி வந்தபோது அவர் விசாரித்ததாகவே தகவல் இல்லை. கோட்டாவை நினைத்துக் கோட்டை விட்ட இந்த நடிகர் இன்னும் எத்தனை வேடங்கள் போடுவார் பார்த்துஇரசிக்கலாம் என்று இரசிகர்கள் காத்துக்கொண்டுள்ளனர்.

### முடிவுரை

இந்த விதூஷகரைப் போன்று நாட்டிலே பல நடிகர்களை நாம் அன்றுடம் காண்கிறோம். இவர்களை யிட்டு எவரும் ஆத்திரப்படுவதில்லை தவிர இவர்களுடைய செய்கைகளை நினைத்தால் விழுந்து விழுந்து சிரிக்காதவர்கள் எவருமே இருக்க முடியாது. இவர்களைக் கண்டு சிரிக்காதவர்கள் நகைச்சுவை இரசிகர்களாக மாட்டார்கள் என்பது எமது முடிவு.

---

### வென்றல்-மந்திரி தோற்றல்-செனட்டர்

கிழக்கு மகாணத்திலே ஒரு தொகுதியில் போட்டியிடும் ஒரு மாஜி ஆளும் கட்சியின் வேட்பாளர் கிராம மக்களை வசப்படுத்த நல்ல தந்திரங்களைக் கையாளுகிறார். இவருக்கு வெற்றி கிட்டினலும் தோல்வி கிடைத்தாலும் பதவி ஒன்று நிச்சயமாகக் கிடைத்து விடுமாம். இதை அவரே மக்கள் மத்தியில் கூறுகிறார்.

இவர் சார்ந்துள்ள கட்சி நிச்சயமாக வென்று விடுமாம். ஆகவே தாம் வெற்றி பெற்றால் நிச்சயமாக அமைச்சர் பதவி ஒன்று இவருக்குக் கிடைத்து விடுமாம். தாம் தோல்வி அடைய நேர்ந்தாலும் தமக்கு ஒரு செனட்டர் பதவி எப்படியோகிடைத்து விடுமாம்.

இப்பிரசாரத்தில் நம்பிக்கைவைத்த மக்கள் இவருக்கு சாதாரண கீழ் சபை (பிரதிநிதிகள் சபை) பதவியைத் தேடிக்கொடுக்க விருப்பவில்லை. அவரை மேல் சபை (செனட் சபை)க்கே அனுப்பிவைக்க முடிவு செய்து விட்டனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரியன் ஏவிய துச்சாதனன் - பொன்னம்பலம்

## அமைச்சர் பதவிக்காக அன்னையின் துயிலுரிந்தார்

திரௌபதியின் துயிலை உரிந்து சபையிலே அவளை மானபங்கப்படுத்துமாறு துரியோதனன் துச்சாதனனை ஏவினன். இதே போன்று தமிழ் பேசும் மக்களின் மானத்தைப் பறிக்க சேனநாயக்கா ஏவிவிட, தமிழ் அன்னையின் துயிலை உரிந்து மானபங்கப் படுத்தியவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

ஏருவூர் ஐந்தாம் குறிச்சியில் முன்னுள் கிராமசபைத் தலைவர் திரு. க. பொன்னையா தலைமையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய மட்டக்களப்பு தமிழரசு வேட்பாளர் திரு. செ. இராசதுரை மேற்கண்டவாறு கூறினுர். அவர் தொடர்ந்து கூறியதாவது:



செ. இராசதுரை

தமிழ் பேசும் இனம் இன்று மாபெரும் வழக்கொன்றை நடாத்தி வருகிறது. தமிழனுக்குச் சொந்தமான பூமி வேற்றினத்தாரால் பிடுங்கப்படுவதை எதிர்த்து வழக்காடி வருகிறது. 'சிவில்' வழக்கிலே தன்னிகரில்லாத் திறமையாளரான நியாயவாதி எங்கள் தந்தைசெல்வாவே அவ்வழக்கினை திறம்பட நடத்துகின்றுர். கொலை செய்தவர்கள் எனப்படுவோர், கொள்ளை அடித்தோர் எனக் குற்றஞ்சாட்டப்படுவோர் போன்ற 'கிறிமினல்' வழக்காடும் திரு. பொன்னம்பலத்தால் தமிழன்னைக்குற்ற துயரினைப் போக்கடிக்க முடியாது.

தாம் வாழ்வதற்கான ஒரு இல்லத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழரசுத் தலைவர்களையே தேர்ந்தெடுப்பதன் மூலம், தமிழன்னையின் துயிலை உரிந்து மானபங்கப்படுத்த முனையும் தமிழ் காங்கிரஸ்காரர்களை பழிதீர்த்துக் கொள்வோமாக.

### வேறு எவராலும் முடியாது

முன்னுள் கல்குடா பிரதிநிதி திரு. பொ. மாணிக்கவாசகர் பேசும் போது, 'தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் அன்று கொடுத்த வாக்குறுதியை இன்றும் மீறவில்லை. தமிழன்னையை அரியணை ஏற்றுவதற்காக தமிழரசுக் கட்சி கடந்த பல ஆண்டுகளாக பெரும் போராட்டங்களை நடாத்தி வந்திருக்கிறது. இக்கட்சியை விட வேறு எவையும் தமிழ் பேசும் மக்களுக்கு கடுகத்தனை அளவு உரிமையும் வழங்கப்போவதில்லை' என்று எடுத்துக் கூறினுர்.

அடுத்துப் பேசிய மூதவை உறுப்பினர் மு. மாணிக்கம், 'தமிழரசுக்கட்சி தியாக சீலர்களால் உருவாக்கிய ஒரு இயக்கம். தமிழ் பேசும் மக்களின் மேன்மைக்காக எதையுமே தியாகம் செய்ய வல்லவர்கள் இக்கட்சியில் இருப்பதனுல் விடுதலை பெறுவது நிச்சயம்' என்று கூறினுர்.

### தியாகிகளின் கட்சி

திரு. வ. பாலசிங்கம் பேசும் போது இந்நாட்டில்



பொ. மாணிக்கவாசகர்

எந்த ஒரு இயக்கமும் எந்த ஒரு பிரச்சினைக்கும் தியாகம் செய்ய முன் வரவில்லை, ஆனுல் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தமிழுக்காக தங்கள் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணிக்கச் சித்தமாயுள்ளவர்கள். எமது தலைவர்கள் போராட்டத்தின் போது காடையர்களின் கல்லெறிக்கும், பொலீசாரின் குண்டாந்தடிக்கும் இலக்காகி உயிர் துறந்துள்ளனர். இத்தகைய தியாகத்தைச் செய்ய இந்நாட்டில் வேறு எந்தக்கட்சி முன் வந்தது?' என்று கேட்டார்.

நியாயவாதி ஆ. தவராசா கருத்துரை வழங்கும் போது, 'இந்நாட்டின் சுதந்திரத்துக்கு தமிழ்த் தலைவர்களே வித்திட்டனர் ஆனுல், இன்று சுதந்திரத்தின் பயனை அனுபவிக்கும் தகுதியை தமிழர்கள் பெற வொட்டாமல் சிங்கள அரசியல் வாதிகள் தடுக்க முற்படுகின்றனர்.

இந்நாடு பெற்ற சுதந்திரத்தை தமிழ் பேசும் மக்களும் பகிர்ந்து கொள்ள நல்ல வாய்ப்பினை நல்கக் கூடிய கட்சி தமிழரசுக்கட்சி ஒன்றேதான்' என்றுர்.

மற்றும் வழக்கறிஞர் திரு. சாம். தம்பிமுத்து, திரு. அற்புதராசா குரூஸ், திரு க. கந்தசாமி, செல்வி லோகித ராசா, திரு நல்லரத்தினம், திரு. கே. இராசநாயகம், திரு. இ. நாகராசன் ஆகியோரும் பேசினுர்கள்.

திரு. பி. அந்தோனிப்பிள்ளை குழுவினர் இயக்கப் பாடல்களைப் பாடினர். செல்வி பானுமதி மாணிக்கவாசகர் குழுவினர் தமிழ் வாழ்த்துப்பாட கூட்டம் முடிவுற்றது.

### 28-2-65ல் பொன்னரின் சூழ்ச்சிகள் அம்பலமாகும்

திரு. பொன்னம்பலத்தை அண்டி, தமிழ் பேசும் இனத்தை வழி நடத்தத் தலைமை தாங்க வருமாறு நாம் அழைத்ததாக காங்கிரஸ் காரர்கள் கதை கட்டுகின்றனர். நாம் யாழ்ப்பாணக் கூட்டங்களில் கலந்து கொண்ட வேளையில் இக்கருத்து வெளியாகாமல் நாம் ஊர் திருப்பியதும் யாழ்ப்பாணத்தில் இப் பிரச்சினை கிளப்பப்பட்டுள்ளது. சவாலும் விடப்பட்டுள்ளது.

'கன்னியவான்கள்' என்ற ரீதியில் பொன்னருக்கும்எமக்கும் இடையே ஏற்பட்ட பேச்சுக்கள்முழு விபரத்தையும் 28-2-65ல் மட்டக்களப்பில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில், தந்தை செல்வா முன்னிலையில் வெளியிடப் போகின்றேம். அத்துடன் திரு பொன்னம்பலத்தின் சூழ்ச்சித் திட்டங்களையும் வெளியிடுவதுடன் பல இலட்சக் கணக்கான பிரதிகளையும் அச்சுவாகன மேற்றிப் பறக்கவிடப் போகிறேம். ஆகவே 28ம் திகதிவரை பொறுத்திருங்கள்.

இவ்வாறு திரு. செ. இராசதுரை திரு. பொன்னம்பலத்தின் ஆதரவாளர்கள் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரத்துக்குப் பதிலிறுக்கும் போது கூறினுர்.


**வேல் படை மருந்து**

வண்டுகடி, தேமல், ஊறல், படர்தாமரை, தழுவணி, சித்தவெடிப்பு, நாட்பட்ட கக்கூஸ்பத்து, தண்ணீர்கடி, கரப்பான்

முதலிய சர்மவியாதிகளைக் குணப்படுத்தும் ஓர் சிறந்த களிம்பு.

விலை ரூ. 1-50 தபால் செலவு வேறு

தயாரிப்பவர்கள்:

S. P. S. ஜெயம் அன் கோ.,

மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

எம். ஏ. ஆர். எஸ். மனுவேல் நாடார் அன் கோ.,

34, செட்டியார் தெரு, கொழும்பு.


## மக்கள் குரல்

### டட்லியும் பொன்னரும்

'தமிழில் பேச முடியவில்லையே' என்று திரு. டட்லி சேனநாயக்கா இருவாரங்களுக்கு முன்னர் ஏருவூரில் ஒரு கூட்டத்தில் வருத்தப்பட்டார். இதே வேளையில் தமிழுக்காகப் பாடுபடுபவரெனக் கூறுபவரும் டட்லியின் வாலைப் பிடிப்பவருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், கொழும்பிலே தமிழர் பிரச்சினையையிட்டு ஒரு கூட்டத்தில் பேசும் போது 'தமிழிலல்லாமல் ஆங்கிலத்தில் நான் பேசுவதற்காக வெட்கமோ துக்கமோ படவில்லை' என்று கூறியிருப்பதை எண்ணிப் பார்க்குமிடத்து நாம் வேதனை அடையாமலிருக்க முடியவில்லை.

எமது மொழியைப் பேச முடியாத ஒருவர்—எமது மொழியை ஒழித்துக் கட்ட முனையும் குழுவைச் சேர்ந்தவர்— எமது மொழியில் பேசமுடியாமைக்கு வருந்தும் வேளையில், எமது மொழியை மேம்படுத்த முயலுவதாகக் கூறும் ஒருவர் எம்மக்கள் மத்தியிலே வேற்று மொழியில் பேசுவதற்கு விழைவதே பெரும் வெட்கக் கேடாகாதா? இத்தகையவர்கள் தமிழைக் காக்கப்போறவர்களல்ல, தமிழைக் காட்டிக் கொடுக்க முனைபவர்கள். இவர்களுக்கு இடம் கொடுத்தால் சில காலத்தில் 'சிங்களத்தில்பேச நான் வெட்கமோ துக்கமோ படவில்லை' என்று தாராளக் கூறுவார்களே!

எம். எம். இ. அலியார்
ஏருவூர்

### விளக்கவுரை தமிழில் வேண்டும்

இப்பொழுது நடைபெற்று வரும் கைத்தொழிற் பொருட்காட்சியில் உள்ள கோள் நிலைக் காட்சி ஒரு கவர்ச்சியான அம்சம் என்று சொல்லுகிருர்கள். கோள் நோக்கு அரங்கு (Planetarium) திறக்கும் வரை அக்கலம் பேசிக் கொள்ளப்பட்டது ஏதோ உண்மைதான். அது திறக்கப்பட்டுக் காட்சிகள் நடைபெறத் தொடங்கியபின், அது ஒரு பகுதியினருக்கே பயன்தரும் வகையில் நிருவகிக்கப்படுகிறது என்பது வெளியாகியிருக்கிறது. தமிழரைப் பொறுத்த வகையில் அது ஒரு மாபெரும் ஏமாற்றம்! காரணம், அக்காட்சியின் விளக்கவுரை சிங்களத்தில் மாத்திரமே கூறப்படுவதுதான்.

கோள்நிலைக் காட்சிபார்ப்பதற்குச் சாதாரண நாள்களில் ஒன்றரை மணித்தியாலமாவது கால் கடுக்க வரிசையில் நிற்றல் வேண்டும். அப்புறம், உள்ளே போக வளர்ந்தோருக்குத் தலைக்கு ஒரு ரூபாவும், சிறுவருக்கு ஐம்பது சதமும் கட்டணம் செலுத்த வேண்டும். இத்தனையும் செய்து, ஒருபெரிய அற்புதத்தைக் காணப் போகிறேம் என்ற ஆவலுடன் உள்ளே நுழைந்து அமருகிறேம். ஆனல், விளக்கு மங்கியதும் எங்களுடைய வியப்பும் ஆவலும் எல்லாம் இடிந்து மண்ணோடு மண்ணுகி விடுகின்றன! விளக்கவுரை சிங்களத்தில் கூறப்படுகிறது. தமிழில் இல்லை! ஆங்கிலத்தில் கூட இல்லை.

பக்கத்தில் இருக்கும் சிங்கள அன்பர் 'ஆ! ஊ!' என்று குதூகலிக்கிருர். நாங்களோ ஒன்றும் புரியாத கொடுமையால் வெதும்புகிறேம்;இந்த விஞ்ஞானப் புதுமையை விளங்கிக் கொள்ள முடியவில்லையே என்ற ஏமாற்றமும் பணத்தைக் கொடுத்ததால் ஏற்பட்ட வயிற்றெரிச்சலும் மனதைத் தகிக்கின்றன. விளக்கவுரை இல்லாமல் கோள்நிலைக் காட்சியில் ஒரு துளியைக் கூட ஒருவர் புரிந்து கொள்ள முடியாது! கல்வியறிவற்ற ஒருவருக்கு நிஜமான வானக்காட்சி, இந்தக் காட்சியிலும் பார்க்க பொருள் நிறைந்ததாக இருக்கும்.

பொருட்காட்சி நிருவாகிகள் இந்தக் காட்சியளவில் தமிழ் மக்களைப் பற்றிச் சற்றேனும் நினைத்துப் பார்த்ததாகவே தெரியவில்லை. சிங்களத்திலும் தமிழிலும் விளக்கவுரைகள் தயாரித்து, ஒவ்வொரு மொழியினருக்கும் வெவ்வேறன காட்சிகள் நடாத்தி வரலாமே! விளக்கவுரை இன்றி இந்தக் காட்சியைப் பார்ப்பது நிஜமான வான மண்டலத்தைப் பார்ப்பதும் ஒன்றுதான், என்பதை இக்காட்சிக்குச் சென்று ஏமாந்த ஒவ்வொரு தமிழரும் ஒப்புக்கொள்வார்கள்.

வேந்தன்.
கொழும்பு-13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தமிழர் நாகரீகமே மலாயாவின் நாகரிகத் தளம்

பண்பும் பரந்த அறிவும் ஒருங்குகே கொண்ட அந்த மலாய் மொழிப் பேராசிரியர் மலாய் மொழிக்கும் தமிழ் மொழிக்குமுள்ள ஒற்றுமைகளைப் பலவகையாக விளக்கினார். சொற்கள், சொற்றொடர்கள், வாக்கிய அமைப்புக்கள் முதலியவற்றை ஒப்பிட்டுக் காட்டினார். அரசர்களுடைய முடிசூட்டு விழா முதல் மக்களின் திருமண விழா வரை எல்லா விழாக்களிலும் தமிழ் நாட்டு முறை இழையோடியுளது என்று உள்ளதை உள்ளவாறு உரைத்தார். சுருங்கக் கூறின் திராவிட நாகரீகமே மலாயாவின் நாகரிகத்தின் தளமென அவர் நவின்றார். உண்மையை ஒழிக்காமல் உறுதியுடன் உரைத்த அவரின் பெருந்தகைமை என்னைப்பெருவியப்பிலாழ்த்திற்று.

திரு. திருநாவுக்கரசு அவர்கள் பின்வர் என்னை நாட்டு நூல் நிலையத்துக்கு அழைத்துச் சென்றார். இந் நூல் நிலையக் கூட்டத்திலேயே அவர் பணியாற்றும் நாட்டு மொழிக் கழகமும் உளது. நூல் நிலையத்தில் தமிழுக்கெனத் தனிப் பகுதி இருக்கிறது. கொழும்புப் பொது மக்கள் நூல் நிலையத்தின் ஆட்சிக் குழுவிற் சில ஆண்டுகள் பணியாற்றினேன். ஆகையால் அந் நூல் நிலைய அமைப்பு முறைகள், ஆட்சி முறைகள் முதலியன பற்றி அறிதலிலும் ஈடுபட்டேன்.

### தமிழ் நூல்கள்

கொழும்பு மாநகரில் உள்ள மக்களில் அரைப் பங்குக்கு மேற்பட்டோர் தமிழ் மக்கள் எனினும் கொழும்பு நூல் நிலையத்தில் தொடக்கத்தில் நானூறு தமிழ் நூல்கள் கூட இல்லை. எனது தூண்டுதலால், நான் எழுதிக் கொடுத்த பட்டியலில் உள்ள அறுநூறுக்கு மேற்பட்ட தமிழ் நூல்கள் வாங்கப்பட்டன. இந்தியாவிலிருந்து "தமிழ் நாடு" எனும் நாளேட்டையும் சிங்கப்பூரிலிருந்து "தமிழ் முரசு" எனும் நாளேட்டையும் வருவிக்க வேண்டுமெனும் என் வேண்டுகோளை நூல் நிலையக் குழுவினர் ஏற்று இவ்விரு ஏடுகளையும் வருவித்தனர். மேலும் பல தமிழ் நூல்களைக்கொழும்பு நூல் நிலையத்துக்கு வருவிக்கச் செய்த என் முயற்சிக்குப் பல தடைகள் ஆட்சியாளர்களால் உண்டாக்கப்பட்டன. சென்ற இரண்டு ஆண்டுகளாக நூல்நிலையக் குழுவுக்கு கொழும்பு மாநகர சபை என்னை நியமிக்கவுமில்லை. தமிழை ஒதுக்கி ஒழிக்க வேண்டுமென்று இலங்கை அரசு சூழ்ச்சி செய்யும் சூழ்நிலை




யில், கொழும்பு நூல் நிலையத் தமிழ்ப் பகுதியை வளர்ச்சியுறச் செய்வது இலகுவான செயலன்று.

சிங்கப்பூரிலே பத்து வீத மக்களே தமிழர்கள். எனினும் அந்நகரின் நூல் நிலையத்திலுள்ள தமிழ்ப் பகுதி ஆண்டு தோறும் எவ்விதத் தடையுமின்றி வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. 1957ல் தொடங்கப்பட்ட தமிழ்ப் பகுதியில் ஆண்டு தோறும் ஆயிரக் கணக்கில் நூல்கள் சேர்க்கப்பட்டுள. நான் பார்வையிட்ட பொழுது பதினாயிரத்துக்கு மேற்பட்ட நூல்கள் இருந்தன. பெரியவர்களுக்குஞ் சிறுவர்களுக்குமாகத் தனித் தனிப் பிரிவுகளும் உள.

### இலங்கை நூல்கள் இல்லை

தமிழகத்திலே வெளியிடப்படும் புது நூல்களை விரைவில் வாங்கிச் சேர்க்கிறார்கள் என்பதற்கு நண்பர் திருநாவுக்கரசு எனது 'நூற்றாண்டுகளில் தமிழ்' என்பதைச் சான்றாகக் காட்டினார், 1961 மார்கழியில் இன்ப நிலையம் வெளியிட்ட இந் நூலை 1962லே வாங்கிவைத்தனர். தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட நூல்களை வாங்குவதில் எவ்வித இடர்பாடுமில்லை எனவும் இலங்கையில் வெளியாகும் நூல்களைப் பெற முடியாதிருக்கிறதெனவும் நூல் நிலையத்தவர்கள் கூறினர்.

இலங்கை அரசின் கண்மூடித்தனமான கட்டுப்பாடுகளால் இலங்கையில் வெளியிடப்படும் தமிழ் நூல்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியாமல் இருக்கிறது. இதனால் நூலாசிரியர்களுக்கு மட்டுமன்றி இலங்கை அரசுக்கும் நட்டமுண்டாகிறது. இதனால் பிறநாட்டு நாணயத்தைப் பெறத்தக்க வழியினை அரசாங்கம் அடைத்து விட்டது.

## (14)

சிங்கப்பூரிலே தமிழ் மொழி எல்லாத் துறைகளிலும் வளம் பெறுதற்கு எவ்வித தடையுமில்லை. தமிழ் மக்களின் ஆர்வத்துக்கும் ஆதரவுக்கும் ஏற்பத் தமிழை அங்கு வளர்க்கலாம். தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் படிப்பதற்கும் வாய்ப்புண்டு. உமறுப் புலவர் உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் தமிழ் வாயிலாக எல்லாப் பாடங்களையும் கற்கின்றனர்.

### தமிழ் நிறுவனங்கள்

தமிழையும் தமிழ்க் கலைகளையும் வளர்ப்பதற்கு அங்கு பற்பல நிறுவனங்கள் உள. தமிழர் பிரதிநிதித்துவச் சபையிலே பல நிறுவனங்கள் சேர்ந்திருக்கின்றன. இந்தச் சபையினர் பல ஆண்டுகளாகத் தைப்பொங்கற் திருநாளைத் தமிழர் திருநாளாகச் சிறப்புறக் கொண்டாடி வருகின்றனர். இவர்கள் கொண்டாடும் இவ்விழாவுக்குப் பதினாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வருகை தருவர். இந்தியாவிலிருந்தும், இலங்கையிலிருந்தும தமிழ்ப் பேராறிஞர்களை ஆண்டுதோறும் இவ் விழாக்களுக்கு அழைப்பார்கள். இந்த ஆண்டு விழாவுக்கு என்னை அழைத்திருந்தார்கள், நான் தில்லிக்குப் போகவேண்டியிருந்ததால் அவர்களுடைய அழைப்பை ஏற்க முடியவில்லை.

இத் தமிழர் பிரதிநிதித்துவ சபையினர் சிங்கப்பூரில் மட்டுமன்றி மலாயா முழுவதும் தமிழர் திருநாளைப் பெரு விழாவாகக் கொண்டாடச் செய்துளர். இதனாலே தமிழர்களிடை ஒற்றுமையும் இன உணர்ச்சியும் தாய்மொழி ஆர்வமும் பெருகியுள. இப்பணியினைச் சிறப்புறச் செய்த முன்னணித் தொண்டர்களிலே தமிழவேள் சாரங்கபாணி, திரு. தி. செல்வகணபதி, திரு. வி. திருநாவுக்கரசு, திரு. அ. முருகையன், திரு. ஆ. சச்சிதானந்தன் முதலானோர் குறிப்பிடத் தக்கவர்கள்.




---

— குட்டி நாடகம் —

# தேர்தலோ தேர்தல்!

— கலைவாணன் —

இடம்- அபேட்சகர் வீடு.
(அபேட்சகர் அன்றையப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருக்கிறார். அப்போது......)

மனைவி:- நீங்க எடுப்பார் கைப்பிள்ளையாக இருப்பது கொஞ்சங்கூட நல்லாயில்ல...ஏதோ இப்ப தான் நீங்க தொழில் துறையில் ஈடுபட்டுக் கொஞ்சம் பணம் சேர்த்து இருக்கிறீங்க...! தட்டுக்காரர் சொல்லைக் கேட்டு 'எலக்ஷ'னில் இறங்கிட்டீங்களே... நமக்கு இந்த எலக்ஷன் வேண்டாம், வேண்டாம் என்று எத்தனை தடவை பன்னிப் பன்னிக் கூறினேன்... கேட்டீங்களா? இரச்செப் போட்டு இப்ப முழிக்கிறீங்க...

அபேட்:- பொது மக்கள் என்னை எலக்ஷன் கேட்கச் சொன்னதால தானே நான் கேட்கிறன்...

மனை:- ஏன் வீணாப் புளுகுறீங்க...? பொது சனமா உங்களை வந்து கேட்டது? உங்கட இனத்தாக்கள் நாலைந்து பேரும், தட்டிக் குடிக்கிறவனுகள் நாலைந்து பேரும் உங்களைத் தட்டிவிட, ஏன் வீணாகப் பொது சனத்தில் பழியப் போடுறீங்க...

அபேட்:- நீ பேசிற விதத்தைப் பாத்தா...நீ கூட எனக்கு வோட்டுப் போடமாட்டா போலிருக்கே...

மனை: (ஆத்திரத்துடன்)என் விருப்பத்திற்கா நீங்க எலக்ஷன் கேட்டீர்கள்? வெல்ல முடியாது என்று அறிஞ்ச பிறகும் வீணாக ஏன் பணத்தையும், நேரத்தையும் செலவழிக்க வேணும்...?

(இதே நேரத்தில் வாசலில் யாரோ கூப்பிடும் ஓசை கேட்கிறது)

அபேட்:- டேய் முனியா! யாரோ வந்திருக்கிறாப் போலிருக்கு போய்க் கவனி—வாறன்...

முனியன்:- (முன்னுக்கு ஓடிப்போய்) அடடே! நீங்களா? வாங்க, வாங்க...எப்படிச் சுகம்? ஐயையோ...என் நிலத்தில் இருக்கிறீங்க...?

முருகர்:- என்னடாம்பி புதிசாப் பேசிற...நான் வந்தா நெடுக இந்தத் தாழ்வாரத்தில தானே வழக்கமாக இருக்கிறநான்.

முனி:- அண்ணே! போன கதையை விட்டுத் தள்ளுங்க...எலக்ஷன் முடியுமட்டும் ஒருவரையும் நிலத்தில் இருக்க விடக்கூடாது, கதிரையில் தான் இருக்கச் [illegible] வேணும் என்று [illegible] சொல்லியிருக்கார்... எழும்பிக் கதிரையில் இருங்க ... இல்லாட்டி ஐயா என்னைத்தான் கோபிப்பார்......

முருகர்:- இந்த மாதிரி எலக்ஷனுக்குப் பிறகும் இருந்தா நல்லந்தாண்டா தம்பி...மெய் தான், இங்க கிடந்த பெரிய நாயெங்க? 'லொள், லொள்' என்று கத்திக் கொண்டு கிடக்குமே ... அதக்கண்டா எனக்குச் சரியான பயம்...

முனி:- எலக்ஷன் முடியுமட்டும் நாயைப் பின்னால் கட்டச் சொல்லி ஐயாவின் உத்தரவு வீட்டிற்குப் பின்னால் கட்டிக் கிடக்கு...அது சரி.. உங்கட பக்கம் எலக்ஷன் பாடுகள் எப்பிடிக் கிடக்குது?

முருகர்:- உனக்குத் தெரியாத விஷயமா? எல்லாரும் தமிழ் அரசுக் கட்சிக் கெண்டுதான் நிக்கிறனுகள்...

முனி:- அண்ணே! நமக் [illegible] தில் மட்டும் சனங்களுக்கு தலை காட்டுற நம்மட ஐயாவைப் போலவா அவனுகள்...?

முருகர்:- இதென்னடாம்பி.. எண்ட இரண்டு பொடியனுகளும், பொஞ்சாதியும் தமிழரசிக் கட்சிக்குத்தான் வோட்டுப் போடுவப்; ஊரவன், சாதியவன், பெரிய மனிசன் இதொண்டுக்கும் ஏமாறமாட்டம் என்டு நிக்குதுகள்... முனியா...! தப்பித்தவறி இந்த விசயத்த ஐயாட்டச் சொல்லிராத......

அபேட்:- (வந்து கொண்டே) எப்படி மிஸ்டர் முருகர்? உங்க பக்கமெல்லாம் எப்படி இருக்கு...?

முருகர்:- இதென்ன தம்பி... எல்லாரும் உங்களுக்கெண்டுதான் நிற்குதுகள் ஒருவன் கூட மாறில்ல...

(அதே நேரத்தில் கணபதியும், வயிரனும் மது மயக்கத்துடன் வருகின்றனர்)

அபேட்:- வாங்க, வாங்க உட்காருங்க...உங்க ஊர்ப் பாடெல்லாம் எப்படி?

கணபதி:- இதென்ன கேள்வி...எல்லாம் உங்களுக்குத் தானே...எதிராக நிண்ட ஆக்களையும் நாங்க திருப்பிப் போட்டம்...

வயிரன் உங்களுக்கு எதிராக நிக்கிறவனுகளுக்கெல்லாம் அடிதான் குடுப்பம்...எங்கட ஊரில எல்லாரையும் பயங்காட்டி வெருட்டி வைத்திருக்கம்...

(10-ம் பக்கம் பார்க்க)


## 'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!

ஏன்?

- அதன் சுகந்த நறுமணம்
- அதன் நிலைத்து எரியும் தன்மை
- நவீன தயாரிப்பு
- அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் "மாய ஜோதி"

ந. செல்லத்துரை, மாய ஜோதி இன்டஸ்றீஸ்.
128/3 [illegible], கொழும்பு—7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 பெப்புருவரி மாதம் 28ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண்: 3411 த. பெ. 1183

# சர்வாதிகாரம்

தனக்கென வரையறுக்கப்பட்ட ஒரு கொள்கை இருந்தால் அதனை விளக்கிக் கூறி, அக்கொள்கைக்கு ஆதரவு அளிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொள்ளலாம். திட்ட வட்டமான கொள்கையொன்று இல்லையேல் மக்களை மயக்குவதற்காகப் பித்தலாட்டப் பிரசாரம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். திரு பொன்னம்பலத்துக்கு இன்று ஏற்பட்டிருப்பதும் இதே பரிதாப நிலைதான்.

அதுதான் அவர் இன்று சண்டப் பிரசண்டம் செய்யும் "சர்வாதிகாரம்" பற்றிய பிரசாரம். "சர்வாதிகாரம் தோன்றும் அறிகுறிகள் தென்படுகின்றன. அதனை எதிர்ப்பதற்காகத் தெற்கே கிளம்பியுள்ள ஜனநாயக சக்திகளுடன் தமிழர்களும் சேர்ந்து கொள்ள வேண்டும். அதையும் நானே.. நானே.. நானே செய்ய முடியும்! எனவே என்னையும் எனது கூட்டாளிகளையும் ஆதரியுங்கள்!" என்று சர்வாதிகாரத் தொனியிற் பேசித் திரிகிறார் திரு. பொன்னம்பலம்.

இடதுசாரிகளின் சர்வாதிகாரம் ஏற்படுவதையே அவர் குறிப்பிடுகிறார் என்பது அவரது போக்கிலிருந்து புலனாகிறது. இடதுசாரிகளின் சர்வாதிகாரம் ஏற்படுவதைப் போலவே வலதுசாரிகளின் சர்வாதிகாரமும் ஏற்பட முடியும். இதுபற்றி திரு. பொன்னம்பலம் மௌனம் சாதிப்பதேன்?

வலதுசாரிகளின் சர்வாதிகாரம் ஏற்படுமானால், அதனை எதிர்ப்பதற்காக ஜனநாயக சக்திகளுடன் சேர்ந்து கூட்டணி அமைத்துக்கொள்ள வேண்டுமென அவர் இதுவரை கூறவேயில்லை. அப்படிக் கூறாமலிருப்பதிலிருந்து வலதுசாரிகளின் சர்வாதிகாரத்தை அவர் ஆதரிக்கிறாரோ என்று மக்கள் எண்ணுவதற்கு இடமேற்படுவளது.

தமிழ் பேசும் மக்களோ எல்லாவித சர்வாதிகாரங்களையும் எதிர்பவர்கள் இடதாயினுஞ்சரி, வலதாயினுஞ்சரி இந்நாட்டில் சர்வாதிகாரம் தலைதூக்க அவர்கள் அனுமதிக்கவே மாட்டார்கள் என்பதை திரு. பொன்னம்பலமும் அவரது ஊதுகுழல்களும் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். சர்வாதிகாரங்களை எதிர்த்து முறியடிக்கவேண்டுமென்பதில் தமிழ் பேசும் மக்களிடையே என்றுமே கருத்து வேற்றுமை இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை.

பாகிஸ்தானில் அயூப்கான் சர்வாதிகாரம், சீனாவின் மாசேதுங் சர்வாதிகாரம், ஹிட்லர் பாணி சர்வாதிகாரம், முசோலினி பாணி சர்வாதிகாரம் முதலிய எல்லாவித சர்வாதிகாரங்களையும் நஞ்செனவெறுப்பவர்கள் தமிழ் பேசும் மக்கள். இத்தகைய மக்களிடம் வந்து சர்வாதிகாரத் தோரணையில் "சர்வாதிகாரப்" பூச்சாண்டி காட்டுவது மயிரிழையிற் தொங்குவதைப் போன்ற அபாயகரமான விளையாட்டு என்பதைத் திரு. பொன்னம்பலம் தெரிந்து கொள்ள வேண்டும்.

தானும் தனது வேட்பாளர்களும் மட்டுமே அப்பழுக்கற்ற ஜனநாயக வாதிகளைப் போலவும், தெற்கே தோன்றப் போகும் சர்வாதிகாரத்தை எதிர்க்கத் தாங்களே தகுதியானவர்களைப் போலவும், தமிழரசுக் கட்சியினரும், தமிழரசு வேட்பாளர்களும் ஏதோ சர்வாதிகாரத்தை ஆதரிப்பவர் போலவுமல்லவா பேசுகிறார் தமிழ் காங்கிரஸின் இந்த சர்வாதிகாரத் தலைவர்?

'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பதைப் போல ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகச் சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து தமிழரசுப் பிரதிநிதிகள் துணிவுடன் எடுத்த ஒரு நடவடிக்கையை மட்டும் உதாரணத்துக்காக இங்கு குறிப்பிடுகின்றோம்.

கூட்டரசாங்கம் கொண்டு வந்த பத்திரிகை மசோதா சர்வாதிகாரம் ஏற்பட வழிவகுத்ததாதலின், அதனை எதிர்த்துப் போராடினர், தமிழரசுப் பிரதிநிதிகள். ஆயினும் சிறுபான்மையோரின் உரிமைகளுக்கு உலை வைக்க உடந்தையாயிருந்த இந்தப் பத்திரிகைகள் மீது கட்சிக்கு கிஞ்சிற்றும் அனுதாபம் கிடையாது. சர்வாதிகாரப் போக்கு வளர்வதைத் தடை செய்ய வேண்டுமென்பதில் தமிழரசுப் பிரதிநிதிகள் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார்களென்றால், ஆட்சியாளர் கடைசி நிமிடத்தில் தமிழ் பேசும் மக்களின் சில முக்கிய கோரிக்கைகளை வழங்குவதாகக் கூறியும் கூட, சர்வாதிகாரப் போக்கைத் தகர்த்தெறிய வேண்டுமென்பதற்காக அரசாங்கத்தை வீழ்த்தினர். அந்த அளவுக்கு ஜனநாயகத்திலே ஊறித் திளைத்தவர்கள் தமிழரசு வாதிகள்.

சர்வாதிகாரம் பற்றி வாய்ப் பந்தல் போடும் திரு. பொன்னம்பலம் சர்வாதிகாரத்தை எப்படி எதிர்த்துப் போராடி முறியடிப்பதென்ற வழிவகைகளையோ, அதற்கான பரிகாரத்தையோ கூறவில்லை. கூறவும் முடியாது. ஆனால் தமிழரசுக் கட்சி செயல் மூலமே சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து இந்நாட்டின் ஜனநாயகப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தது என்பதற்கு மேற்கண்ட ஓர் உதாரணமே போதுமானது.

ஒற்றையாட்சி முறையிலேயே சர்வாதிகாரம் தோன்ற முடியும். சமஷ்டி அமைப்பிலே அதற்கு வாய்ப்போ இடமோ கிடையாது. காரணம், உலகிலே பூரண ஜனநாயக ஆட்சி முறை சமஷ்டி முறையிலேயே அடங்கியுள்ளது. இது திரு. பொன்னம்பலத்துக்குத் தெரியாதிருக்க முடியாது. ஆனால் மனச்சாட்சிக்கிணங்க அதனைப் பகிரங்கமாக ஏற்றுக் கொள்வதற்கான துணிவும் பெருந்தன்மையும் அவரிடம் இருக்க வேண்டுமே!

ஒற்றையாட்சியில் அதிகாரம் யார் கையிலிருக்கிறதோ, அவர்களே சர்வாதிகாரத்தை நிறுவ முடியும். எனவே இந்நாட்டில் ஒரு சர்வாதிகார ஆட்சியை நிறுவக்கூடியவர்கள் சிங்களவர்களேயன்றி தமிழர்களோ முஸ்லிம்களோ அல்ல.

தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், 1947 தொட்டு இதுவரை பாராளுமன்ற ஜனநாயகப் போர்வையில் சிங்களச் சர்வாதிகாரமே நடைபெற்று வந்துள்ளது. 1948 முதல் 1956 வரை நடந்த சிங்கள சர்வாதிகார ஆட்சிக்கு பொன்னம்பலம், நல்லையா, குமாரசாமி போன்றோர் பாகந்தாங்கிகளாக நின்றனர். குடியுரிமைப் பறிமுதல், தமிழ்ப் பகுதிகளுக்குரிய நிலங்களை ஆக்கிரமித்தல் ஆகிய சர்வாதிகார நடவடிக்கைகள் இக்காலத்திற்தான் ஆரம்பமாயின.

இத்தகைய நபர்களை 1956க்குப் பிறகு ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் பேசும் மக்கள் விரட்டியடிக்கத் தொடங்கியதால், அதன்பின் சிங்கள சர்வாதிகார ஆட்சி 'ஐந்தாம் படை'த் தமிழர்களின் உதவியின்றியே நடைபெற்று வந்தது. தமிழ் பேசும் மக்களை நேரடியாகப் பாதித்துள்ள சிங்களம் மட்டும் சட்டத்தை ஒரு தமிழன் கூட ஆதரிக்கவில்லை. தமிழரின் சம்மதமின்றி நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டம் இன்று அவர்கள் மீதே திணிக்கப்படுகிறது. இது சர்வாதிகாரமின்றி வேறென்ன?

இத்தகைய சர்வாதிகாரச் சட்டங்களைப் பாராளுமன்றத்திலேயே குழிதோண்டிப் புதைப்பதற்கு இந்த ஒற்றையாட்சியின் கீழ் பாராளுமன்றத்தில் போதிய பிரதிநிதித்துவ விகிதாசாரம் தமிழ் பேசும் மக்களுக்குக் கிடையாது. 151 பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தில் வட, கிழக்கு மாகாணங்களிலிருந்து தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் 23 பேர்களைத்தான் தெரிவுசெய்யக் கூடியதாயிருக்கிறது. சிங்களக் குடியேற்றத்தின் விளைவாக மூதூரையும் திருமலையையும் சிங்களவர் கைப்பற்றக்கூடிய நிலை ஏற்பட்டிருப்பதால் பிரதிநிதிகள் தொகை 21-ஆகக் குறைந்து விடக் கூடும். திரு. பொன்னம்பலம், திரு. நல்லையா போன்றோர் செய்த துரோகத்தின் நேரடி விளைவே இது.

தமிழ் பேசும் மக்களைக் கொன்று குவித்து இனத்தை அழிப்பதற்காக ஒரு சட்டம் இயற்றி அதனை அமுல் நடத்த வேண்டுமென்றால் அதற்கும் இந்த ஒற்றையாட்சியில் இடமுண்டு. அவ்வாறு செய்ய அரசியற் சட்டத்தைத் திருத்த வேண்டுமானாலும் அதையும் செய்ய ஒற்றையாட்சி இடம் கொடுக்கும்.

ஒற்றையாட்சியின் சிறப்பினைப் பொன்னம்பலம் கோஷ்டி என்னதான் வாயாரப் புகழ்ந்தாலும், ஒற்றையாட்சியின்கீழ் கடந்த 19 ஆண்டுகளாக தாங்கள் அனுபவித்த இன்னல்களையும் துன்பங்களையும் தமிழ் பேசும் மக்கள் மறக்கவே மாட்டார்கள்.

ஆகவே ஒற்றையாட்சித் திட்டத்தைத் தகர்த்தெறிந்து, ஒரு புதிய அரசியற் திட்டத்தை (சமஷ்டித் திட்டம் சாலச்சிறந்தது) வகுக்க வேண்டும். அதனைச் செய்ய பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் எமக்குப் போதாதிருக்கிறது. எனவே பாராளுமன்றத்துக்கு வெளியேயும் எமது போராட்டங்களை விஸ்தரிக்க வேண்டும். அதன் முதற்படி ஒற்றையாட்சிக்கு சவுக்கடி கொடுக்கும் எட்டப்பர் கும்பல்களை ஒழிப்பதாகும். அதனைச் செய்ய தமிழ் பேசும் மக்கள் இத்தேர்தலைச் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதே எமது வேண்டுகோள்.

# அறப்போரே ஆக்கம் தரும்

## அகிம்சை நெறியே விடுதலை அளிக்கும்

இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம் உரிமைகளை முழுவதையும் பெற்று வாழ சமஷ்டி ஆட்சி ஒன்றே சிறந்தது என்பதனை தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிந்து கொண்டனர். அகிம்சை வழியில் போராடி சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துவதற்காகப் பாடுபட்டுவரும் தமிழரசுக் கட்சிக்கு தமிழ் பேசும் மக்கள் பேராதரவு கொடுத்துவரும் தன்மை ஒன்றே மக்களின் கருத்தை வெளிப்படையாக்குகிறது.

நமது வருங்கால தமிழ் பேசும் சமுதாயம் வளமுடன் வாழ வேண்டுமானால் நாம் தான் எத்தகைய தியாகத்தையும் புரிந்து செம்மையான பாதை ஒன்றினை அமைத்து வைக்க வேண்டியவர்களாவோம். இதைச் செய்யத் தவறின் வருங்கால எமது சமுதாயத்தின் மீளா அடிமைத் தனத்துக்கும், அழிவுக்கும் நாமே வழி வகுத்தவர்களாவோம்.

### மூன்று மார்க்கங்கள்

தமிழ் பேசும் சமுதாயத்தின் வருங்காலத்தை மூன்று வழிகளே நிர்ணயிக்க முடியும்என்று தமிழரசுத்தந்தை அடிக்கடி கூறிவருகிறார்.

1. சிங்களத்தைஏற்று சரணாகதி அடைந்துவிடுவது
2. எதிர்த்து நின்று ஆயுதப் போர் புரிவது.
3. அறப்போர் மூலம் அகிம்சை நெறிநின்று இறுதிவரை உரிமைக் கிளர்ச்சியினை நடாத்துவது.

தன்மானமிழந்து, எமது சமுதாயத்தை அழித்து ஒழிப்பதானால் முதல வழியையே நாம் கடைப்பிடிக்க வேண்டும். அடுத்த வழி சாத்தியமாகாதது. ஏனெனில் நவநவமான யுத்த சாதனங்களையும் அதிகாரம், படை முதலியவற்றையும் கொண்டு ஆட்சி செலுத்தும் பெருவாரி இனத்துவருடன் சிறுபான்மையினர் பொருதுவதினால் நாமே அழிந்துபட வேண்டி ஏற்படும்.

ஆகவே,

இறுதியாகவுள்ள அறப்போர் மூலமே எமது இலட்சியங்கள்ஈடேற வழி உண்டு. இதனாலே தான் தமிழ் பேசும் இனம் அறப்போர் வழியினையே தனது ஈடேற்றத்துக்கு உரிய மார்க்கமாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

அறப்போர், அகிம்சை, சத்தியாக்கிரகம் போன்றவற்றால் எதையுமே சாதித்து விட முடியாது என்று இந்நாட்களிலும் கூறுபவர்கள் உளர். அதிகாரவர்க்கத்தினர் கடைப் பிடிக்கும் அநியாய அக்கிரமங்களைக் களைந்தெறிய இதுவே சிறந்த மார்க்கமென அண்ணல் காந்தி அடிகள் நமக்குப் போதித்துள்ளார்.

### சர்ச்சிலே சரணடைந்தார்

அகங்காரம் பிடித்த ஹிட்லரின் கொட்டத்தை ஆயுத பலத்தால் அடிசாய்த்த ஜனநாயக இரட்சகரான வின்சன்ட் சர்ச்சிலின் ஆதிக்க ஆசையினை காந்திஜியின் சத்திய நெறி சாய்த்து வீழ்த்திய கதையினை ஆத்மீகசக்தியில் நம்பிக்கை கொண்ட எவருமே மறுக்க மாட்டார்கள்.

உலகை உலுக்கிய போரின் கோரப்பிடியிலிருந்து உலகத்தைச் சிறப்பாகவும், அழிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த பிரிட்டனை குறிப்பாகவும் காப்பாற்றிய வீரன் சர்ச்சில், யுத்தத்தைத் தொடர்ந்து வந்த தேர்தலில் மண் கவ்வினார். இதற்குப் பலரும்பலதரப்பட்ட காரணங்களைக் கூறலாம். ஆனால் காந்தி மகான் கடைப்பிடித்த சத்தியாக்கிரகத்தின் ஆத்மீகபலமே சர்ச்சிலின் ஆட்சியை வீழ்த்தி திரு. அட்லியை அரசபீடமேற்றி, இந்தியாவுக்கு விடுதலையினையும் வழங்க வைத்தது என்று நாம் துணிந்து கூறுவோம்.

இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் நடாத்திய சத்திய யுத்தத்தின் ஆத்மீக பலமும் வீண் போகவில்லை என்பதை கடந்த காலம் நமக்குக் காண்பித்துள்ளது— எதிர்காலம் எடுத்துரைக்கப் போகிறது!

எமது சக்தியே ஆணவம் பிடித்து ஆடிய ஆட்சியை அடிசாய்த்தது அத்துடன் இனிமேல் இந்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்கும் பொறுப்பையும் தமிழ் பேசும் சமுதாயத்தின் ஒன்றுபட்ட சக்தியே ஏற்கப்போகிறது.

### எச்சரிக்கை அவசியம்

சத்தியாக்கிரகத்தின் மூலம் எமது கோரிக்கைகளை நிறைவேற்ற எத்தனிக்கும் நாம் எதிர்காலத்தை மிகவும் விழிப்புடன் எதிர்நோக்கியாக வேண்டியநிர்ப்பந்தத்திலுள்ளோம்.

சொந்த நலம் கொண்டவர்கள், சூதுமதி கொண்டவர்கள், அகப்பட்டதைச் சுருட்ட ஆருடம் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் ஆகிய பல பேர்கள் இன்று தமிழ் பேசும் சமுதாயத்தை அணுகி ஆதரவு தேட முனைந்து விட்டனர். உள்நாக்கிலே விஷமும் உதட்டிலே அமிர்தமும் தடவிக் கொண்டு ஒன்றுமே அறியாதவர்கள் போல் வேடமிட்டு வேடிக்கை புரியும் இவர்களிடம் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

### ஒரே குரல் ஒலிக்கட்டும்

அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, உரிமைகளை இழந்து பரிதவிக்கும் தமிழ் பேசும் மக்களின் மேன்மைக்காக ஒலிக்கும் குரல் ஒரே தொனியுடையதாகவிருக்க வேண்டும். ஒன்றுபட்ட கருத்துடையோர் இணைந்தால்தான் ஒற்றுமையுடன் செயலாற்றி உயர்வடைய முடியும். வலிமை பொருந்திய எதிரியின் பலத்தை முறியடிக்க ஒருமித்த சக்தியே உதவும்.

பாராளுமன்றத்தின் உள்ளும் புறமும் ஏகக்குரல் எழுப்பி தமிழ் பேசும் இனத்தின் ஏற்றத்துக்காகப் பாடுபடும் தலைவர்களை நாம் தேர்ந்தெடுக்கத் தவறினால் எமது எதிர்காலம் இருள் சூழ்ந்துவிடுவது நிச்சயம்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி அமைச்சருக்கு எதிராக கறுப்புக் கொடி

## ஆர்ப்பாட்டத்துக்கு ஆயத்தம்

## வாலிப முன்னணியின் மும்முரமான ஏற்பாடுகள்

## தலைவர்களுக்கும் தொண்டருக்கும் அழைப்பு

நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவின் வருகைக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டுவதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருவதாக நமது யாழ்ப்பாணம் நிருபர் தெரிவித்துள்ளார்.

கறுப்புக் கொடி காட்டும் பொறுப்பை இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணி ஏற்றிருப்பதாகவும், அதற்கான நடவடிக்கைகளில் வாலிப முன்னணி உறுப்பினர்கள் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாகவும் தெரிகிறது. வாலிப முன்னணி உறுப்பினர்கள் அனைவரையும் கறுப்புக்கொடி காட்டுவதற்குத் தயாராக இருக்கும்படி, வாலிப முன்னணியின் செயலாளர் ஒரு அறிக்கையில் கேட்டிருக்கிறார்.

கட்டி முடிக்கப் பெறாத கட்டிடத்தைத் திறந்து வைப்பதற்காக நிதி அமைச்சர் வருவது நல்ல நோக்கத்துடனல்ல என்றும், அவரது கட்சி ஆதரவாளர் என இருப்போர்கள் உதவியைப் பயன்படுத்தி இனப் போராட்டத்தினை முறியடிக்கவே வருகிறார் என்றும் அந்த அறிக்கையிற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள், வாலிப முன்னணி செயற்குழு உறுப்பினர்கள், வாலிப முன்னணிக் கிளைச் செயலாளர்கள் ஆகியோருக்கு வாலிப முன்னணிச் செயலாளர் திரு. க. சின்னத்துரை அனுப்பியுள்ள அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

யாழ்ப்பாணக் கச்சேரி அலுவலகக் கட்டிடத்தைக் கோலாகலத்துடன் திறந்து வைப்பதற்காக நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வரவிருப்பதாக அறியப்படுகிறது.

நிதி அமைச்சர் சமசமாஜக் கட்சித் தலைவர் என்றிருந்த போதிலும் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வகுப்புவாத மொழிக்கொள்கையையும் ஏனைய பாரபட்சக் கொள்கைகளையும் ஏற்றிருப்பதால் அவரும் தமிழ் பேசும் மக்களாகிய எமக்கு அடிமைத் தளை பூட்டும் ஒருவராகவே இன்றிருக்கிறார்.

கட்டி முடிவுபெறாத கட்டிடத்தைத் திறந்து வைப்பதற்காக அவர் வருவது நல்ல நோக்கத்துடன் அல்ல. எம் மத்தியில் அவரது கட்சி ஆதரவாளர் என்றிருப்போரின் உதவியைப் பயன்படுத்தி எமது இனப் போராட்டத்தின் ஓர் அம்சமாய் அமைந்த இவ்வித எதிர்ப்பை முறியடிக்கும் நோக்கத்துடனேயே வருகிறார்.

தனிச் சிங்கள அமைச்சர்களின் கோலாகல வருகைக்கு எமது கட்சி எதிர்ப்பு காட்டிக் கொண்டே வருகிறது. இக் கொள்கைக்கு அமைய எங்கள் கட்சித்தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்கள் தக்க முறையிலேயே நிதிஅமைச்சரின் வருகைக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் என்பதைப் பத்திரிகை மூலம் அறிவித்தும் இருக்கிறார். எம் வாலிப முன்னணியின் செயற்குழுவும் இவ்வெதிர்ப்பு இயக்கத்திற்கு முழுஆதரவையும் தருவதாக முடிவு செய்துள்ளது.

இவ்வேளை எம்முள் ஒரு சிலரைக் கொண்டே எம் மினத்தின் விடுதலைப் போருக்கு இடைஞ்சல் விளைவிக்க முயற்சிகள் எடுபடுவதும், இதற்கு எம்மினத்துள்ளேயே சிலர் உடந்தையாய் வர முனைவதும் வேதனைக்குரியதே.


வாலிபத் தோழர்களே! அடிமைத்தளை ஒடிக்க எம் மாலானதைச்செய்யும் பணி காத்து நிற்கிறது. உடனடியாய் உங்கள் பகுதியின் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும்திரட்டி ஆயத்தமாய் இருக்கும்படி பணிவன்புடன் வேண்டுகிறேம்.

### கட்சிக்குள் வாக்கு

**— பூவயன் —**

தொகுதிக் குழைத்திடுவேன்
தகுதியுடையேன் யான்
அகதிக்குக் காத்து
அழகாபுரி அமைப்பேன்
பகுதிகள் தோறும்
பாடசாலைகள் சட்டி
தகுதியுள்ள தலைவன் என்பார்
மயங்காதுன் வாக்கை அளி.

பணங் கண்டு பல்லிளித்துப்
பிணமான தமிழா நிலை
அணங்கென்ற தமிழன்னைக்(கு)
அவமானச் சின்னமடா
பிணமாகி உன் உப்பு
பாடையினில் போம்போதும்
குணம் மாறாக் கொள்கையுடன்
கட்சிக்குள் வாக்கை அளி.



கொழும்பு பண்டாரநாயக்க வீதியிலுள்ள சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் 17-ம் திகதி முதல் லட்சார்ச்சனை, லட்ச ஹோமம், மகாயாகம் முதலியன சிறப்பாக நடைபெற்று முடிவெய்தியது. லட்சார்ச்சனை நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## அறப்போரே ஆக்கம் தரும்..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பேசும் மக்களை வழி நடத்த முன்பு உறுதிபூண்ட தலைவர்கள் தன்னிலை தளர்ந்து தடுமாறி, தன்னலத்துக்காக வாழத் தலைப்பட்ட போதுதான் தமிழ் பேசும் சமுதாயத்தின் தாழ்வுக்கு அத்திவாரமிடப்பட்டது. தமிழ் பேசும் இனத்தின் தாழ்வு நிலைக்கு அத்திவாரமிட்டவர்கள் மீண்டும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தலைநிமிர்ந்து உலாவத் தலைப்பட்டுவிட்டனர். இத்தகைய தீயவர்கள் தலையெடுத்தால், ஓரளவு விழிப்புணர்ச்சி கொண்டு வளரத் துடிக்கும் சமுதாயம் மீண்டும கருகிவிட நேரிடும். ஆகவே தமிழ் பேசும் இனத்தைச் செல்லரிக்க வைக்கும் தீய சக்திகளை முறியடிக்க வேண்டியது கடமையாகிறது.

### பித்தலாட்டக்காரர்

சிறுபான்மை இனத்தவர்களாகிய தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தைச் சீர்குலைத்து, எதிர் காலத்தில் இலங்கையின் ஏகமொழி, ஏக மதம், ஏக இனம் என்ற ஒருமைப்பாட்டினை ஏற்படுத்தவே சிங்கள அரசியல் வாதிகள் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றனர். இத்திட்டத்துக்கு அவர்களுக்கு உறுதுணை புரிவது சோல்பரி அளித்த ஒற்றை ஆட்சிமுறையே. இந்த ஒற்றை ஆட்சித் திட்டத்தால் தமிழ் பேசும் சமுதாயம் வேரோடு அழிந்து பட்டுப் போகுமேயன்றி விடுதலைபெற வழியே கிடையாது.

இப் பேரபாயத்தைச் சிறிதும பொருட்படுத்தாது ஒற்றை ஆட்சித் திட்டத்துள்ளேயே பரிகாரம் தேடப் போவதாகக் கூறுபவர்கள் வெறும் அரசியல் பித்தலாட்டக்காரர்களே.

திரு. பொன்னம்பலமும், அவருடைய தோழர்களும் தான் ஒற்றையாட்சி முறை உகந்தது என்று பிரசாரம் செய்யத் தலைப்பட்டுள்ளனர். திரு. பொன்னம்பலமோ, அவருடைய சகாக்களோ கடந்த காலத்தில் அரசியலரங்கில் போட்ட வேடங்கள் அனைத்தையும் தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிவர். அவர்கள் தருப்பமான மார்க்கத்தை மக்களிடம் கூறவில்லை.

கட்டிய ஆடை கசங்காமல், சொகுசான வாழ்வு ஊறுபடாமல் விடுதலை காணப் போவதாகப் பசப்பித் திரியும் போலித் தலைவர்களின் கபட நாடகம் என்றே வெட்ட வெளிச்சமாக்கப்பட்டு விட்டது.

உண்மையான கொள்கைக்கு உறுதியான உரமிட்டு வளர்க்கும் உழைப்பாள உத்தமர்களைத் தமிழ் பேசும் மக்கள் தேர்ந்தெடுத்து விட்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களின் தலைவர்கள் அண்ணல் காந்திஜியின் அறவழி சென்று அகிம்சை ஆயுதம் கொண்டு அறப்போர் புரியத் தலைப்பட்டு விட்டனர். அந்த அறப்போர் முறையிலே சமஷ்டி ஆட்சி தோன்றித் தமிழ்பேசும் மக்கள் விடுதலை பெறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

## தமிழரசுத் தலைவர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரைமட்டுநகர் மாதா மனமார வரவேற்றுள்.

புதன் கிழமை பிற்பகல் விமான மார்க்கமாக தமிழரசுக் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் மட்டக்களப்புக்கு வந்தார். அதேவிமானத்தில் திரு. பொன்னம்பலமும் மட்டுநகர் வந்தார்: தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் பெருவாரியாகச் சேர்ந்து நின்று திரு. அமிர்தலிங்கத்தை வரவேற்ற தோரணையிலிருந்தே தமிழ்க் காங்கிரஸ் காரர்களின் முகங்களில் கரிபடர்வதைக் காணமுடிந்தது.

நூற்றுக்கும் அதிகமான மோட்டார் கார்கள் திரு. அமிர்தலிங்கத்தின் மோட்டார் பவனியில் கலந்து கொண்டன. தெரு மருங்கில் நின்று மக்கள் தமிழ் வாழ்த்தொலிகளை எழுப்பி ஆரவாரித்தனர், மலர்மாலைகளையிட்டு மகிழ்ந்தனர்.

### பரிதாபக் காட்சி

திரு. பொன்னம்பலத்தின் மோட்டாரைத் தொடர்ந்து வெகுசிலரே சென்ற காட்சி பரிதாபமாக விருந்தது. அவருக்கு மாலை அணியவோ வாழ்த்துக் கூறவோ யாரும் கிடைக்கவில்லை, காங்கிரஸ் வேட்பாளர்கள் இருவர் மாலையைத்தவிர வேறு ஒரு வர்த்தகர் மட்டுமே அவருக்கு மாலைசூட்டினார்.

## உங்கள் கவலை என்ன?

எந்த விதமான மனக்கவலைகளோ, வாழ்க்கையில் நிறைவேற வேண்டிய காரியங்களோ இருப்பின் அவைகளை விபரமாக எழுதி அனுப்புங்கள். தெய்வ பலத்தினாலும் மந்திர சக்தியினாலும் தகுந்த நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது.

கவர்மென்ட் ரிஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

**பி. எம். திசாநாயக்க,**

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

அருத எண்ணெய் காரியாலயம்

கம்பளை.

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரேமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரேமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ, பண்டாரநாயக்க வீதி,

கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிக்கு ஒரு தேர்தல்

இரண்டு மனித உருவங்கள், ஊரில் பெரும் புள்ளிகளே அது தான். ஒன்று முகம்மதார் குடியைச் சேர்ந்தது; மற்றொன்று தயிலர் குடியைச் சேர்ந்தது சம்மாந்துறைக் கிராமத்திலுள்ள பெரிய குடிகள் இவை இரண்டும் தான்.

பெரிய குடியென்பதில் இரு பகுதியினருக்குமே ஒரு பெருமை. அதிலும் கிராமத்தில் தாமே முதற் குடியாகத் திகழ வேண்டுமென்பதில் இரு பகுதியினரின் இதயத்துள்ளும் ஒரு வேக்காடு; ஒரு வைராக்கியம்.

இப்போது இரண்டு உருவங்களுக்கும் ஈடு காண முடியாத பெரும்போட்டி. அதை இரண்டு குடிகளுக்கும் இடையிலே நடைபெறும் போட்டியென்று சொன்னாலும் எவ்வளவோ பொருந்தும்.

பட்டணசபைத் தேர்தற்றினம் நெருங்க நெருங்க வட்டாரங்களில் வாக்குத் திரட்டுவதில் சூடேறிக்கொண்டே வந்தது. இதற்கு முதல் எந்தத் தேர்தலுமே இப்படி நடக்கவில்லை. அத்தனை வேகம் அதற்கு.

ஆட்டுச் சின்னத்துக்கா, ஓநாய்ச் சின்னத்துக்கா என்பதல்ல ஊரவர்களின் பேச்சு. முகம்மதார் குடிக்கா, தயிலர் குடிக்கா என்பது தான்.

ஜமீது மரைக்காயருக்கா ஆதம்லெவ்வைப் போடியாருக்கா...?

தேர்தற் பிரச்சாரம் புயல் வேகத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பண நோட்டுக்களும் பல ரூபத்தில் வாக்குகளைத் திரட்டிக்கொண்டிருக்கின்றன. வீடு வீடாகச் சென்று ஆதரவு தேடும் இரு உருவங்களின் குட்டிகளும் வந்து தனது திறமை முழுவதையும் பாவிக்கத் தவறவில்லை.

'ஜமீது மரைக்காயருக்குத்தான் வோட்டுப் போடணும்' என்று ஒரு சாராரும் 'ஆதம் லெவ்வைப் போடியாருக்குத்தான் வோட்டுப் போடணும்' என்று மற்றொரு சாராரும் சுலோகங்களை வீதி வழியாக எழுப்பித் திரிகின்றனர் 'எங்கள் குடிதான் வெல்லும்' 'எங்கள் குடிதான் வெல்லும்' என்ற இறுமாத்தலத்தில் இரு பகுதியினருமே கும்மாளமிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

குடி பக்தர்களின் கும்மாளம் இவ்வாறு பல தினுசுகளில் குமுறிக்கொண்டிருக்கிறது. பணத்துக்குப் படமெடுத்தாடும் கூலிப் பட்டாளங்கள் கச்சை கட்டிக்கொண்டு கும், ஓநாய்க்கும் உழைக்கின்றன ஆட்டுக் முகம்மதார் குடிக்கும், தயிலர் குடிக்கும் பலப் பரீட்சை...அடி தடிகள்... மண்டை உடைப்புக்கள்.

இன்று தேர்தல், வாக்காளர்களின் வாக்குப் பதிவுகள் பூரணமாக முடிந்துவிட்டன.

யாருக்கு வெற்றி?

ஆமாம், ஜமீது மரைக்காயர்தான் ஆறும் வட்டாரத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்டார். முகம்மதார் குடி இப்போது பட்டணசபையுள் நுழைந்துவிட்டது.

ஒரு குடியின் சர்வம் ஒடுங்கியது. ஒரு குடியின் கர்வம் உயர்ந்தது. ஆனால் பழைய வைராக்கியம் வைராக்கியம்தான். தேர்தல் மோதல்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன் அந்த இரண்டு மனித உருவங்களுக்கும் ஓர் ஒப்பந்தம்.

அதாவது, உள்ளம் விரும்பிச் செய்த ஒரு தீர்மானம்.

ஜமீது மரைக்காயரின் மகனுக்கு ஆதம் லெவ்வைப் போடியாரின் ஒரே மகளைத் திருமணம் செய்து வைக்கவேண்டுமென்பதே அவ்வொப்பந்தம். அப்போது 'எங்கள் குடி' என்ற இறுமாப்பு அவர்களுக்கு ஏற்படவில்லை, பணக்கார இடத்துப் பெண்ணைவிட்டு வைக்க ஜமீதுப் போடியாருக்கு விருப்பமில்லை பட்டதாரி மாப்பிள்ளையை விட்டு வைக்க ஆதம்லெவ்வைப் போடியாருக்கு விருப்பமில்லை.

ஆனல் இந்தப் பட்டணசபைத் தேர்தல் வந்தது தான் தெரியும், இருவரும் செய்துகொண்ட திருமண ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளெல்லாம் சிதறுண்டு போய்விட்டன. இனிமேல் எப்படி அந்தப் பேச்சுவார்த்தை தொடர முடியும்.

நாட்கள் வேகமாக உருண்டுகொண்டிருந்தன. அந்த இரு மனிதர்களின் உள்ளத்திலேயும் ஒருவித இனம் தெரியாத அரிப்பு. எப்பவோ பேசிக்கொண்ட அந்தத் திருமணப் பேச்சுவார்த்தையை அவர்களால் நினைக்காமலிருக்க முடியவில்லை. நாளுக்கு நாள் அது சம்பந்தமான எண்ணங்கள் வேகமாக வளர்ந்து கொண்டே வந்தன.

சம்பந்திகளாவதற்கு இருவருக்கும்தான் ஒருவித ஆசை. ஆனல், ஆசையிருந்து என்ன பலன். அதை எப்படி நிறைவேற்ற முடியுமோ அந்த முயற்சியில் ஈடுபட்டாலல்லவோ வெற்றி கிடைக்கக்கூடும். எப்படியோ இரண்டு வருடங்கள் சென்றுவிட்டன.

திருமணப் பேச்சுவார்த்தைகளில் பழுத்துப்போன ஒருவர், இருவரின் இதயங்களிலும் இருந்துகொண்டிருந்த எண்ணங்களை ஒருவருக்கொருவர் தெரியப்படுத்திவிட்டார். இரு உள்ளங்களுக்கும் ஒருவகை நிம்மதி ஆனல் ஒருவர் முகத்தில் ஒருவர் விழிக்க வெட்கம் இருக்காதா என்ன?

இருவரும் ஒருநாள் எதிர்பாராதவிதமாகச் சந்தித்துவிட்டனர், இனி என்ன! அற நனைந்தவருக்குக் கூதலுமில்லை குளிருமில்லையல்லவா? திருமணப் பேச்சுவார்த்தை மீண்டும் தடபுடலாக நடைபெறத் தொடங்கியது.

இரு குடிகளுக்கும் இருந்த வேற்றுமை-வைராக்கியம் இப்போது எங்கு போய்விட்டதென்றே புரியவில்லை. அவர் குடிகளும், இவர் குடிகளும் திருமணத்துக்கு வந்திருந்தன. அப்போது, வேறுபட்ட இரு துருவங்களும் ஒன்றுபட்டுவிட்டன. ஆனல் முகம்மதார் குடியும், தயிலர் குடியும் ஒன்றுபட்டுவிட்டன என்று எப்படிச் சொல்ல முடியும்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு மீண்டும் பட்டணசபைத் தேர்தல் வந்தது. பதவி எண்ணமோ, சேவை எண்ணமோ, குடி எண்ணமோ, கோத்திர எண்ணமோ...இரு உருவங்களின் உள்ளத்துள்ளும் ஒரு வைராக்கியம்.

சம்பந்தர்களாகிப் போன இருவரும் தேர்தலில் நிற்கக்கூடாதென்று சட்டமில்லையே? இருவருக்கும் சற்று தயக்கம் தான். என்றாலும் பழைய குடிவைராக்கியம் விடுமா? அத்தோடு சூடு கண்ட பூனையல்லவா.

முகம்மதார் குடிக்காரர் ஜமீது மரைக்காரை வளைக்கின்றனர். தயிலர் குடியைச் சேர்ந்தவர்கள் ஆதம் லெவ்வைப் போடியாரை வளைக்கின்றனர். இறுதியில் இரு உருவங்களுக்கும் திரும்பவும் தேர்தல் போட்டி. பழைய பல்லவிகள் மீண்டும் வீதிகளில் ஒலிக்கின்றன. வாக்காளர்களுக்கு தேர்தலில் நிற்பவர்கள் இருவரையும் பற்றியோ அவர்கள் சார்ந்து கேட்கும் கட்சிகளைப் பற்றியோ அக்கறையில்லை. முகம்மதார் குடிக்கும், தயிலர் குடிக்குமே தேர்தல் நடந்துகொண்டிருக்கிறது.

வெற்றி யாருக்கோ...!

(யாவும் கற்பனை)

சம்மாந்துறை யூ. செயின்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அபே:- உங்களை யெல்லாம் நம்பித்தானே நான் எலக்ஷனில இறங்கினது...

கணபதி:- தமிழரசுக் கட்சிக்காறன் சனத்தக் கெடுத்துப் போட்டான் தம்பி...இல்லாட்டிப் பாரு சாதாரணமானவனுக்கெல்லாம் எப்பிடி அரசியல் தெரியும்? ஒரு காலத்தில் நாம் என்ன சொன்னலும் அப்பிடியே கேட்கிற சனங்கள், இப்ப எதிர்க் கேள்வி அல்லோ கேட்குதுகள்?

# தேர்தலோ தேர்தல்!

வயிரன்:- உங்கள் ஐயாட கட்சியென்ன, கொள்கையென்ன இதுக்கு முதல் உங்கட கட்சி என்ன செய்திருக்கு..? எண்டெல்லாம் கேக்கிறானுகளே...

கண:- என்டாலும் நம்மட ஊர்ச் சனத்த லேசா ஏமாத்தலாம். எப்படித் தெரியுமா? நம்மட ஊரவன், சாதியவன் என்ற விசயத்த அடிச்சுட்டா, எதிரா இரிக்கிறவனெல்லாம் திரும்பிடுவானுகள்...

முருகர்:- அதெல்லாம் ஒரு காலம்...இப்ப அப்படி முடியாது...

வயிரன்:- முருகண்ண...! நீ சும்மாகிட...அதெல்லாம் நாங்க கவனிப்பம் ...எங்களுக்கு வேண்டியது கொஞ்சப் பணமும்......

(எல்லோரும் 'பானமும்' பணமும் பெற்றுக் கொண்டு வெளியேறுகின்றனர்)

மனைவி:- சேச்சே...கொஞ்சங்கூட நல்லால்ல...

அபே:- எது......?

மனை:- எங்கயோ கிடந்த குடிகாறனையெல்லாம் கூட்டி வந்து சதிரயில உட்காரச்சொல்லுறது.. இனிமேல் ஆராவது குடிகாறனுகள் இங்க வரட்டும் சரியான பாடம் படிப்பிச்சி அனுப்புறன்.

அபேட்:- எலக்ஷன் முடியு மட்டுந்தானே இந்தஉபசாரமெல்லாம்...அதுக்குப் பிறகு ஒரு பயலை இந்தப் பக்கம் தலை காட்ட விடுவனு? நமது நாயை வாசலிலல்லவா கட்டி வைப்பேன்.

மனை:- என்னமோ செய்யுங்க...

முனியன்:- எஜமான்! உங்களோட போட்டி போடுற ஆக்களில் ஒருவர் உங்க இனத்தவர் தானே...அவரை எப்படியாவது நிறுத்த முடியாதா...?

அபே:- தமிழரசு அபேட்சகரின் வோட்டைப் பிரிக்க வேண்டும் என்று நான்தானேடா அவரைத் தட்டி விட்டது. என்டாலும் அது அவ்வளவு பலன் தரல்லடா. 'சுயேச்சைகள் மதில் மேல் பூனை போன்றவர்கள்' என்று அவரை ஒதுக்கித் தள்ளுகிறார்கள்

சோதிடர்:- வணக்கம் ஐயா!

அபே:- அடடே...! நீங்களா? வாங்க, வாங்க...உட்காருங்க, உங்களைப் பார்க்க நானே வரலாமென்றிருந்தேன்... அதுக்குள்ள நீங்களே வந்திட்டீங்க, என்னுடைய சாதகத்தை அனுப்பியிருந்தேன். கிடைத்ததா?

## சிந்தியுங்கள்!

"சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமிழர்களுக்கு நாட்டின் ஒரு பகுதியைக் கொடுக்கவிருந்ததாக ஐக்கிய தேசியக் கட்சி பிரச்சாரம் செய்து வருகிறது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாட்டின் ஒரு அங்குல நிலத்தைத்தானும் தமிழர்களுக்குக் கொடுத்துள்ளதா? இல்லை. இந்நாட்டிலிருக்கக் கூடிய தமிழர்களில் ஐந்தேகால் லட்சம் பேரை இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது நமது கட்சி." இவ்வாறு காணி அமைச்சர் திரு வி. டி. ஜி கருணரத்தின அக்கரல என்னுமிடத்தில் ஒரு தேர்தற் கூட்டத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

சோதி:- ஆமா, ஆமா... கிடைத்தது.

அபே:- உங்க ஊர்ப் பக்கம் எலெக்ஷன் பாடெல்லாம் எப்படிக் கிடக்குது...?

சோதி:- எங்கட ஊரிலமட்டுமென்ன பெரும்பாலும் எல்லா இடங்களிலேயும் தமிழரசுக் கட்சிக்குத்தான் சரியான ஆதரவு தமிழரசு அபேட்சகர். வெற்றி பெறுவது முற்றிலும் நிச்சயம்

அபே:- "என்ன சொன்னீங்க...
(மயங்கித் தரையில் சாய்கிறார்)


ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

இல. 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174 SEA STREET COLOMBO 11

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, சதை வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுச் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
இல. 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தந்தை செல்வநாயகத்தின் தீர்க்க தரிசனம்

# மொழிப் பிரச்சினையின் ஆபத்துப் பற்றி அன்றே (1948-ல்) எச்சரித்தார்

மலைநாட்டு தமிழ்ப் பாட்டாளி மக்களது அடிப்படை உரிமைகளான குடியுரிமை வாக்குரிமைக்காக உழைப்பதென்பது அன்றைய அ. இ. த. காங்கிரசின் முக்கிய இலட்சியமாக இருந்தது.

1947-ம் ஆண்டு தேர்தலுக்கு முன் இலங்கை இந்தியர் காங்கிரஸ் (இப்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆக பிளந்துவிட்ட) இயக்கத்துக்கு அவர்களுடைய உரிமைக்காக உழைப்பதாக திருவாளர் பொன்னம்பலம் கை யொப்பமிட்டு உறுதி மொழி அளித்திருந்தார்.

### உறுதி மொழி எங்கே?

கையொப்பமிட்ட நாள் 1947ம் ஆண்டு ஆவணித் திங்கள் 17-ம் நாள். அனுல் போட்ட கையொப்பத்தின் மை காய்வதற்கு முனபே அதே மலைநாட்டுத் தமிழ் தொழிலாளர்களது உரிமைகளுக்கு உலை வைக்கும் இந்திய பாகிஸ்தானிய குடியுரிமைச் சட்டம் விவாதிக்கப்பட்ட நேரத்தில் அமைச்சர் பதவியில் இலயித்திருந்த தனிப் பெருந் தலைவர் அந்த உறுதிமொழியை காற்றில் பறக்கவிட்டார்.

தமிழ் பேசும் இனத்தை திட்டமிட்டு கருவறுக்கும் பெரிய செனநாயக்காவதும் அவரது யூ. என். பியினதும் முதல் நடவடிக்கையை எதிர்க்க வேண்டும், எதிர்த்து முறியடிக்க வேண்டும் என்று தந்தை செல்வநாயகம், திரு. வன்னியசிங்கம், டாக்டர் நாகநாதன், திரு. சிவபாலன் ஆகிய தலைவர்கள் விடாப் பிடியாக நின்றார்கள்.

### பொன்னம்பலத்திடம் சென்றோம்

அப்போது சட்டக் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நானும் எனது நண்பர்கள் சிலரும் தந்தை செல்வநாயகத்தை அவரது வீட்டில் கண்டு இந்தச் சட்டத்தை எதிர்த்து பாராளுமன்றத்தில் வாக்களிக்க வேண்டுமென்று வற்புறுத்தினோம். 'என்னிடம் கூறிப் பயனில்லை. உங்களைப் போலவே எனது எண்ணமும் இருக்கிறது நீங்கள் திரு பொன்னம்பலத்தைக் கண்டு அவரை இம் மசோதாவுக்கு எதிராக வாக்களிக்குமாறு தூண்டியுங்கள்' என்று கூறி எங்களைத் திருவாளர் பொன்னம்பலத்திடம் போய்ப் பேசுமாறு பணித்தார்.

நாங்களும் திருவாளர் பொன்னம்பலத்திடம் சென்று முறையிட்டோம். குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தே தீருவேன என்று கூறிய அமைச்சர் பொன்னம்பலம் அவர்கள், இன்னொன்றையும் கூறி வைத்தார். அது இன்றும் எனக்கு நினைவாக இருக்கிறது. அவர் கூறினார் 'நீர் போய் செல்வநாயகத்துடன் சேர்ந்து புதுக் கட்சி தொடங்கும். மகாதேவா (சேர அருணாசலம் மகாதேவா) போல் அதற்கு நான் முட்டுக்கட்டை போடமாட்டேன்' வழக்கம் போல திருவாளர் பொன்னம்பலம் இந்த வார்த்தைகளையும் காப்பாற்றவில்லை! இ. த அ. கட்சி தொடங்கிய நாள் தொட்டு இன்று வரை, தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனப் பிழை வரட்டும் என்ற போக்கில், எங்கள் கட்சியை—மக்கள் அவரைத் தேர்தலில் தோற்கடித்து தலைக்கு முக்காடு போட்டு மூலையில் உட்கார வைத்த நேரத்திலும்—எதிர்க்க வேண்டுமென்பதற்காகவே எதிர்த்து வருகிறார்.

திருவாளர் பொன்னம்பலம் திருவாய் மலர்ந்து சொல்லியதை தந்தை செல்வநாயகத்திடம் மீண்டும் சென்று சொன்னோம். பாராளுமன்ற அனுமதிச் சீட்டொன்று தந்து அடுத்த நாள் நடக்கும் பாராளுமன்ற விவாதத்தை வந்து கேட்குமாறு சொல்லி அனுப்பிவைத்தார் தந்தை அவர்கள்.

### தந்தையின் அன்றைய பேச்சு

இந்திய பாகிஸ்தானிய குடியுரிமை மசோதா இரண்டாவது முறையாக வாசிக்கப்பட்டு அதன் மீதான விவாதம் அன்றும். அதற்கு மறு நாளும் நடைபெற்றது.




தந்தை செல்வநாயகம் 10-12-48 காலை 10 25க்கு தமது பேச்சை ஆரம்பித்தார். இப்போது போலல்லாது அன்று—19 வருடங்களுக்கு முன்—கணீரென்ற குரலில் கம்பீரமாகப் பேசினார். தந்தை செல்வநாயகம் அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளில் தலை சிறந்த பேச்சு இதுவாகும். பொருள் பொதிந்த, தீர்க்க தரிசனமான அவரது பேச்சு முழுவதையும் இங்கு தர இடம் இல்லாததற்கு வருந்துகிறேன். ஆர்வமும் அக்கறையுமுடைய வாசகர்கள், குறிப்பாக மாணவர்கள், அவரது முழுப் பேச்சையும் பாராளுமன்ற பதிவேட்டைப் (Vol. 5, 48-49 கலம் 488-499) படித்து அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். சரி, பார்வையாளர் பகுதியிலிருந்து விவாதத்தைக் கவனிப்போம்.

திரு. சா. ஜே. வே. செல்வநாயகம்: (காங்கேசன் துறை) சபாநாயகர் அவர்களே! இந்த மசோதாவை எதிர்ப்பதற்காக நான் இந்த நேரத்தில் இங்கு எழுந்து நிற்கிறேன்.

டாக்டர் என். எம். பெரேரா: சபாஸ் தமிழ்க் காங்கிரஸ்! (Come on Tamil Congress)

திரு. சா. ஜே. வே. செ:— இந்த அரசாங்கம் கரிசனை கொண்டுள்ள மிகப்பாரபட்சமான சட்டமியற்றும் நடவடிக்கைகளில் இந்த மசோதாவும் ஒன்று. மிகவும் கெட்டித்தனமான வகையில் பிரதமர் (டி. எஸ் சேனநாயக்கா) இம் மசோதாவைச் சமர்ப்பித்திருக்கிறார். பிரதமர் ஒரு சட்ட வல்லுனரா இல்லையா என்பதுபற்றி இச் சபையில் சிலர் விவாதித்துக் கொண்டார்கள். ஆனல் பிரதமர் உண்மையிலேயே ஒரு திறமையான நியாயவாதி என்பதை இச்சபையினர்க்கு நான் வற்புறுத்த விரும்புகிறேன்.

கௌரவ டி. எஸ். சேனநாயக்கா:-நான் ஒரு திறமையான நியாயவாதி யென்று என்றுவது பாராட்டிக் கொண்டதில்லை.

(6)

திரு சா. ஜே. வே. செ:-அவரிடம் மூன்று குணநிசயங்கள் உண்டு. முதலாவதாகப் பலரும் ஏற்றுக் கொண்டபடி இந்த திறமையான நியாயவாதிக்கு சட்ட அறிவுகிடையாது!

கௌரவ டி. எஸ். செ:- அதனுல்தானு நான் ஒரு திறமையான நியாயவாதி?

திரு. சா. ஜே. வே. செ:- இரண்டாவதாகத் தனக்கு எல்லாம் சரியானபடி தெரியும் என்று கூறிக் கொண்டே உண்மைகளைத் தவருகப் பிரட்டிப் பேசும் கெட்டித்தனங் கொண்டவர் இவர். மூன்ருவதாகத் தனது நியாயவாதம பெலனற்றது என்பது தெரியும் பொழுது தனது எதிரிகளைத் திட்டிக் கொள்ளும் குணமுடையவர் பிரதமர்.

......வெள்ளவத்தை கல்கிசைப் பிரதிநிதி (டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா) எடுத்துக் காட்டியது போல இந்த முக்கியமான தேசியப் பிரச்சினையை மிகவும் வகுப்பு வாதக் கண்ணேட்டத்தில் பிரதமர் அணுகியிருக்கிறார். அவருடைய பிரதம தளபதியாகிய சபை முதல்வர் (எஸ். டபிள்யு. ஆர் டீ. பண்டாரநாயக்கா) குடியுரிமை மசோதா விவாதிக்கப்பட்ட பொழுது 'இனம் என்பது ஒரு முககியமான பிரச்சினையென்றும், இனத்தைக்காப்பாற்ற நாம் வேண்டிய அனைத்தையும் செய்தே ஆக வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

### இனவாரி இணைப்பு தவிர்க்க முடியாதது

எந்த இனத்தைப் பற்றி இப்படிக் குறிப்பிட்டிருந்தார்? பெரும் பான்மையராய் இருக்கும் இனத்தவரையா குறிப்பிட்டர்? இந்த நோக்கு மிகவும் தவருனது எனவே இத்தகைய சட்டமியற்றும் மனுேபாவத்தைக் கண்டு (எமது எதிர் காலத்தைப் பற்றி) பெரும் பயம் கொண்டிருக்கும் சிறுபான்மை இனத்தவராகிய எமது சார்பில் நான் இத்தகைய சட்டத்துக்கு எதிராக எனது கடனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

......முதலாவதும் முக்கியமானதுமான கேள்வி என்னவென்றல் இம் மசோதா இரு இனங்களுக்கிடையே உள்ள மோதலேஎன்பதாகும். வெள்ளவத்தை கல்கிசைப் பிரதிநிதி இது பற்றி என்னதான் கூறினுலும் குறிப்பிட்ட இனத்தவர்களுக்கு எதிராக (அரசாங்க) நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அவ்வினங்கள் சிறுபான்மயராக இருக்கும் வரை தமது தற்பாதுகாப்புக்காக அவர்கள் இனவாரியாக இணைக்கப்பட்டு ஒன்று திரளுதல் தவிர்க்க முடியாததே.

இன வாரி இயக்கங்கள் இருக்க வேண்டிய தேவையை நீங்கள் அகற்றினுல் இந்த (தமிழ் காங்கிரஸ் போன்று) இனவாரி இயக்கங்கள் தாமாகவே மறைந்துவிடும். இலங்கையிலுள்ள மலைநாட்டுத் தொழிலாளர்களுக்கு இந்திய அரசாங்கம் அளிக்கும் பலமற்ற பாதுகாப்புத் தானும் இல்லாதிருந்தால் இந்த இரண்டாந்தர குடிமக்களாகும் சலுகைகளிதானும் கிடைத்திருக்குமா?

## எழுத்தில் கொடுத்த உறுதி மொழியை காற்றில் பறக்கவிட்டார் பொன்னம்பலம்

### நாளை

......இந்திய தொழிலாளர்கள் இந்த நாட்டில் வதிவதற்கு எதிராக கௌரவ பிரதமர் இறைறு பல வாதங்களை கூறியுள்ளார், இவை மூலம் மலைநாட்டு மக்களை அவர் ஒழித்துக் கட்டியபின் அதே வாதங்களை அதேயளவு கெட்டித்தனத்துடன எடுத்தாண்டு இலங்கைத் தமிழர்களாகிய எமக்கு எதிராக (ஒரு காலத்தில்) பயன்படுத்த முடியும்.

அவர் (பின்னெரு காலத்தில்) இந்தச் சபையில் வந்து இது சிங்கள வருடைய நாடு என்று கூற முடியும். "தமிழர்கள் பல நூற்ருண்டுகளுக்கு முன் வந்தவர்கள் என்பது உண்மை தான், ஆனல், இந்த நாட்டின் சில பாகங்களை யுத்தத்தில் கைப்பற்ற வந்தவர்களுடன் கூட வந்தவர்கள் இவர்கள், எனவே அவர்கள் இந்தநாட்டில் தொடர்ந்து வாழ என்ன உரிமை இருக்கிறது?" என்றும் பிரதமர் ஒரு காலத்தில் "நியாயம்" பேச முடியும். இன்று இருக்கும் சூழ்நிலையில் அரசாங்கம் இவ்வாறு கூறும் என்று சொல்வது ஒரு பயித்தியக்காரன் கதை போலத் தோன்றலாம். ஆனல் என்று இந்திய மரபுவழியினரை நீத்துக்கட்ட முடிகின்றதோ, அன்று இதே வாதத்தை அரசாங்கம் இலங்கைத் தமிழருக்கு எதிராக எடுத்துக் கூற முடியும். அப்பொழுது இலங்கைத் தமிழர்களின் அடிப்படை உரிமைகள் சிலவற்றை பறிப்பதற்கும் இதே வாதம் அந்த வருங் காலத்தில் கச்சிதமாகப் பயன்படும்,

ஆனல் பிரதமர் "நான் என்றுமே பாரபட்சம் காட்டப் போவதில்லை" யென்று வாக்குறுதி அளிக்கலாம் ஆனல் அவர் இந்தச் சபையில் உள்ள வாக்குப் பெரும்பான்மையிலேயே நம்பிக்கை வைத்துள்ளார். இந்தச் சபையிலும் இந்த நாட்டிலும் தமக்கிருக்கும் எண்ணிக்கைப் பலத்தில் நம்பிக்கை கொண்டுள்ள அவர் அதே நேரத்தில் நீதி நியாயம் கோரி இந்தியாவுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றார்.

### தீர்க்கதரிசனம்

நீதி நியாயம் என்று பேசுபவர்கள் தாம விரும்பும் அதே நீதியையும் நியாயத்தையும் தம்மிலும் பார்க்க மெலியார்க்கு வழங்க வேண்டுமென்பதே சட்டத்தின் முதலாவது பிரமாணமாகும்.

.. இலங்கைத் தமிழர், இந்திய மரபினர், முஸ்லிம்கள் ஆகியோரைப் பற்றியே (அரசாங்கத்துக்கு) பயமிருக்கிறது. இவர்களை நசுக்குவதற்குத்தான் பிரதமர் விரும்புகிறார். எம்மை அவர் நேரடியாக நசுக்கவில்லை இன்று. ஆனல், மொழிப் பிரச்சினை கிளப்பப்படும் காலத்திற்தான் எமக்குத் தெரியவரும் இந்த நாட்டிலே இலங்கைத் தமிழரது அந்தஸ்து என்னவென்பது. சிறுபான்மையினத்தவர்க்கு எதிராக

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி அமைச்சரின் விஜயம்

# தமிழர் தியாகத்திற்கு ஒரு சோதனை

## எதிர்ப்பு அணியை முறியடிக்க இடது சாரிகள் முயற்சி

நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா மார்ச் மாதம் 9ம் திகதி யாழ்ப்பாணம் செல்ல விருக்கிறார். யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டப்படும் அரசாங்க திறைசேரிக் கட்டிடத்தை நிதி அமைச்சர் என்ற ரீதியில் திறந்து வைக்கப்போகிறார். இவரின் உத்தியோக பூர்வமான விஜயத்தை எதிர்த்து இலங்கைத் தமிழரசுக் கட்சி கறுப்புக்கொடி காட்டுவதென்று முடிவெடுத்துள்ளது.

அதே நேரத்தில் நிதி அமைச்சருக்கு செங்கொடிகளினால் வரவேற்புக் கொடுப்பதென்று வட இலங்கையிலுள்ள விரல் விட்டு எண்ணக் கூடிய இடதுசாரிகள் அறிவித்துள்ளார்கள்.

### சகலருக்கும் கறுப்புக்கொடி

வந்தாரை வரவேற்பதுடன் மட்டு மல்லாது வரவேற்று வாழ்வளிப்பதிலும் பெயர் பெற்றவர்கள் தமிழர்கள். இது அவர்களின் பண்டைய மரபு ஆனால், 'ஆளும் இனத்தைச் சேர்ந்தவன் நான், நீங்கள் ஆளப்படும் இனத்தைச் சேர்ந்தவர்கள்' என்ற இறுமாப்புடன் வருபவர்களை என்றுமே தமிழினம் வரவேற்றது கிடையாது. இது அவர்கள் பண்புமல்ல.

சிங்கள அரசின் அமைச்சர்களுக்கு தமிழ் பேசும் மக்கள் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புத் தெரிவித்து வந்திருக்கிறார்கள் பல ஆண்டுகளாக, ஐ. தே. கட்சி அரச பீடத்திலிருந்த காலத்தில் பெரிய சேனநாயக்கா முதல் ஜொன் கொத்தலாவலை வரை சகலருக்கும் கறுப்புக் கொடி காட்டியிருக்கிறார்கள்.

சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் அமைச்சர் ஏ. பி. ஜெயசூரியா முதல் அமைச்சர் இலங்கரத்தின வரை சகலருக்கும் கறுப்புக் கொடி வரவேற்பைக் கொடுக்கத் தமிழ் பேசும் மக்கள் தவறவில்லை.

### பெரேரா பின்வாங்கினர்

இவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டுங்கால் ஆளவந்தாரின பொலிசார் நம்மவர்களை வதைப் புடைத்தார்கள். அமைச்சர் இலங்கரத்தினவுக்குக் கறுப்புக் கொடி காட்டும் பொழுது தொண்டர்களும் தலைவர்களும் மிருகத்தனமான முறையில் பொலிசாரின் தாக்குதலுக்கு இலக்கானார்கள். இத்தாக்குதலினால் ஊர்காவற்றுறை பெற்றெடுத்த செயல் திரு வி. ஏ. கந்தையா தமது உயிரையே இழந்தார்.

அமரர் கந்தையாவின் தியாகம் சிங்கள அமைச்சர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது தமிழ்ப் பிரதேசங்களுக்கு இராசபவனி செல்வதை நிறுத்தினர்கள் அமைச்சர்கள். கூட்டரசாங்கம் உருவானதும் நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா யாழ்ப்பாணம் போவதாக அறிவித்தார். கொதித்தெழுந்தனர் வாலிபர்கள். வெறறிகரமாகப் பின்வாங்கினர் டாக்டர் பெரேரா.

இன்று மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஒரு இராசபவனி செல்லவேண்டுமென்று முனைந்துள்ளார் நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா. அவருக்கு அலவட்டம் வீசி செங்கொடி வரவேற்புக் கொடுக்கப் போகிறார்கள் இடதுசாரித் தோழர்கள்.

### அன்று நடந்தது என்ன?

இடதுசாரிக் கட்சியினர் இத்தகைய வரவேற்புக் கொடுக்க முன்வந்தது அதிசயப்பட வேண்டிய ஒன்றல்ல. 1957ம் ஆண்டு துணை அமைச்சராக விருந்த திரு எம். பி. டி. சொய்சா கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒரு கிளை இயக்கமான சிறுபான்மைத் தமிழர் மாசபை அழைத்திருந்தது. துணை அமைச்சரின் வருகைக்கு தமிழரசு வாலிப முன்னணி எதிர்ப்புத் தெரிவித்தது அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது வந்தார் துணை அமைச்சர்.

ஆனால் துணை அமைச்சர் திரு. சொய்சா வந்த புகையிரத வண்டியிருந்து இறங்கவிடாது திருப்பியனுப்பி வைத்தார்கள் வாலிபர்கள். 1962ம் ஆண்டும் அமைச்சர் இலங்கரத்தின பலத்த பொலிசு இராணுவக் காவலுக்கிடையிலேயே யாழ்ப்பாணம் வர முடிந்தது. இந்த உண்மைகளை மறந்து மீண்டும் இடதுசாரிக் கட்சியினர் செங்கொடி வரவேற்புக் கொடுப்போம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

டாக்டர் பெரேரா அவர்களுக்கு செங்கொடி வரவேற்புக் கொடுப்பதை யாரும் எதிர்க்க மாட்டார்கள். திருமதி பண்டாரநாயக்கா அவர்களுக்கு பிரதமர் என்ற ரீதியில்லாது சாதாரணமாக—திருமதி. பண்டா என்ற—முறையில் வரும் பொழுது யாராவது வரவேற்புக் கொடுத்தால அதை எவரும் எதிர்க்க மாட்டார்கள், ஆனால் சிங்கள அரசின் அமைச்சர் என்ற ரீதியில் யார் வருகிறார்களோ, அவர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டியது தமிழர் கடமை நிதி அமைச்சர் டாக்டர் பெரேராவுக்கு கறுப்புக் கொடி காட்டப் போவதும் அந்த ரீதியில் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

### நிதி அமைச்சரின் சாதனைகள்

நிதி அமைச்சர் டாக்டர் பெரேராவின் வருகைக்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கக் கூடாது? ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் சமசமாஜக் கட்சியின் தலைவராக இருந்த திரு பெரேராவா; இன்றைய அமைச்சர் பெரேரா என்பதை முதலில் எண்ணிப் பார்க்க வேண்டும். ஐக்கிய விமுக்திப் பெரமுனத் தலைவர் திரு கே. எம். பி இராசரத்தின வுடன் வகுப்புவாதத்தை, அமுல் நடாத்துவதிற போட்டி போடுபவரல்லவா டாக்டர் பெரேரா அவர்கள். இதை யாரும் மறுக்க முடியாது?

● சுதந்திரக் கட்சி அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறித்தது என்றால் கூட்டரசாங்கம் தமிழ் பேசும் மக்களை ஒதுக்கி ஒழித்துக் கட்ட முனைந்துள்ளது சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது ஆனால், கூட்டரசாங்கத்தில் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள்.

● கூட்டரசாங்கம் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களைப் பதவியிலிருந்து வெளியேற்றியதை அரசியற் கலப்பற்ற பொது சேவை ஆணைக்குழு தலையிட்டு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது. கோடீசுவரன் வழக்கு விசாரணை முடிவே இவர்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறது.

### தமிழ் ஊழியர்கள் ஒதுக்கப்பட்டார்கள்

● நிதி அமைச்சர் டாக்டர் பெரேராவின் நிர்வாகத்தின் கீழ் நடைபெற்ற அரசாங்க எழுதுவினைஞர் பதவி உயர்வில் தமிழர்கள் ஒதுக்கப்பட்டார்கள். நிறைவேற்று எழுதுவினைஞர் வகுப்பு இரண்டுக்கு பதவி உயர்வு செய்வதில் 200க்கும் மேற்பட்ட தமிழர்கள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள் தமிழ் ஊழியர்களிலும் பார்க்க சேவை மூப்புக்குன்றிய 817 சிங்கள ஊழியர்கள் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். அதே போன்று தரம் ஒன்று பதவி உயர்வில் 15க்கும் மேற்பட்ட தமிழ் ஊழியர்கள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள்

### சங்கிலியன்

★ நடைபெற விருந்த கணக்காளர் பரீட்சைக்கு புதிய சிங்களத் தகைமை நிபந்தனையிட்டதனால் 500க்கும் மேற்பட்ட தமிழ் ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் டாக்டர் பெரேரா நிதி அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் தமிழ் ஊழியர்களுக்கு ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்டு வந்த இலவச பிரயாணச்சீட்டுக் கடிதங்கள் தனிச் சிங்களத்தில் வளங்கப்பட்டன. இதனால் பல ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிலர் இந்த இலவச பிரயாணச் சீட்டைப் பயன் படுத்துவதில்லையென்றும் முடிவெடுத்துள்ளார்கள்.

● 30-1-65 ல் நடைபெற விருந்த எழுதுவினைஞர் பதவி உயர்வு பரீட்சைக்குப் புதிதாக நிபந்தனை விதிக்கப்பட்டது இதை எதிர்த்து சாணி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்த எழுதுவினைஞர் திரு. சு. திருச்செல்வம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளார்.

இப்படிப் பல துறைகளிற் தமிழ் பேசும் அரச ஊழியர்கள் ஒதுக்கப்பட்டுள்ளார்கள் டாக்டர் பெரேராவின் நிர்வாகத்தின் கீழ்.

### வரவு—செலவுத் திட்டத்தில் வகுப்புவாதம்

● இரு பொருளாதார கலாநிதிப் பட்டங்களைப் பெற்ற டாக்டர் பெரேரா 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்று தயாரித்த முதல் வரவு—செலவுத் திட்டத்திலேயே தமது வகுப்புவாத மனப்பான்மையைப் பகிரங்கப்படுத்தினர். நாட்டை விட்டு வெளியேறுபவர்கள் ஒன்றரை லட்சம் ரூபா எடுத்துச் செல்லலாம் என்று கூறப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் இந்தியர்கள் என்றால் 75 000 ரூபா மட்டுமே எடுத்துச் செல்லலாம் என்று அடித்துக் கூறப்பட்டது. இதில் அவர் தமது உண்மை நிலையைப் பகிரங்கப்படுத்தினர்.

● அடுத்து நெற்காணிச் சட்டத்தில் திரு கே. எம் பி. இராசரத்தின கொண்டுவந்த கண்டிபெடுத்த ஒரு வகுப்புவாதத் திருத்தத்தை கூட்டரசாங்கம் ஒருமனதாக ஏற்றது. இத்திருத்தத்தை மற்றவர்கள எதிர்த்தார்கள்.

● திருமலை நகராண்மைக் கழகம் சிங்களத்தில் வந்த அரசாங்க சாசோலையைத் திருப்பியனுப்பிய பொழுது, நிதி அமைச்சர் தலைமையிலியங்கும் அமைச்சரவைத் துணைக் குழு வன்மையாகக் கண்டித்ததுடன், அந்நகரசபையைக் கலைக்க முடியுமா என்று ஆராயும்படி உள்ளூராட்சி அமைச்சருக்கு அலோசனை கூறியது. உள்ளூராட்சி அமைச்சர் ஒரு சந்தர்ப்பத்தில் திருமலை நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் சிவானந்தனை அழைத்து அவமரியாதை செய்து அனுப்பினர். இதைக் கண்டித்து தமிழரசுத் தலைவர் காரசாரமான கடிதம் ஒன்றை அமைச்சருக்கு எழுதினர். உள்ளூராட்சி உதவி அமைச்சர் திருமதி விவியன் குணவர்த்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### மத உரிமையை அபகரிக்கவும் முயன்றார்

● மலைநாட்டுத் தமிழ் மக்களுக்காகப் பரிந்து பேசிய டாக்டர் பெரேராவும், அவரது சமசமாஜக் கட்சியும் இன்று ஐந்தே கால் இலட்சம் மலைநாட்டு மக்கள் நாடுகடத்தப்படுவதற்குத் துணை போனதுடன், அந்தப் படுபாதகமான சாத்திரி—சிறிமா ஒப்பந்தத்தை தலையில் ஏற்றி வாயார வாழ்த்துகிறார்கள்.

● ஒரு காலத்தில் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்த, மலைநாட்டு வாக்குரிமை பெற்ற தமிழ் பேசும் மக்களை தனித் தொகுதியிற் பிரிப்பதைக் கண்டித்த சமசமாஜக் கட்சித் தலைவர்கள் இன்று அந்த சண்டிபெடுத்த படுபிற்போக்குத்தனமான திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துப் பிரச்சாரமும் செய்து வருகிறார்கள்.

● இத்தனைக்கும் மேலாகத் தோல்வியடைந்த கூட்டரசாங்கத்தின் அரியணை உரைபற்றி தமிழ் பேசும் மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள். மலைநாட்டு மக்கள் உரிமையைப்பறித்தது ஐ. தே கட்சி அரசாங்கம், தமிழ் மக்களின் மொழியுரிமையைப் பறித்தது சுதந்திரக் கட்சி அரசாங்கம், தமிழ் பேசும் மக்களின் வழிபாட்டு உரிமையான மத உரிமைக்கு உலைவைக்க முனைந்தது கூட்டரசாங்கம். இந்த கூட்டரசாங்கத்தின் அமைச்சரான டாக்டர் பெரேராவுக்கு செங்கொடி வரவேற்பாம் தமிழ் மண்ணில், இந்த முடிவு கண்டிபெடுத்த கருங்காலித் தனம்.

### அன்றைய நண்பரும் இன்றைய நண்பர்களும்

டாக்டர் பேரேரா தமிழ் பேசும் மக்களின் மாமனா? மச்சானா? டாக்டர் பெரேரா தமிழ் பேசும் மக்களை ஒழித்துக் கட்ட முனைந்துள்ள ஒரு மாபெரும் சக்தி. அந்தச் சக்திக்கா வரவேற்பு?

முப்பது வருடங்களாக டாக்டர் பெரேராவுடன் தோளோடு தோள் நின்று உழைத்த திரு. எட்மண்ட் சமரக்கொடி இன்றைய டாக்டர் பெரேரா பற்றியும் அவர் கட்சி பற்றியும் கூறுவதைப் பார்ப்போம்.

"என். எம். பெரேராவும்ஏனையோரும் சிங்கள — பௌத்த மோகத்துக்குச் சரணாகதி அடைந்து விட்டமை எமக்குப் பலவீனத்தை ஏற்படுத்தியிருப்பது உண்மை தான்......"

திரு. சமரக்கொடியின் கூற்றை ருசுப்படுத்துவதாக உள்ளது டாக்டர் பெரேராவின் இன்றைய நண்பர்களான அமைச்சர்கள் இலங்கரத்தினவினதும், பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவினதும் பேச்சுக்கள்.

"சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்டுக் கட்சியும் 30 வருட காலத்திய அரசியல் வாழ்வை மறந்து உண்மையான சோசலிசத்துக்காக (வகுப்புவாதத்திற்காக) எங்கள் கட்சியுடன் சேர்தலிற் கூட்டுச் சேர்ந்தனர்."

அமைச்சர் இலங்கரத்தின.

"1964-ம் ஆண்டுக்கு முன்னர் நாங்கள் சமசமாசக் கட்சியுடனும், கம்யூனிஸ்டுக் கட்சியுடனும் தேர்தற் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துள்ளோம். ஆனால் இத்தடவை மார்க்சியவாதிகளுடன் கூட்டரசாங்கம் உருவாக்கியுள்ளோம். காரணம் மார்க்சியவாதிகள் காலஞ் சென்ற பண்டாரநாயக்காவின் மொழி, மதம், இலங்கை - இந்தியப் பிரச்சினை ஆகியவற்றையிட்டுக் கருத்திற் கொண்டிருந்த கொள்கைகளை ஏற்றுக் கொண்டமையே."

அமைச்சர் பீலிக்ஸ்.

### முடிவு என்ன?

இற்றைவரை நிதி அமைச்சர் பதவி வகித்தவர்களு...

(13-ம் பக்கம் பார்க்க)

## நம்மவர் சிந்தனைக்கு

## டாக்டர் பெரேராவின் 'சாதனைகள்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெமினி கணேசன் ஒரு கைரேகை நிபுணர்

## கணேசன் - ராஜன் இருவருக்கும் ஒற்றுமை?

காதல் மன்னன் ஜெமினி கணேசன் ஒரு கைரேகை நிபுணரும் கூட. இதைக் கேள்வியுற்றதும் ஜெமினி இரசிகர்களுக்கு ஆச்சரியம் ஏற்படலாம். ஆனல் அவருடன் அண்டிப் பழகுபவர்களுக்கு இது பெரிய அதிசயமில்லை.



படப்பிடிப்பகங்களில் ஜெமினியைப் பார்க்க வரும் நண்பர்களுக்கும் ஸ்டூடியோ சிப்பந்திகளுக்கும் ஜெமினி ரேகை சாஸ்திரம் கூறுவதுண்டு.

திரை நுணுக்கத் துறைகளில் சிறு பதவிகளில் உள்ளவர்கள் ஜெமினி கணேசனை அண்டி தங்களுக்கு டைரக்டர், காமிராமேன், ஆர்ட் டைரக்டர், ஒலிப்பதிவாளர் உத்தியோகங்கள் எப்போது கிடைக்கும் என்று சதா கேட்டுக் கொண்டேயிருப்பர். அது மட்டுமல்லாமல் இப்பொழுதெல்லாம் புது முகங்களாக வருபவர்கள், எக்ஸ்ட்ரா நடிகர்கள் முதலானேரும் ஜெமினியிடம் தங்கள் வருங்காலத்தையிட்டுக் ஆருடம் கேட்க ஆரம்பித்து விட்டனர்.

அண்மையில் 'அபிமன்யு' படத்திற்கு எடுக்கப்பட்ட காட்சிகளை பார்வையிட ஜெமினி, சாவித்திரி, ஏ. வி. எம். ராஜன் ஆகியோர் போயிருந்தனர். இப்படத்தில் அபிமன்யுவாக ராஜனும், கிருஷ்ணனாக ஜெமினியும் நடித்து வருகின்றனர். படம் முடிந்து வெளியேறியபோது ஜெமினி கணேசன் ராஜனின் கைரேகையைப் பார்த்து விட்டு, 'அடடே என் கையைப் போலவே உன் கையும் இருக்கே! என் கையிலுள்ள ரேகைகள் அத்தனையும் உன் கையிலேயும் இருக்கே! ஆச்சரியமாயிருக்கேப்பா!' என்றார். இதைக் கேட்டதும் ராஜன், 'இதுலே என்னுக்க ஆச்சரியப்படுறீங்க. நானும் புதுக்கோட்டை, நீங்களும் அந்த ஊர். நானும் நடிகன், நீங்களும் நடிகன். நீங்களும் ஒரு நடிகையை மணந்திருக்கிறீங்க, நானும் ஒரு நடிகையை 'புஷ்பலதா' மணந்துள்ளேன். அது மட்டுமல்லாமல் என்னைப் பார்ப்பவர்கள் அசல் ஜெமினி கணேசன் மாதிரி இருக்கிறீங்களே என்று கேக்கருங்க. இதை விட ஒத்துமை வேறு என்னுங்க இருக்க முடியும்?' என்று கூறினர்.

இதைக் கேட்ட ஜெமினி 'ஆமா, கலியாணத்துக் கப்புறம்...' என்றார். 'குழந்தை பிறந்ததும் உங்களுக்குத் தான் முதன் முதலில் சொல்லி அனுப்புறன் நீங்களே போ வைச்சிடுங்க' என்றார் ராஜன்.

'எல்லாத் துறையிலும் என்னை பின்பற்றுவது சரிதானப்பா. ஆனல் குழந்தைகளிலேயும் என்னைப் பின்பற்றுதே. ஏனென்றால் எனக்கு எல்லாமே பெண் குழந்தைகள் தான். நீயாவது பையன்களைப் பெறு. முதல் பையன் பிறந்ததும் பெயர் சூட்ட வாறேன். நான் பிராமணி பாரு. அதனலே தெட்சணையை மட்டும் 'ரெடி'யாக வைச்சுக்கோ' என்று ஜெமினி கூற எல்லோரும் சிரித்தார்கள்.



மர்மமான ஒரு சூழ்லை வைத்து உன்னதமாகத் தயாரிக்கப்பட்ட 'கோரு' என்ற இந்திப் படம் இப்பொழுது கொழும்பு கப்பிட்டல் திரையில் காண்பிக்கப்படுகிறது. இப்படத்தில் வஹீதா ரகுமான, பிஸ்வஜித், லலிதா பவர் ஆகியோர் நடித்துள்ளனர்.



சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் 'அல்லி' படத்தில் விஜயகுமாரியும், சௌகார் ஜானகியும் தோன்றும் விறுவிறுப்பான படம்.





## எம். ஜி. ஆர். நன்கொடை ரூ. 81,101-00



கடந்த வருடம் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் கொடுத்துள்ள நன்கொடை ரூ 81,101-00.

விபரம்

| | |
|---|---|
| மதுரையில் இடிந்து விழுந்த பள்ளிக்கு— | ரூ 10,000-00 |
| பெரு மழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு— | ரூ 15,000-00 |
| காமராஜர் பிறந்த நாள் விழாவுக்கு— | ரூ 1000-00 |
| பொறியியலாளர் புத்தக நிலையம்— | ரூ 50,000-00 |
| ப. ஜீவானந்தம் உருவச்சிலை நிதி— | ரூ 5,000-00 |
| மதுரைத் தமிழ்ச் சங்கம்— | ரூ. 101-00 |
| ஆக மொத்தம் | ரூ. 81,101-00 |

நடக்கவிருப்பவை

## இரு நாடகங்கள்

கலைவாணர் நாடக மன்றத்தின் மூன்ருவது தயாரிப்பாக 'தூள் தூள்', 'அக்கப் போர்' என்ற இரு நாடகங்களை 6-3-65ல் கமலா மோடி மண்டபத்தில் அரங்கேற்றவிருக்கின்றனர். 'தூள், தூள்' கதையை 'ஆர்பி' அவர்கள் எழுதியிருக்கிறார். 'அக்கப் போர்' என்ற கதையை 'சிறில்ஜே' அவர்கள் எழுதியிருக்கிறார்.

இந்த நாடகங்களில் குமாரிகள் ராஜாமணி, சியாமா, ஸ்ரீமாகாந்தி ஆகியவர்களுடன மன்ற நடிகர்களும் நடிக்கின்றனர். டைரக்டராக 'ஆர்பி'யும், துணை டைரக்டராக எஸ். தியாகராஜாவும் பணியாற்றுகின்றனர்.

## நிதி அமைச்சர்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

டன் இன்றைய இரு கலாநிதிப் பட்டம் பெற்ற நிதி அமைச்சர் டாக்டர் பேரேராவை ஒப்பு நோக்குகையில் இவர் தீவிர தமிழ் ஒழிப்பாளராகவே விளங்குகிருர். இந்த உண்மையை செங்கொடி வரவேற்புக் கொடுக்க எண்ணியிருப்பவர்கள் மறுப்பார்களா?

இன்று நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா வரப்போகிருராம். இவரின் வருகையினல் தமிழ் பேசும் மக்களினது தியாகம் மீண்டும் பரீட்சிக்கப்படப் போகிறது. அன்று அமரர் கந்தையாவை இழந்தோம். இன்று ......? ஏதுவு என்ன... பொறுத்திருந்து பார்ப்போம்?

## சாம்பார் சட்டியுள் விழுந்த டோப்பா


ஸ்ரீலிமா துறையில பிரபலமடைவதற்கு முன்னர் தங்கவேலு நாடகங்களில் நடித்து வந்தார். ஒரு தடவை ஒரு நாடகத்தில இலட்சுமணனுக வேடம் புனைந்து மேடைக்குப் போகத் தயாராக நின்றிருந்தார் தங்கவேலு.

தான் மேடைக்குச் செல்ல சற்றுத் தாமதம் ஏற்படுமாதலால், அடுப்படிக்குச் சென்று சுமார் 40 பேருக்குத் தயாராகிக் கொண்டிருந்த சாம்பார்ச் சாடியை எட்டிப் பார்த்தார். தற்செலாக அவருடைய தலையில் கட்டப்பட்டிருந்த டோப்பா அவிழ்ந்து சாம்பாருக்குள் விழுந்து விட்டது.

இதே வேளையில் இலட்சுமணனின் வரவு மேடைக்குத் தேவைப் பட்டதும் அவரை எங்கும் தேடினர்கள். டோப்பா இன்றி இலட்சுமணன் சாம்பார்ச் சட்டியண்டை காட்சி அளித்தார்.



மேடையில் இராமராக வேடம் புனைந்தவர் இலட்சுமணனை அழைக்க, மேடையின் உட்புறத்தில் திரைக்குப் பின்னுலிருந்து இலட்சுமணர் (தங்கவேலு) பலத்த சப்தமாக 'இராமண்ணா இங்கே வாருங்கள் இந்த விபரீதத்தைப் பாருங்கள்' என்று குரல் கொடுத்தார். இராமன் உள்ளே ஓடினர். அவருடைய தலையிலிருந்த டோப்பாவைப் பறித்துத் தன் தலையில் மாட்டிக் கொண்டு ஓடி வந்து மேடையில் குதித்து இலட்சுமணன் நிலைமையைச் சமாளித்தார்.



கொழும்பு சிவசக்தி கலை அரங்கு அளிக்கும் 'பெட்டிப் பாம்பு' என்ற நகைச்சுவை நாடகம் அச்சுவேலி கிறிஸ்தவ கல்லூரியில் 27-2-65 நடக்கவிருக்கிறது. இந்நாடகத் ... திரு ஆர் ஜெகசோதி. இந்த நாடகத்தில் குமாரி சந்திரகலா இவ்வாறு காட்சிதருகிறார்.

## சிவாஜியின் நன்கொடை ரூ. 70,000-00



கடந்த வருடம் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அளித்துள்ள மொத்த நன்கொடை ரூ 70,000-00; 1964ம் ஆண்டில் பெய்த பெரு மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிவாஜி கணேசன் அளித்த தொகை ரூ 20,000-00 நன்னிலம் அரசாங்க வைத்தியசாலைக்காக அவர் வழங்கியது ரூ. 50,000-00. இதை விட வேறு பல சிறு தொகை நன்கொடைகளையும் சிவாஜி கணேசன் வழங்கியிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடதுசாரிகளின் நச்சுப் பிரசாரம்

## தமிழினத்தைப் பிரிக்க புதிய சூழ்ச்சி

ஒன்று பட்டு நிற்கும் தமிழ் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி, அதன் மூலம் தம்மை வளர்த்துக் கொள்ளப் பார்க்கின்றன இடதுசாரிக் கட்சிகள். இவற்றின் நச்சுப் பிரசாரம் இன்று மிச்சமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழ் மண்ணிலிருந்து எப்பொழுதோ சீட்டுக் கிழிபட்டுவிட்ட கட்சிகள் இவை. ஆனால், விட்டுக் கொடுக்க மனமின்றி இன்னமும் ஒட்டிக்கொண்டிருக்கப் பார்க்கின்றன. தமிழ் மக்களின் உரிமைகளைப் பற்றிச் சிந்திக்கக்கூட விரும்பாமல், சிறிமாவுடன் கூட்டுச் சேர்ந்த இரு இடதுசாரிக் கட்சிகள், வெட்கமின்றி, மானமின்றித் தமிழ் மக்களின் முன்னால் வந்து வாக்குக் கேட்கின்றன.

தமிழர்களைப் பிரிக்க முயலும் இன்னொரு 'குட்டிக்' கட்சி புரட்சிவாத சமசமாசக் கட்சி. இதன் வால் தமிழ் மண்ணில், காங்கேசன்துறைத் தொகுதியில் மட்டும்தான் ஆடுகிறது. 'விளையாட்டுத் தனமான' இந்தக் கட்சிகளிலேயெல்லாம் தமிழ் மக்களிற் சிலர் நம்பிக்கை வைத்திருப்பது விந்தையேயாகும்.

### கொல்வின் வந்தார்...

டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா அண்மையில் வடக்கிற்கு வந்தார். கூட்டங்களிலெல்லாம்' 'பொருளாதாரம்... பொருளதாரம்' என்று குளறித் தள்ளினார்; போய் விட்டார்! மொழிப் பிரச்சினை பற்றிப் பல கூட்டங்களில் ஒரு வார்த்தையேனும் பேசவில்லை. சில கூட்டங்களில், மறந்து போய்ப் போலும், 'உப்பில்லாத' ஒன்றிரண்டு வார்த்தைகள் சொன்னார். இது எதனைக் குறிக்கிறது? அவர்களுக் மொழிப் பிரச்சினையில் அக்கறை இல்லை என்பதைத் தானே!

தமிழர் தந்தை திரு. செல்வநாயகத்தை வாயாரத் திட்டினார். தமிழ் இளைஞர்களின் உள்ளங்களை அவர் பழாக்கி விட்டதாகவும், தாம் அவற்றைத் திருத்தியமைக்க வந்திருப்பதாகவும் தம்பட்டமடித்துக் கொண்டார். அதாவது, தனிச் சிங்களச் சட்டத்தை இளைஞர்கள் எதிர்ப்பது பிழை என்ற அர்த்தம் அவரது பேச்சுக்களிற் தொனித்தது.

பாடப் புத்தகங்களின் விலையைத் தாங்கள் குறைத்து விட்டதாகவும், ஆகவே, மாணவர்கள் தங்களையே ஆதரிக்க வேண்டுமென்றும் கூட உளறினார். பரிதாபம்! 'அரைச் சதத்துக்காக மொழி உரிமையை விற்கும் அறிவிலிகள் தமிழ் இளைஞர்கள்' என்று எண்ணினார் போலும்!

இந்தப் பேச்சுக்களையெல்லாம் கேட்ட தமிழ் இளைஞர்களின் இதயங்கள் கொதித்தன. மார்ச் 22ம் திகதியை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழர்களின் ஒற்றுமையுணர்ச்சியைக் கொல்ல வந்த கொல்வினின் பேச்சுக்கள், தமிழ் மண்ணைப் பொறுத்தவரையிற் குற்றுயிராய்க் கிடந்த அவரது கட்சிக்கே இறுதி நஞ்சாக அமைந்திருந்தன!

### எட்மன்ட் வந்தார்...

'புரட்சிவீரர்' எட்மன்ட் சமரக்கொடியும் வடக்கிற்கு வந்தார். 'பகிரங்கக் கடிதம்' என்ற பெயரிலே தமிழரசுக் கட்சியின் மேல் வசைபாடும் ஒரு சிறு பிரசுரத்தையும் வெளியிட்டிருக்கிறார். இந்தப் பிரசுரத்தைச் சிறிது பார்ப்போம்.

'...ஆனால் தமிழ் மக்களை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினையைத் தானும் புரிந்து கொள்ளும் ஆற்றல் எள்ளளவும் இல்லாததாக, தமிழ் மக்கள் ஏற்றுள்ள தலைமைப் பீடம் உள்ளது...இருட்டில் அது தட்டத் தடவிச் செல்கிறது ... ஏதாவது ஏற்படுமென்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறது' —இப்படிச் சொல்லித் தமிழ் பேசும் மக்களின் மேற் பிழையைப் போடுகிறது அப்பிரசுரம்.

அவர்கள் தேர்ந்த தலைமைப்பீடம் தவறானதாம். பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் கண்களுக்கும், தலை சிறந்த அரசியல் வாதிகளின் கண்களுக்கும் சரியெனப்படும் தலைமைப் பீடம், 'புரட்டிக் கொட்டி' உரிமை பெறப் போவதாகச் சொல்லும் இந்தப் புரட்சிவாதிகளின் கண்களுக்குப் பிழையெனப்படுகிறது இது அவர்களின் கண்களிலும், சிந்தனையிலும் உள்ள பிழையேயன்றி வேறல்ல.

புரட்சிவாத சமசாஜக் கட்சியின் தலைமை தான் தமிழ் மக்களுக்கு வேண்டுமாம். இதிலே, விந்தையென்னவென்றால் ஒரேயொரு தமிழ்த் தொகுதியிற்தான் இக்கட்சி போட்டியிடுகிறது! இந்த நிலையில், எப்படி ஐயா உங்கள் தலைமையைத் தமிழ் மக்கள் பெறுவது சாத்தியம்?'

தமிழ்த் தலைவர்களை நேரடியாகத் தாக்குகிறது பிரசுரம். அமிர்தலிங்கம் தம்பதிகள் இராஜரத்தினம் தம்பதிகளின் தமிழ்ப் பதிப்புக்களாம்! 'இராஜரத்தினவையும் அமிர்தலிங்கத்தையும் ஒப்பிடும் அளவிற்கு உங்கள் புத்தியில் என்ன மந்தமா?' என்று சமரக்கொடியைக் கேட்கிறார்கள் தமிழ்மக்கள். தமிழ் வகுப்புவாதம்' என்ற சொல் பிரசுரத்தில் அடிக்கடி பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. உரிமையைக் கேட்பது வகுப்புவாதமல்லவென்பதை நாம் சொல்லியாதிரு எட்மன்ட் தெரிந்துகொள்ள வேண்டும்?

தமிழர் இயக்கத்தைப் பிளவபடுத்தி, உள்ள உரிமைகளையும் பறிகொடுப்பதற்குத் திரு. எட்மன்ட்டின் யோசனை சிறந்ததேயன்றி, வேறொன்றுக்கும் அது உதவாது. தமிழ், சிங்கள, தோட்டத் தொழிலாளர்களை ஒன்று படுத்திப்புரட்சிசெய்யப்போகிறாராம்; அதுவரை தமிழ் மககள் காத்திருக்க வேண்டுமாம்! இது கேலிக் கூத்தாக இல்லையா? இவரது திட்டம் கைகூடு முன்னர் தமிழ் இனம் அழிந்து போய் விடும், இவரை நாங்கள் பின்பற்றினால்! எனவே, தமிழினத்தை காக்கும் சக்தியுடையது தமிழரசுக் கட்சியே. இது சிறு குழந்தைக்குக் கூடப்புரியும்!

**மாவிட்டபுரத்தோன்**

## வரோதயரின் வழித்தோன்றல் மாணிக்கராசா



முன்னாள் திருகோணமலையின் பிரதிநிதியாக அரசாங்க சபையில் இருந்தவரான திரு. எம். எம். சுப்பிரமணியத்தின் புதல்வரான திரு மாணிக்கராசா இளமையிலேயே தமிழார்வமும் திறமையும் கொண்டுவாழ்ந்தவர். சட்டப்படிப்பை முடித்துக் கொண்டதும் ஓரளவு அமைதியான வாழ்க்கையைக் கடைப்பிடிக்கலானார்.

திருகோணமலை நகரின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டுமென்ற ஆர்வம் இவரை இந்நகரின் தலைவராக சிலஆண்டுகள் ஆக்கியது அத்துடன் சரித்திரப் பெருமையும் புராணப்புகழும் கொண்ட திருக்கோணேசுவரத்தைப் புநருத்தாரணம் புரிய ஏற்படுத்தப்பட்ட குழுவுடனும் இணைந்து அரும் பணிபுரிந்தார்.

திருமலை தந்த தீராகத் திகழ்ந்த திரு இராசவரோதயம் அவர்களுடனும் இந்நகரினதும், இந்நகரை அடுத்த பிரதேசங்களினதும் மேம் பாட்டுக்காக திரு. மாணிக்கராசா உழைத்து வந்துள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்ற காலத்திலிருந்து திருகோணமலை தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் பேரியக்கங்களுக்கு எப்பொழுதும் பேராதரவு அளித்து வந்துள்ளது.

தீரர் இராசவரோதயம் திருமலை இளைஞர்களை போர்க்கள வீரர்களாகவே மாற்றி அமைத்துள்ளார். அமைதியும் ஆற்றலும் மிக்க அந்த அமரர் காட்டிய வழியிலே சென்று பழக்கப்பட்ட இளைஞர்கள் அவர் காட்டிய வழியிலேயே அறப்போருக்கு அணிவகுத்துச் செல்லுகின்றனர்.

தீரர் இராசவரோதயம் தளகர்த்தராக நின்று திருமலையைக் காத்தார். அவர் மறைந்ததும் அவருடைய பணியினை திரு. மாணிக்கராசா ஏற்றார்—அமரர் வழியில் அணுவளவும் பிசகின்றி அனைவரையும் அழைத்துச் செல்லுகின்றார்.

தமிழன்னைக்குச் சேவை செய்யத் தம்மை அர்ப்பணித்துவிட்ட திரு. மாணிக்கராசா வாழ்க்கையில் வேறு பற்று எதுவும் கொண்டவராகத் தெரியவில்லை-அவர் ஒரு பிரமச்சாரியும் கூட.

பண்டு தொட்டு பழந்தமிழின் மானம் காத்து வரும் திருமலை, திரு. மாணிக்கராசாவையே தெரிவு செய்து, தமிழைக் காட்டிக் கொடுக்கும் தீய சக்திகளுக்கு நல்ல புத்தி ஏற்பட வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

## தந்தை செல்வநாயகத்தின்....

இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் பாரபட்சமான வகுப்புவாத சட்டமியற்றும் வரிசையில் அடுத்து வரவிருப்பது இந்த மொழிப் பிரச்சினையாகவே இருக்கப் போகிறது. சில சமயம் அதோடு மட்டும் இவர்கள் நின்று விடப் போவதில்லை. அதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

...இந் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததை யொட்டி இச் சபையிலே பாராட்டுத் தீர்மானத்தை முன்மொழிந்த பொழுது நான் கூறினேன்—

"உண்மைதான். உங்களைப் பொறுத்தவரை இது நிச்சயமாக ஓர் அரசியல் முன்னேற்றந்தான். ஆனால் ஒரு தமிழன் என்ற வகையில் நான் எந்த மக்களது பிரதிநிதியாக இங்கு நிற்கிறேனே. அந்த மக்களுக்கும் இது ஓர் முன்னேற்றந்தான் என்று என்னால் உணர முடியவில்லை."

### பிரதமரின் போக்கு

அந்த நாளிலிருந்து இந்த நாட்டில் இயற்றப்பட்ட பல சட்டங்களை யொட்டி எனது இனத்தைச் சேர்ந்த மக்கள் பல கேள்விகளைக் கேட்கிறார்கள். நாம் இந்த நாட்டிலுள்ள ஏனைய மக்களுடன் சரிநிகர் சமானமாக தலை நிமிர்ந்து நிற்க முடியுமா?

நீங்கள் இந்தப் பாராளுமன்றத்தில் வைத்து எந்தச் சட்டத்தையும் ஆக்கி நிறைவேற்றலாம், எமது உணர்ச்சிகள் எவ்வாறு புண்பட்டாலும் அதை நீங்கள் இந்தச் சபையில் மதிக்காது நடக்கும் வண்ணம் நாட்டின் அரசியல் அதிகாரம் உங்கள் கையில்தான் உண்டு. பிரதமர் பெற்ற சுதந்திரம் இந்நாட்டிலுள்ள பெரும்பான்மையினருக்கே உரியது. இந்த சுதந்திரத்தை இங்கு வாழும் எல்லா இன மக்களும் அனுபவிக்கக் கூடிய வண்ணம் நடந்து கொள்ள விரும்பினால்; அதற்கேற்ற அதிகாரம் பிரதமர் பெற்றிருக்கிறார். ஆனால் அந்த புனித நோக்குடன் பிரதமர் துர்ரதிட்டவசமாக நடந்து கொள்வதாகக் காணோம். அதற்கு மாறாக, இதற்கு எதிரான திசையிற்தான் பிரதமர் போய்க் கொண்டிருக்கிறார் என்பதற்குரிய பல அறிகுறிகளை நான் இன்று காண்கிறேன்."

எனவே இந்தச் சட்டத்தைப் பற்றி அதிருப்தி கொண்ட (தமிழ் காங்கிரஸ்) பகுதியினரின் சார்பில் எனது கண்டனத்தை இங்கு பொறித்து வைக்க விரும்புகிறேன்."

### இராசதந்திரி

ஒரு அரசியல் வாதிக்கு நிகழ்கால நிகழ்ச்சிகளை எடை போட மட்டும் தெரிந்தால் போதாது. இருபது, முப்பது ஆண்டுகளுக்குப் பின் என்ன நடக்கப் போகிறதென்பதை ஊடுருவிப் பார்க்கும் ஆற்றலும் இருக்க வேண்டும். இந்தூர நோக்கு—தீர்க்கதரிசனம் உள்ள ஒருவரையே இராசதந்திரி (Statesman) என்று அரசியல் விற்பன்னர்கள் அழைப்பார்கள். மேலே கொடுக்கப்பட்டிருக்கும் தந்தை செல்வநாயகம் அவர்களுடைய தீர்க்க தரிசனம் நிரம்பிய பேச்சு அவரை அத்தகைய அந்தஸ்துக்கு உயர்த்தி வைத்துவிட்டது என்பதை காய்தல் உவத்தலின்றி நோக்குபவர்கள் ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

மசோதா மூன்றுவது முறையாக வாசிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விட்ட பொழுது அதை ஆதரித்து 52 பேரும், எதிர்த்து 32 பேரும் வாக்களித்தார்கள்.

### எதிர்த்தவர்கள்

இலங்கை இந்திய காங்கிரசைச் சேர்ந்த 8 உறுப்பினர்களும் மசோதாவுக்கு எதிராக வாக்களித்தார்கள்.

அ. இ. தமிழ் காங்கிரசைச் சேர்ந்த 7 உறுப்பினர்களில் தந்தை செல்வநாயகம், கோப்பாய் பிரதிநிதி கு. வன்னியசிங்கம், திருமலைப் பிரதிநிதி சிவபாலன் மூவரும் மசோதாவுக்கு எதிராக வாக்களித்தார்கள்.

### ஆதரித்தவர்கள்

அமைச்சர் பொன்னம்பலம் துணை அமைச்சர் [illegible] ஆகியோர் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

சாவகச்சேரிக் குமாரசுவாமி (இன்றைய த. கா. கிளிநொச்சி வேட்பாளர்) நொண்டிக் காரணம் காட்டிவிட்டு பாராளுமன்றத்துக்கு வருகை தராது பதுங்கிக் கொண்டார்.

திருவாளர் சுந்தரலிங்கம் அப்போது வர்த்தக அமைச்சர் வாக்கெடுப்பு நேரத்தில் மசோதாவை ஆட்சேபிக்கு முகமாக சபையிலிருந்து வெளியேறினார்.

தமிழ்ப் பிரதிநிதிகளில் உதிரிகளான கல்குடா நல்லையா—அப்போது அரை அமைச்சர்—திவுப் பிரதிநிதி ஏ. எல். தம்பிஐயா, கல்முனைப் பிரதிநிதி எம். எஸ் காரியப்பர், பட்டிருப்பு எஸ் யூ. எதிர்மன்னசிங்கம் ஆகியோர் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தார்கள்.

8 லட்சம் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களது குடியுரிமைக்கு பொன்னம்பலத்தின் உதவியுடனும், ஒத்துழைப்போடும் வேட்டு வைத்துத் தகர்த்த பெரிய செனநாயக்கா, அடுத்த நடவடிக்கையாக அவர்களது வாக்குரிமைக்கும் திரிவைத்தார். அதை அடுத்த கட்டுரையில் காண்போம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்றொருநாள் ஞாயிற்றுக்கிழமை...! எப்போதுமே அமைதியாக விளங்கிய அந்தத் தீவு...!அல்லோலகல்லோலப்பட்டது. காரணம்...! அதைவிட்டு வெளியே பொன்றின் மாணவர்கள் சுமார் ஐம்பது பேர் உல்லாசப் பிரயாணத்தின் நிமித்தம் அங்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

மாணவர்கள்... கூட்டங் கூட்டமாக அங்கு மிங்கும் ஓடியாடிக் கும்மாள மடித்துக்கொண்டிருந்தனர்.'சாப்பாட்டுராமர்கள்' அங்கு தென்பட்ட காய், கனிகளைப் பிய்த்து வாயிலே போட்டபடி திரிந்தனர். அப்போது..!

மதிய உணவிற்கான மணி ஒலித்தது. எல்லோரும் ஒரு குறிப்பிட்ட மரத்தடியை அடைந்து, வரிசை வரிசையாக உட்கார்ந்து கொண்டனர். எல்லோருக்கும் இடியப்பம் பரிமாறப்பட்டது. எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு சாப்பிட்டனர். சாப்பாடு முடிந்ததும்... ஆசிரியர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க எல்லோரும் ஒரு பெரிய ஆலமர நிழலில் அரை வட்டமாக அமர்ந்து கொண்டனர்.

பொழுது போக்கிற்காகக் கதம்ப நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக நடை பெற்றுக் கொண்டிருந்தன. அசோகன், கட்டப்பொம்மன் ஆகிய குட்டி நாடகங்களை அடுத்து எட்டாவது வகுப்புப் படிக்கும் குகன் தனது விசித்திரத் தொண்டையின் மூலம் பல அறிஞர்கள், கலைஞர்களைப் போலெல்லாம் குரலை மாற்றிப் பேசி அனைவரது பாராட்டுக்களையும் தட்டிக் கொண்டான். கதை சொல்வதில் பிரசித்தி பெற்ற ஒரு ஆசிரியர் துப்பறியும் கதை யொன்று சொல்லி மாணவர்களை மகிழ்வித்தார்.

பிற்பகல் நான்கு மணியானதும்... எல்லோருக்கும் அவலும், தேநீரும் வழங்கப்பட்டன. பின்பு...ஆசிரியர்கள் பத்திரிகை படிப்பதிலும், மாணவர்களிற் சிலர் விளையாட்டிலும், வேறு சிலர் பழங்கள் பறிப்பதிலும் ஈடுபட்டனர். சற்றுத் தொலைவில் தென்பட்ட நாவல் மரமொன்று பழுத்துக் குலுங்குவதை அவதானித்த குகன்... ஓடிச் சென்று அந்த மரத்தில் ஏற முயற்சித்தான். அப்போது...!

பற்றைக் குள்ளிருந்து ஏதோ சரேலென்று பாய்ந்து ஓடியது. குகன் கூர்ந்து நோக்கினான். அது...ஒரு குட்டி முயல்.

குகனிற்கு முயலென்றால் உயிர், குட்டி முயலை எப்படியாவது பிடித்துக் கொண்டு போய் மற்றவர்களிடம் காட்டி மகிழவேண்டும் என்ற ஆசையில் குட்டி முயலைத் துரத்தி ஓடினான். குட்டி முயலும் பயத்தில் துள்ளிக் குதித்துக் கொண்டு பாய்ந்து ஓடியது. குகனும் விடாமல் முயலைத் தொடர்ந்து காடு மேடெல்லாம் விரைந்தோடினான். சுமார் ஒரு மைல் ஓடியதும்...!குட்டி முயல் எங்கோ மாயமாக மறைந்து விட்டது. குகன் எவ்வளவு முயன்றும் குட்டி முயல் தென்படவேயில்லை.

தொடர்ந்து ஒரு மைல் ஓடிவந்ததால் அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. உடல்...ஒரேயடியாகச் சோர்வடைந்து விட்டது. நாவறட்சியைத் தீர்ப்பதற்கு தண்ணீர் தேடி அலைந்தான்...கிடைக்கவேயில்லை. அவனுக்கு மூச்சு விடுவதறகே சிரமமாயிருந்தது. குகனுக்கு ஒருவித மயக்கம் ஏற்படுவது போலிருந்தது. அடுத்தகணம்... "ஐயோ! அம்மா...!" என்று அலறியபடி தரையில் சாய்ந்தான். அதே நேரத்தில்...!

கடற்கரையிலே கிடந்த இயந்திரப் படகிலிருந்து பலமாக மணியோசை கிளம்பியது. உடனே...பலபாகங்களிலிருந்தும் ஓடிவந்த விடுதி மாணவர்கள் முண்டியடித்துக் கொண்டு இயந்திரப் படகில் ஏறிக் கொண்டனர். இறுதியாக...ஆசிரியர்கள் ஏறிக் கொண்டதும் "எல்லோரும் வந்து விட்டார்களா?" என்று கேட்டார் ஒரு ஆசிரியர். குகன் வராததை உணராத மாணவர்கள் "ஆம்சார்! எல்லோரும் வந்து விட்டோம்" என்று ஒரே நேரத்தில் இரைந்து கத்தினார்கள். அடுத்த நிமிடம்...!பொங்கியெழும் அலைகடலைக் கிழித்துக் கொண்டு இயந்திரப்படகு இரைச்சலுடன் கிளம்பியது. பாவம் குகன்...!

எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தானோ அது அவனுக்கே தெரியாது. திடீரென்று கண்களைத் திறந்தான் எங்கும்...!பயங்கர இருள் மண்டிக் கிடந்தது. அப்போது நேரம் சுமார்...ஏழு மணியிருக்கும். அவனை ஒரு வித இனந்தெரியாத பயம் பற்றிக் கொண்டது. உடல்......'கிடுகிடு' என நடுங்க ஆரம்பித்து விட்டது. ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு, வந்த வழியே திரும்பி ஓடிக் கடற்கரையில் இயந்திரபடகு கிடந்த இடத்திற்கு வந்தான். அந்த இடம்...! காலியாகக் கிடந்தது. அவனுக்கு [illegible] நின்று விடும் போ[illegible]

(வளரும்)




# புதுமைகள் பாரீர் பாரினிலே-(36)

—அன்ரனி பெர்னண்டோ, கிரிலப்பனை —

## கடல் நீரைக் குடிக்கிறார்கள்!

ஆண்டுதோறும் அமெரிக்காவில் சராசரி 29.25 அங்குலம் தண்ணீர் மழையாகப் பொழிகிற தென்று கணித்திருக்கிறார்கள். இதில் முக்கால் பங்களவு அதாவது 20.67 அங். தண்ணீர் ஆவியாகி மீண்டும் ஆகாயத்தை அடைகிறது. மக்களின் பாவிப்புக்கு 8.96 அங். மட்டுமே மிஞ்சுகிறது. இதிலும் சுமா 2.96 அங். தான் உண்மையில பாவிக்கப்படுகிறது. மற்ற 5.62 தண்ணீரும் வழிந்தோடிக் கடலோடு கலந்துவிடுகிறது.

மக்களின் பாவிப்பிற்கும், பயிர்கள், பண்ணைகள், தொழிற்சாலைகள், கட்டிட வேலைகள் என்பவற்றிற்கும் தினமும் பெருவாரியான தண்ணீர் தேவைப்படுகிறது. நவீன முறைகளில் அமைக்கப்பட்டுள்ள நீர்த்தேக்கங்கள் இயற்கையோடு சேர்ந்து இத்தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

மக்கள் தொகையும் தொழிற்சாலைகளும் பெருகிவரும் வேகத்தைப் பார்த்தால் வருங்காலத்தில் தண்ணீர்ப் பஞ்சம் வருமே என்று அமெரிக்க அறிவர்கள் அஞ்சினர். மேலும் வரண்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் தண்ணீரின்றி வாடக் கண்டு அவர்கள் துயர் துடைக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டனர். எனவே, போதிய தண்ணீரைப் பெறுவதற்கு வழிகள் ஏதும் இல்லையா என்று அவர்கள் அலசி அலசி ஆராய்ந்தனர்.

பரந்து விரிந்த கடல் அவர்களின் கண் முன்னே காட்சியளித்தது. இந்தக் கடலிற்தான் வேண்டியளவு தண்ணீர் இருக்கிறதே. அது உப்பில்லாத நன்னீராக மட்டும் இருக்குமானால் உலகிலே தண்ணீர் இல்லை என்ற பேச்சுக்கே இடமிருக்காது. எனவே, இந்தக் கடல் நீரை எப்படியாவது நன்னீராக்கிப் பாவிப்பது என்று அறிவர்கள் தீர்மானித்தனர்.

இதன் பயனாய் இப்போது டெக்சாஸ் என்னுமிடத்தில் கடல் நீரை நன்னீராக மாற்றும் முதல் இயந்திரம் நிறுவப்பட்டிருக்கிறது. இது ஒரு நாளைக்கு 8,36000 கலன் கடல் நீரை நன்னீராக மாற்றுகிறது. அப்பகுதி மக்கள் இந்தக் கடல் நீரைத்தான் குடிக்கிறார்கள்.

நன்னீர் பெறுவதற்கு மிகவும் சுலபமான மலிவான வழியென்று சொல்லும் அளவிற்கு இம்முறை வெற்றியளித்திருக்கிறது. அப்படியிருந்தும் கடல் நீரை நன்னீராக மாற்றுவதற்கு ஏற்படும் செலவை இன்னும் குறைப்பதற்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது பற்றி அமெரிக்க அறிவர்களும் சோவியத் அறிவர்களும் சேர்ந்து ஆலோசித்துவருகிறார்கள்.

அணுசக்தித் தொழிற்சாலைகளில் விளையும் வெப்பத்தை இதற்குப் பயன்படுத்தலாமென அவர்கள் நம்புகின்றனர். இது சாத்தியமானால் இனிமேல் தண்ணீருக்காக நாம் வானத்தை நம்பியிருக்கத் தேவையில்லை அன்றோ!

# கலங்கரை விளக்கு எமது வேட்பாளர்

செந்தமிழ் மொழிக்காகத் தன் உயிர், உடல், பொருள், ஆவியனைத்தையும் அர்ப்பணித்த 'திருமலை சோதி' இராசவரோதயம் அவர்களின் பணியைத் தொடர்ந்து செய்வதையே தனது குறிக்கோளாகக் கொண்டு, தீந்தமிழர் கோட்டையாம் திருமலையில் தமிழரசுக் கட்சி வேட்பாளராகக் களம் புகுந்துள்ள திரு. சு. ம. மாணிக்கராசாவே எங்கள் வேட்பாளர் ஆவர்.

விடுதலை இயக்கமாம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடும் இவர் இலங்கைச் சட்ட சபையில் அங்கத்தவராகக் கடமையாற்றிய திரு. சுப்பிரமணியத்தின் புதல்வராவர். இவர் திருகோணமலை நகர சபையில் 1945ம் ஆண்டு தொடக்கம் 1953ம் ஆண்டு வரை தலைவராகக் கடமையாற்றி திருமலை மக்களுக்கு அளப்பாரிய சேவைகள் செய்தவர்.

[illegible] திருகோணமலையில் பல காலம் சேவையாற்றிய இவர் திருகோணமலை இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவர். திருகோணமலைத் தொகுதி அன்று அன்னியர்களால் ஆளப்பட்ட காலந்தொட்டு துன்பச் சூழலிலே சிக்கித் தவித்த திருகோணமலை மக்களுக்கு ஒளி விளக்காய்த் தோன்றிய 'சோதி' வரோதயம் பன்னிரண்டு வருட காலமாக எங்கள் பிரதிநிதியாய் இருந்து அண்மையில் மரணமானதைத் தொடர்ந்து அரசியல் களம் புகுந்த எங்கள் வேட்பாளர் கலங்கி நின்ற எமக்கு கலங்கரை விளக்காய்த் துலங்குகின்றார்.

சாதி, சமய, இன வேறுபாடின்றி சேவை புரியும் இவர் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கொள்கையிற் திளைத்தவர். தமிழரசுக் கோட்டையாம் திருமலையின் தேவைகளை அவ்வவ் வேளைகளில் அறிந்து அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்து வரும் எங்கள் வேட்பாளர் நேர்மையான பண்பாளர்.

இந்த மண் மீதில் தமிழினம் வாழ, வண்டமிழ் வளம் குன்றாது வளர, வற்றாத தமிழின்பம் நாம் பெற்று மகிழ,

## எங்கள் தாத்தா

- தம்பு—ராஜேஸ்வரி

ஈழ நாட்டின் தவப்புதல்வன்; தமிழ் பேச இனத்தின் தந்தை, சத்தியத்தின் பிறப்பிடம்; சாந்த சொரூபி எங்கள் வேட்பாளர் தாத்தா சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கள் தமிழினம் அவரைத் தந்தையென அழைத்த போதும் வளர்மதி மருமக்களாகிய நாங்கள் அவரைத் தாத்தா என்றே அழைக்க விரும்புகிறோம். இது எங்கள் உரிமை.

அன்று; "நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல் செல்லு தமிழெங்கே?" என்றார்கள். இன்று; "தெல்லி நகர் செல்வநாயகம் பிறந்திலரேல் வண்டமிழர் வாழ்வெங்கே?" என்ற படம் வேண்டும்.

1948-ம் ஆண்டு இலங்கை, பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் பிடியிலிருந்து விடுபட்டது என்னவோ உண்மைதான். ஆனால் ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இந்த அதிகார மாற்றம் எத்தகைய சிறப்பையும் கொடுத்துவிடவில்லை. தமிழ் பேசும் மக்கள் மேலும் சித்திரவதை செய்யப்பட்டு சிதைக்கப்பட்டார்கள். தமிழினத்தின் காவலர்கள் என்று கூறியவர்கள் நட்டாற்றில் கைவிட்டதுடன், காட்டிக் கொடுக்கவும் செய்தார்கள். ஆனால், தாத்தா செல்வநாயகம் அவர்களைப் பொறுத்தவரையில் அன்று முதல் தமிழினத்தை வாழ்விப்பது என்ற தனது கொள்கையில் சிறிதும் மாற்றமின்றி, அதற்காக உழைத்து வருகிறார்.

தமிழினத்தின் விடுதலைக்காக இன்னல் பல பட்டுள்ளார் தாத்தா அவர்கள். சிறை சென்றார், ஆட்சியாளரின் அடக்கு முறைக்கு இலக்கானார். என்றாலும் அவரின் நோக்கம் சிதைந்துவிடவில்லை.

சட்டத் துறையில் உயர்ந்து சிறந்து விளங்கிய அவர், விரும்பியிருந்தால் இந் நாட்டின் பிரதம நீதியரசராகியிருக்க முடியும். ஆனால் இனத்தின் விடுதலையைத் தனது தலையாய இலட்சியமாகக் கொண்ட அவர் தோல்வியைக் கண்டு துவண்டுவிடாது உழைத்தார். இன்று இலட்சியத்தின் வெற்றியை நோக்கி விறுநடை போடுகிறது தமிழினம். அந்த அணிவகுப்பின் தலைவராக, தளபதியாக விளங்கும் தாத்தா அவர்கள் சுதந்திர தமிழினத்தைக் காணும் நாளை வெகு தூரத்திலில்லை.

## நாட்காட்டி வேண்டுமா?

அடுத்த இதழை எதிர்பாருங்கள்.

நாடாண்ட நம்மினத்தின் நலிவு போக்க, தன்மானத் தமிழினம் தலை நிமிர்ந்து வாழ களம் புகுந்துள்ள எங்கள் வேட்பாளர் திரு. சு. ம. மாணிக்கராசா அவர்கள் வெற்றி பெறுவது உள்ளங்கை நெல்லிக் கனி.

சி. சண்முகலிங்கம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது!

செண்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) சீகிரி (பண்டாரவளை)

"எதிர்க்கட்சி என்றால் என்ன?" இப்படிக் கேட்கிறார் நாகேஷ் எம். ஆர். ராதாவை!



அதற்கு எம் ஆர். ராதா அளிக்கும் பதில் புதுமையானது! அவருக்கே சொந்தமானது! அதை நீங்களே சென்று அவர் வாயால் கேட்டு மகிழுங்கள். அவர்தான் குத்தல் பேச்சுக் காரராச்சே!

கதை, வசனம், டைரக்ஷன்:
**கே. எஸ். கோபாலகிருஷ்ணன்**



ஜெமினி கணேசன் — சாவித்திரி — ராதா நடித்த

# ஆயிரம் ரூபாய்

வழக்கமாக நாகேஷ் ஒரு படத்தில் தோன்றுகிறார் என்றால், அது நகைச் சுவைப் பாத்திரமாகவே இருக்கும்!



'ஆயிரம் ரூபா'யில் நாகேஷ் புதுமையான பாத்திரத்தில் தோன்றி நடிக்கிறார். ஆனால், அவர் தமது ரசிகர்கள் மீது ஒரு குற்றச்சாட்டைச் சுமத்துகிறார். தான் எவ்வளவு 'சீரியசா'ன 'ரோல்' செய்தாலும் ரசிகர்கள் சிரித்துக் கொண்டே யிருக்கிறார்களாம்!

---

திரளான இரசிகர்கள் கண்டு களிக்கின்றனர்

செல்லமஹால் [கொட்டாஞ்சேனை]

மற்றும் 7 திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, அசோகன், புஷ்பலதா, நாகேஷ், சகஸ்ரநாமம், சௌகார் ஜானகி, ஏ. வி. எம். ராஜன், புஷ்பவல்லி நடித்த



# அல்லி

கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய சாரதாவை விட பன்மடங்கு சிறந்த சித்திரம்

---

விரைவில் எதிர்பாருங்கள்

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, சந்திரபாபு, தேவிகா நடித்த



# பந்தபாசம்

வருகிறது!

எம். ஜி. ஆர், சரோஜாதேவி, அசோகன் நடித்த

# குடும்பத் தலைவன்

---

# மாந்தர் போற்றும் 2-வது மாதம்!

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாசா (வெள்ளவத்தை)
நவா (கும்பனித் தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு)
வெம்பிளி (கண்டி)
ராஜ் (நீர்கொழும்பு)
மொடேர்ன் (பதுளை)
ஆகிய திரைகளில்

பெற்ற தாய் இருக்க குழந்தை மற்றவளின் மடியிலே மயங்கிக் கிடப்பானேன்?

அந்த மடியிலே அன்புப் புதையலை அக் குழந்தை காண்கிறது—

"அத்தை மடி மெத்தையடி ஆடி விளையாடம்மா"

— என்ற குரலும் எழுகிறது

அன்புக்கு உறைவிடம்:

# கற்பகம்

நடிகர்கள்:
ஜெமினி கணேசன், சாவித்திரி, கே. ஆர். விஜயா, ரங்காராவ், முத்துராமன், எம். ஆர். ராதா, ஷீலா, வி. கே. ராமசாமி



பாடல்கள்: வாலி— பின்னணி: சுசீலா
இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. எஸ். கோபால கிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் பெப்புருவரி மாதம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.